# திருக்கேதீச்சரம்



ஆ. கந்தையா, எம்.ஏ

உ

சிவமயம்

# திருக்கேதீச்சரம்

தி. செல்வமனோகரன்
கேணியடி
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

திரு. ஆ. கந்தையா, எம். ஏ.

[ கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு. ]

ஸ்ரீகாந்தா அச்சகம் — புத்தகசாலை

யாழ்ப்பாணம்.

உரிமை பதிவு ]

[ விலை ரூபா 3-00

முதல் பதிப்பு : 17—8—1968.

திருக்கேதீச்சர மகா கும்பாபிடேக வெளியீடு.

வெளியிட்டவர் : ஸ்ரீகாந்தா அச்சகம் — புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
அச்சிட்டவர்: மு. கணபதிப்பிள்ளை, ஸ்ரீ காந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

# பதிப்புரை

விபூதிதாரிகள் அனைவரும் திருக்கேதீச்சரம் என்னும் திருப்பதியின் சிறப்பியல்புகளையும் வரலாற்றையும் அறிந்துவாழ உதவவேண்டுமெனத் திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபையார் விரும்பினர். அவர்தம் விருப்பத்தை இயன்றளவு பூர்த்திசெய்ய விரும்பிய சைவத் தமிழறிஞரான திரு. ஆ. கந்தையா எம். ஏ. அவர்கள் இத்திருத்தலம்பற்றித் தாம் ஆராய்ந்தறிந்து திரட்டிய செம்பொருளைத் "திருக்கேதீச்சரம்" என்னும் நூலாகச் சைவ உலகிற்கு அளித்துள்ளார்.

திருக்கேதீச்சர புனருத்தாரண சபை, அகில இலங்கை இந்து மாமன்றம் என்பனவற்றின் துணைச்செயலாளராகப் பணியாற்றும் திரு. ஆ. கந்தையா அவர்கள் மலரும் மணமும், இந்துசமயம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். மலரும் மணமும் என்னும் நூல் இந்தியாவிலுள்ள வெங்கடேஸ்வரப் பல்கலைக்கழகத்தில் புகுமுக வகுப்பிற்குப் பாடநூலாகவும்; இலங்கைக் கல்விப்பகுதியாரின் கல்விப் பொதுத்தராதர (சாதாரண) த் தேர்வுக்குரிய பாடத்திட்டத்திற்கு அமைவாக எழுதிய இந்துசமயம், எனும் நூல் இலங்கையிலுள்ள கல்லூரிகளில் பாடபுத்தகமாகப் பயன்படுவதும் இவர்தம் நூல் எழுதும் சிறப்பை எடுத்துக் காட்டுவனவாகும்.

திரு. ஆ. கந்தையா அவர்கள் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியர் டாக்டர் மு. வ., அ. ச. ஞானசம்பந்தன், அ. மு. ப. போன்ற அறிஞர்களிடம் கல்வி கற்றவர். சென்னைப் பல்கலைக்கழகம் நடாத்திய பி. ஏ. (ஆனர்சு) தேர்வில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் படித்து முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர். அத்தேர்வில் சென்னை மாநிலத்திலேயே (பல்கலைக்கழகத் தேர்வில்) இரண்டாவது இடத்தைப் பெற்றவர். கல்லூரிப் பரிசு, பல்கலைக்கழகப் பரிசு போன்றவற்றைப் பெற்றுப் பலரின் பாராட்டுதலைப் பெற்றூர்.

இவரின் சைவசமயப் பணியைப் பாராட்டி மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்தார் இவருக்குச் சிவநெறித் தொண்டர் என்ற பட்டத்தை வழங்கியுள்ளனர். பல ஆண்டுகள் தொடர்ந்து திருக்கேதீச்சரத் திருப்பணி வேலைகளில் பங்குகொண்டுள்ள ஆசிரியர் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களின் அன்புக்கும் ஆதரவுக்குமுரியவராய்த் திருக்கேதீச்சரத் தொண்டுகளில் ஈடுபட்டு உழைத்தார். அப்பணியை இன்றும் தொடர்ந்து செய்துவருகின்றூர். பழம்பெரும் பதியான திருக்கேதீச்சரம்பற்றி இவர் எழுதிய இந்த வரலாற்று நூலை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நூலைச் சைவப்பெருமக்கள் உவந்தேற்பார்கள் என நம்புகிறேன்.

மு. கணபதிப்பிள்ளை

ஸ்ரீகாந்தா அச்சகம்,
யாழ்ப்பாணம்,
19-8-68.

# அணிந்துரை

திருக்கேதீச்சரம் சென்ற நூற்றுண்டின் இறுதிதொடங்கி வரலாற்றுசிரியர் கவனத்தையும் எழுத்தாளர் கவனத்தையும் பெற்றுள்ளது. எனினும் அவ்வாலயம் எப்போது கட்டப்பட்டது என்பதைப்பற்றியோ அதன் ஆதி வரலாற்றைப்பற்றியோ அதிகம் அறிந்துகொள்ள முடியவில்லை. கி. மு. 4 ஆம் நூற்றுண்டில் மாந்தோட்டையில் ( மகாதித்த என அக்காலத்தில் வழங்கியது ) வந்திறங்கிய விஜயன் இவ்வாலயத்திலே வழிபட்டதாகத் தொல்கதை கூறுகின்றது. திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய சைவ நாயன்மார் இருவரும் திருக்கேதீச்சர நாதனை துதித்துப் பாடிய பாசுரங்கள் வாயிலாக இவ்வாலயம் கி. பி. 7ஆம், 9 ஆம் நூற்றுண்டுகளில் மிக உன்னதமான நிலையிலே இருந்ததெனத் தெரிகின்றது. இதன்பின்னர் 16 ஆம் நூற்றுன்டின் முற்பகுதியில் வட இலங்கையை ஆக்கிரமித்த போர்த்துக்கீசர் இவ்வாலயத்தை அழித்த காலம்வரை இதன் வரலாறுபற்றி அதிகம் தெரியவில்லை.

இப்புராதன ஆலயத்தைத் திருப்பியமைப்பதுபற்றி 19 ஆம் நூற்றுண்டின் பிற்பகுதிவரை எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. பேரறிஞரும் பெருந்தொண்டருமான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களே இவ்வாலயப் புனரமைப்பில் முதன்முதல் ஈடுபட்டவர். அவர்கள் முயற்சி எடுத்தது 1873 ஆம் ஆண்டளவிலாகும். சில வருடங்களுள் பழைய ஆலயம் இருந்த இடமெனக் கருதப்பட்ட இடத்திலே ஒரு சிறு ஆலயம் கட்டப்பட்டது. 1903 ஆம் ஆண்டளவில் நகரத்தாரும் வேறு சில இந்துக்களும் சேர்ந்து மேலும் சில பகுதிகளைக் கட்டுவித்துத் திருத்தங்கள் செய்தார்கள். அக்காலம் தொடங்கி, 1950 ஆம் ஆண்டளவில் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையினரிடம் ஒப்படைக்கும்வரை இவ்வாலயம் நகரத்தார் பொறுப்பிலேயேயிருந்தது.

இவ்வாலயத்தின் வரலாறுபற்றி அரும்பெரும் விவரங்களையும், நாயன்மாருடைய பாசுரங்களிலேயுள்ள குறிப்புக்களையும், தற்சமயம் நடைபெறும் திருப்பணி விவரங்கள் உட்பட இன்னும் பல அம்சங்களையும் கொண்ட இந்த நூலை ஆக்கிய திரு. ஆ. கந்தையா அவர்கள் இந்துக்களின் பாராட்டுக்குரியவராவர். இலக்கியத்துறையிலே திரு. கந்தையா அவர்கள் பெற்றுள்ள ஆற்றலைத் தமிழுலகம் நன்கு அறியும். தமிழிலே அவர் வேறு பல நூல்களையும் ஆக்கியுள்ளார். அவை யாவும் மக்களது பாராட்டைப்பெற்றுள்ளன. அவர் இலங்கையிலும் இந்தியாவிலும் கல்விபயிலும் வாய்ப்பைப் பெற்றவர். இந்த நாட்டு இளைஞருக்குக் கல்விபுகட்டும் பணியிலே பல வருடங்களைக் கழித்தவர். திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையில் ஏறத்தாழ அதன் தொடக்கத்திலிருந்தே ஆர்வமும் ஈடுபாடுமுள்ள ஓர் உறுப்பினராக இருந்து அச்சபை எடுத்துக்கொண்ட பணிகள் யாவற்றிலும் ஈடுபட்டு அருந்தொண்டு புரிந்தவர்.

திருக்கேதீச்சரத்தைப்பற்றி இந்நூல் தரும் சுவையான விவரங்கள் காரணமாக மட்டுமன்றி, மிகவிரைவில் இவ்வாலயத்தை முன்பிருந்த மகோன்னத நிலைக்குக் கொண்டுவரவேண்டுமென்ற எண்ணம் இலங்கை, மலாயா, இந்தியா ஆகியஇடங்களிலுள்ள இந்துக்களுக்கு இன்று பெரிதும் ஏற்பட்டுள்ளமை காரணமாகவும் இந்துக்கள் யாவரும் இந்நூலை வரவேற்பர் என்பதிற் சந்தேகமில்லை.

ச. சோமசுந்தரம்
தலைவர்
திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபை.

பாக்கு அவனியு, கொழும்பு - 4,
11-8-68.

# முன்னுரை.

இலங்கையில் தேவாரம்பெற்ற சிவத்தலங்கள் இரண்டு இருக்கின்றன. ஒன்று திருக்கேதீச்சரம்; மற்றென்று கோணேஸ்வரம். இந்த இரண்டு தலங்களைப்பற்றிய சிறந்த நூல்கள் இதுவரை வெளிவராதமை பெருங்குறையாகும். காலத்துக்குக் காலம் அறிஞர்கள் எழுதிய கட்டுரைகள், கதைகள், வரலாற்றுச் சுருக்கங்கள் என்பன நமக்குக் கிடைக்கின்றனவேயன்றி விரிவும் விளக்கமும் உள்ள வரலாற்று நூல்கள் இன்றுவரை தோன்றவில்லை. இக்குறையைப் போக்கவேண்டியது சைவ வரலாற்று அறிஞர்களுடைய பொறுப்பாகும்.

திருக்கேதீச்சரத்தைப் பற்றிய நூல்கள் இரண்டு ஒன்று ஆங்கிலத்திலும் மற்றது தமிழிலும் முதன் முதலில் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களின் முயற்சியால் வெளிவந்தன. அவற்றைத் தொடர்ந்து வேறு நூல்கள் எதுவும் வெளிவரவில்லை. இந்நிலையில் திருக்கேதீச்சரத்தைப் பற்றிய ஒரு நூலை எழுதுமாறு திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபையார் என்னைப் பணித்தனர். அந்த அன்புப் பணியை ஏற்று இந்நூலை எழுதத் துணிந்தேன்.

சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களுடன் நெருங்கிப் பழகித் திருக்கேதீச்சரப் பணிகளில் ஈடுபட்டதாலும், திருக்கேதீச்சரம் பற்றி அன்னார் எழுதிய கட்டுரைகளையும் வரலாற்றுக் குறிப்புக்களையும் மொழிபெயர்க்கும் வாய்ப்பு ஏற்பட்டதாலும் திருக்கேதீச்சர வரலாற்றை யான் ஓரளவு அறிய உதவின. இன்னும் காலத்துக்குக் காலம் திருக்கேதீச்சர உற்சவங்களிற் கலந்து பணியாற்றத் திருவருள் கூட்டியதாலும், திருப்பணிச் சபையில் ஓர் உறுப்பினனாக இருந்து திருக்கேதீச்சர வைபவங்களிற் கலந்துகொள்வதாலும் திருக்கேதீச்சரம் பற்றிய பல வரலாறுகளை அறிந்துகொள்ள முடிந்தது. இத்தொடர்புகள் இந்நூலை ஓரளவு எழுதவும், தொகுக்கவும் உதவின. ஆனால் இந்நூல் பூரணமானதன்று. எனவே பூரணமான ஒரு வரலாற்று நூலை எழுதி வெளியிடத் திருப்பணிச் சபையார் முன்வருவார்களென எதிர்பார்க்கின்றேன்.

இந்நூலில் யான் எழுதிய கட்டுரைகளுடன் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் எழுதிய ஆங்கிலக் கட்டுரைகளின் தமிழாக்கமும், திருக்கேதீச்சரம் பற்றிய அறிஞர்களின் கட்டுரைகளும், கொக்குவில் புலவர், திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் யாத்த ஊஞ்சற் பாட்டும் இடம்பெறுகின்றன. ஈற்றில் திருக்கேதீச்சரப் பதிகங்களும் அவைகளுக்கு விளக்கமாக எழுதப்பெற்ற பதவுரை — பொழிப்புரை என்பனவும் அமைந்துள்ளன.

மேலும், இந்நூலுக்கு அணிந்துரை தந்துதவிய திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபைத் தலைவர், வழக்குரைஞர் திரு. எஸ். சோமசுந்தரம் அவர்களுக்கும், இந்நூலை எழுதித் தொகுக்குமாறு என்னை அடிக்கடி ஊக்குவித்த திருப்பணிச் சபைச் செயலாளர் திரு. வி. அல்லிராசா அவர்களுக்கும் பெரிதும் நன்றியுடையேன்.

இன்னும் இந்நூலைக் குறைந்த கால எல்லையில் திருக்கேதீச்சரம் மகாகும்பாபிடேக வெளியீடாக வெளியிட்டு உதவ முன்வந்த யாழ்ப்பாணம் ஸ்ரீ காந்தா அச்சக உரிமையாளர் திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் என் நெஞ்சு நிறைந்த நன்றி என்றும் உரியது.

இந்நூலாற் பெறப்படும் வருவாய் திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரணத்துக்குச் சேரும். எனவே இந்நூலைச் சைவ அன்பர்கள் வாங்கிப் படிப்பதால், திருக்கேதீச்சரத்தைப்பற்றி அறிவதோடு திருப்பணி நிதிக்கும் உதவுவார்களென்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே".

— திருமூலர்.

ஆ. கந்தையா

"நடனாலயம்"
4, 40 - வது ஒழுங்கை,
வெள்ளவத்தை,
11-8-68.

உ

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்

# "யாழ்ப்பாணச் சமயநிலை"

என்னும் பிரசுரத்தில்

திருக்கேதீச்சரத் திருப்பணி குறித்து

ஆங்கிரச — ஐப்பசிமீ (1872) எழுதி வெளியிட்டது.

"தேவாரம்பெற்ற சிவஸ்தலங்களுள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருக்கோணமலைக்குச் சம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றிருக்கின்றது. மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்துக்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருப் பதிகமொன்றும், சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன. இத் திருக்கேதீச்சரம் இவ்வடமாகாணத்தின் கணுள்ள மன்னாருக்கு அதிசமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்தி லுள்ளது. இத் திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக் கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப் படுகின்றனவே! நீங்கள் இந்த மகா ஸ்தலத்தைச்சிறிதும் நினையாத தென்னையோ! இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிதாக உபகரிக்கினும் எத்துணைப் பெருந் தொகைப் பொருள் சேர்ந்துவிடும்! இதை நீங்கள் எல்லீருஞ் சிந்தித்து இத் திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின், அருட்கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வர்".

திருச்சிற்றம்பலம்.

# பொருளடக்கம்


பதிப்புரை

அணிந்துரை

முன்னுரை

1. திருக்கேதீச்சர வரலாறு .. .. .. 1

2. திருக்கேதீச்சர ஆலயமும் மாந்தைத் துறைமுகமும் .. 24

3. தேவாரகாலத் திருக்கேதீச்சரம் .. .. .. 39

4. திருமுறைகளில் திருக்கேதீச்சரம் .. .. 44

5. நாகர்களும் திருக்கேதீச்சரமும் .. 51

6. திருக்கேதீச்சர மகிமை .. .. .. 56

7. திருக்கேதீச்சரத்திற் புதைபொருள் ஆராய்ச்சி .. 61

8. திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி .. .. 65

9. திருக்கேதீச்சரத்தில் மகாசிவராத்திரி .. .. 69

10. திருக்கேதீச்சரத்தில் தீர்த்தக்காவடி .. .. 73

11. திருக்கேதீச்சரத்தில் சிவானந்த குருகுலம் .. 77

12. திருக்கேதீச்சர நாதன் ஊஞ்சல் .. .. 85

13. திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகங்கள் .. 91

திருஞானசம்பந்தர் அருளிச் செய்த திருப்பதிகம் 93

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச் செய்த திருப்பதிகம் 104

# திருக்கேதீச்சர வரலாறு

தி. செல்வமனோகரன்

சமய குரவர்களாற் பாடப்பெற்ற சிவாலயங்கள் 274 ஆகும். அவற்றுள் இரண்டு ஆலயங்கள் இலங்கையில் உள்ளவை. ஒன்று திருக்கேதீச்சரம்; மற்றது திருக்கோணேச்சரம். திருக்கேதீச்சரத்தைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுரும், சுந்தரமூர்த்தி நாயனுரும் பாடிப்பரவியுள்ளனர். திருக்கேதீச்சரம் மன்னுரை அடுத்துள்ள மாதோட்டத்தில் அமைந்துள்ளது. திருக்கேதீச்சரத்தின் வரலாற்றை அறிந்துகொள்ளப் பல சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன. எனினும் பூரணமான வரலாற்றை நிர்ணயிக்கப் போதுமான சான்றுகள் இன்னும் கிடைக்கவேண்டியுள்ளன. இத்தலத்தின் வரலாற்றை அறிவதற்கு முன்பாக மாதோட்ட நகரைப்பற்றியும் பாலாவியைப் பற்றியும் அறிந்துகொள்ளவேண்டும்.

### மாதோட்டம்:

மாதோட்டப் பெயரைப்பற்றிப் பல கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. சிலர் மாதோட்டம் என்னுஞ் சொல்லின் பொருள் பெருந்துறை என்று கூறுவர். வேறு சிலர் "மாதோட்ட" என்னும் சிங்களச் சொல் 'மாதோட்டம்' என வழங்குகின்றது என்று கூறுவர். மகாதுவட்டா வென்னும் அரசன் பூசித்த இடமாதலின் 'மாதோட்டம்' என்று பெயர்பெறுவதாயிற்று எனத் தட்சிண கைலாச புராணங் கூறுகின்றது. மாதோட்டத்தின் சுருங்கிய பெயர் 'மாந்தை' என்பது. சங்க இலக்கியங்களில் ஒன்முன குறுந்தொகை குறிப்பிடும் மாந்தை மன்னுரிலுள்ள 'மாந்தையே' என்று சிலர் கூறுகின்றனர்.

மாதோட்டம் சிறந்த பெரிய துறைமுகமாகப் பண்டைக் காலத்தில் விளங்கிற்று என்பதற்குப் போதிய சான்றுகள் இருக்கின்றன. மூவேந்தர் செங்கோல் செலுத்திய காலத்திலும், இலங்கையை ஆண்ட விசயன் காலத்திலும் இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிற்

பெருமளவில் வாணிபம் நாடாத்திய பழங்குடிப் பெருமக்கள் அக்காலத்திற் பிறநாடுகளின் தொடர்புக்கு மாதோட்டத்தைத் துறைமுகமாகப் பயன்படுத்தியுள்ளனரென்பது தெரியவருகின்றது. கி. மு. 6 ஆம் நூற்றுண்டில் ஈழத்தின் முதல் அரசன், பாண்டிய இளவரசியைத் திருமணஞ் செய்து வந்திறங்கிய துறைமுகம் மாதோட்டமே என்று வரலாற்று ஆசிரியர்கள் எடுத்துக் கூறுகின்றனர். கிரேக்கர், சீனர், உரோமர், அராபியர் ஆகியோர் அவ்வப்போது கூறியவற்றிலிருந்து மாதோட்டத்தைப் பற்றிய வரலாறுகளை நாம் ஓர் அளவு அறிந்துகொள்ள முடிகின்றது. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர், சுந்தரமூர்த்தி நாயனுர் ஆகியோர் பாடிய தேவாரங்கள் மாதோட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

இனி ' மகாவம்சம் ', ' இராசாவழி ' என்பனவும் மாதோட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுவது இங்கு நோக்கற்பாலதாகும். விசயனுடைய இரண்டாம் மனைவியாகிய பாண்டிய இளவரசியும் அவளின் பரிவாரங்களும் இலங்கையில் இறங்கிய இடம் ' மாதீர்த்த ' எனப் பெயர்பெறும் ' மாதோட்டம் ' என மகாவம்சம் கூறுகின்றது. மேலும், விசயனுடைய காலத்திலே தமிழருடைய படையொன்று மாதோட்டத்தில் வந்து இறங்கியதாக மகாவம்சம் கூறுகின்றது. எல்லாளன் துட்ட கைமுனுவுடன் போர்செய்ய நேர்ந்தபோது அவனுடைய சகோதரனுன ' வல்லூகன் ' என்பவன் 3000 தமிழ்வீரர்களுடன் மாதோட்டத்தில் வந்து இறங்கினுன் எனவும், தூத்துக்குடியிலிருந்து கொணர்ந்த புத்த தந்தம் மாதோட்டத்தில் இறக்கப்பட்டதெனவும் இராசாவழி என்னும் நூல் குறிப்பிடுகின்றது. எனவே மேலே கூறியவைகளைக்கொண்டு மாதோட்டம் சிறந்த பெரிய துறைமுகமாக அன்று விளங்கிற்று என்பது நன்கு தெரியவருகின்றது.

மாதோட்டம் ஒரு வாணிபத்துறையாக விளங்கியதென்பதற்கு வேறு பல ஆதாரங்களும் இருக்கின்றன. டபிள்யூ. எஸ். போக்கு என்பவர் அராபியர்கள் வாணிபத்தின் பொருட்டு மாதோட்டத்தில் வந்து இறங்கினுர்கள் என்று குறிப்பிட்டுள்ளார். இப்போது திருக்கேதீச்சரத்தில் வடமேற்குப் பகுதிகளிற் '' பெருகு '' என்னும்

மரங்கள் பெருந்தொகையாகக் காணப்படுகின்றன. இம்மரங்களை இலங்கையின் வேறு இடங்களிற் காணமுடியாது. ஆகவே, இம்மரங்கள் மாதோட்டத்தில் வந்து இறங்கிய அராபியர்களுடைய ஒட்டகங்களுக்கு உணவாக அராபியர்களாற் கொணர்ந்து உண்டாக்கப்பெற்றவை என்பது டபிள்யூ. எஸ். போக்கு என்பவருடைய குறிப்பினால் அறியக்கிடக்கின்றது.

மாதோட்டத்திற் கண்டெடுக்கப்பெற்றுள்ள நாணயங்களைக் கொண்டும் மாதோட்டம் ஒரு பெரிய துறைமுகமாக அன்று விளங்கிற்று என்பது தெரியவருகின்றது. உரோமரதும் கிரேக்கரதும் நாணயங்கள் மாதோட்டத்திற் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவைகொண்டு மாதோட்டம் வியாபாரத்துக்கு முக்கியமான துறைமுகமாக விளங்கிற்று என்பதும், கிரேக்க – உரோம நாணயங்கள் இங்கு நடைபெற்ற வியாபாரத்தில் வழக்கிலிருந்தன என்பதும் தெரியவருகின்றன. இவ்வுண்மையைப் பிரிதா என்னும் பழைய வரலாற்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். மேலும் மாதோட்டத்தில் யாழ்ப்பாணத்து அரசர்களுடைய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை கொண்டும் மாதோட்டம் அன்று பெரிய துறைமுகமாக விளங்கிற்று என்பது நன்கு தெளிவாகின்றது.

### தேவார காலம் :

தேவார காலத்தில் மாதோட்டம் மிகச் சிறந்த பெரிய துறைமுகமாக விளங்கிற்று என்பதற்குப் போதிய சான்றுகள் இருக்கின்றன. சுந்தரமூர்த்தி நாயனார் ‘வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்’ என்று பாடியுள்ளமைகொண்டு மாதோட்டம் பெரிய துறைமுகமாக விளங்கிற்று என்பதும், மாதோட்டத் துறைமுகக் கடலிலே தோணிகளும், கப்பல்களும் பெருந்தொகையாகக் காணப்பட்டன என்பதும் நன்கு தெளிவாகின்றன. மேலும், தாம் பாடியருளிய திருக்கேதீச்சரப் பதிகத் தேவாரம் ஒவ்வொன்றிலும் ‘மாதோட்டம்’ என்ற பெயரைக் குறிப்பிட்டுள்ளமை கருத்திற் கொள்ளத்தக்கதாகும். இனித் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச்செய்த திருக்கேதீச்சரத் தேவாரப் பதிகம் கொண்டும் மாதோட்டத்தைப்

பற்றி அறியமுடிகின்றது. தாம் பாடிய திருக்கேதீச்சரப் பதிகத்தின் தேவாரங்களில் ஞானசம்பந்தப்பெருமான் 'மாதோட்டம்' என்ற பெயரைக் குறிப்பிட்டுள்ளதை நோக்கலாம். மாதோட்டம், பாலாவி என்பன இந்நூலில் இன்னோர் இடத்தில் 'தேவாரகாலத் திருக்கேதீச்சரம்' என்னும் கட்டுரையில் விளக்கப்பெற்றுள்ளதைக் காண்க.

காந்தக்கோட்டை :

மாந்தையிலே 'காந்தக்கோட்டை' ஒன்று இருந்தது என்பது பல நூல்களால் அறியக்கிடக்கின்றது. 'காந்தமுறுந் தடமதிலும் கழுமலர்ப் பொழிலுமுற்ற மாந்தை நகர்' என்று மாந்தைப் பள்ளியிற் கூறப்பட்டிருக்கிறது. இதனுல் மாந்தை நகர் தடமதில்களையும், பொழில்களையும் உடையதாய் விளங்கிற்று என்பது தெரியவருகின்றது. 'கயூங் கிசாங்' என்னும் சீனதேச அறிஞரும் மாதோட்டத்தில் இருந்த காந்தக்கோட்டையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 'பெரிப்புளுசு' என்னும் வரலாற்று ஆசிரியன் குறிப்பிடுவதும் நோக்கற்பாலது. இவர் இக்கோட்டையைச் ''சோப்பட்டினம்'' என்று குறிப்பிடுகின்ருர். இது மதில் அல்லது எயில் விசேடம்பெற்று அரணக்கப்பட்ட கோட்டையை உடைய பட்டினம் எனக் கொள்வர் வரலாற்று ஆராய்ச்சி அறிஞர் முதலியார் இராசநாயகம் அவர்கள்.

இதுவரை கூறியவற்ருல் நாம் பல உண்மைகளைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. முதலாவதாக மாதோட்டம் இலங்கைத் தீவின் தலைப்பட்டினமாகவும், ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கு ஏற்ற துறைமுகமாகவும் விளங்கிற்று. அடுத்தபடியாகக் கீழைத் தேச மேலைத்தேசக் கப்பல்கள் வந்து தங்கிச்செல்லும் துறைமுகமாகத் திகழ்ந்தது என்பதும் புலனுகின்றது. மேலும் பலதேசத்து வர்த்தகர்கள் வந்து இறங்கிப் பண்டமாற்றுச் செய்யும் இடமாக மாதோட்டம் விளங்கிற்று என்பதும் தெரியவருகின்றது.

பாலாவி :

மாதோட்டத்திலுள்ள பாலாவியின் சிறப்பினையும், பண்பினையும் சுந்தரமூர்த்தி நாயனர் தமது திருக்கேதீச்சரப் பதிகத்திற்

குறிப்பிட்டுள்ளார். சுந்தரருடைய திருக்கேதீச்சரத் தேவாரம் ஒவ்வொன்றிலும் 'பாலாவியின் கரைமேல்' என்னும் தொடர் எடுத்தாளப்பட்டுள்ளது. மேலும் திருஞானசம்பந்தர் 'மாதோட்டத்தர் மன்னு பாலாவியின் கரையிற் கேதீச்சரம்' எனக் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்றினல் பாலாவி சிறந்த தீர்த்தமாகத் திகழ்ந்தது என்பது தெளிவாகின்றது.

சுந்தரமூர்த்திநாயனர்,

'பத்தாகிய தொண்டர் தொழு பாலாவி' என்றும்,

'பரியதிரை எறியவரு பாலாவி' என்றும்,

'பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவி' என்றும் தமது தேவாரங்களிற் குறிப்பிட்டுள்ளமை நோக்கற்பாலது. எனவே ''தொலமி'', ''பிளினி'' முதலியோர் குறிப்பிட்ட இடம் பாலாவி மண்டலம் எனப்படும் திருக்கேதீச்சர நகரத்தையே குறிக்குமெனக் கொள்ளல் மிகப் பொருத்தமாகும்.

## புராண வரலாறு :

திருக்கேதீச்சரத் தலத்தைப்பற்றிய புராணம் ஒன்று இருந்ததாகவும், அது அச்சிடப்படாமல் அழிந்துவிட்டதாகவும் காலஞ்சென்ற சேர். பொன். இராமநாதன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். மேலும், தட்சிணகைலாய புராணத்திலே திருக்கேதீச்சரத்தின் வரலாறு சுருக்கிக் கூறப்பெற்றுள்ளது. இப்புராண வரலாற்றைக் கீழே காண்க.

'முன்னெருபோது வாயுபகவானுக்கும் ஆதிசேடனுக்கும் இடையே பெரிய வாக்குவாதம் ஏற்பட்டது. அவ்விருவர்களுக்குமிடையே உண்டான வாக்குவாதம் இறுதியிற் பெரிய போராக மாறியது. போர் தொடர்ந்து நடைபெற்றது. ஆதிசேடன் மகாமேரு மலைக்குள் மறைந்துகொண்டான். எனவே வாயுபகவான் மகாமேரு மலையைத் தாக்கினன். அம்மலையின் மூன்று சிகரங்களையும் தூக்கிச்சென்றன். அவ்வாறு தூக்கிச்சென்ற சிகரங்களுள் ஒன்றைத் திருக்கேதீச்சரத்தில் வைத்துச் சென்றனன்'.

இராமர் பூசித்த தலம் இராமேசுவரம் என்றாற்போல, கேது பூசித்த தலம் கேதீச்சரம் என்றாயிற்று. இத்தலத்திலுள்ள சுவாமி பெயர் கேதீச்வரர் எனவும், தேவிபெயர் கௌரி அம்மை எனவும் கூறுவர். கேது பூசித்த வரலாறு புராணங்களிற் கூறப்பட்டுள்ளது. 'திருப்பாற்கடலினின்று எழுந்த அமிர்தத்தைத் திருமால் தேவர்களுக்கு அளித்தார். அவ்வாறு அமிர்தத்தைத் தேவர்களுக்கு அளிக்கும்போது, அவுணன் ஒருவன், மாறுவேடம் பூண்டு சூரிய, சந்திரர்களுக்கு இடையே மறைந்திருந்து அமிர்தத்தில் ஒருபகுதியைத் தானும் பெற்றான். இதனால் அந்த அவுணன், திருமாலின் சாபத்துக்கு ஆளானான். அவனுடைய உடல் இரண்டு கூறானது. ஒரு கூறு 'இராகு' ஆயிற்று; மற்றக் கூறு 'கேது' ஆயிற்று. இந்நிலையில் துன்பமடைந்த அவுணன் பெருமானை வழிபட்டான். அவ்வாறு வழிபட்டுத் தன்னைக் காட்டிக்கொடுத்த சந்திர சூரியரை இடையிடையே விழுங்கி அவர்களைத் துன்பப்படுத்தும் வரத்தை அந்த அவுணன் பெற்றனன்'. இப்புராண வரலாற்றைத் தழுவியே கதிரமலைப்பள்ளுடையாரும்,

'செய்ய கேது தலையற்ற அந்நாள்
திருந்தும் பூசைகள் செய்து முடிப்போன்'

எனக் கூறியிருக்கின்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த 'அங்கம் மொழியன்னார்' என்னும் தேவாரத்திலும் இவ்வரலாறே குறிக்கப்பட்டுள்ளதெனவும், அதற்கேற்ப அத்தேவாரத்தின் முதலாம் அடியைச் சிறிது மாற்றிப் பாடபேதமாகக்கொண்டு பொருள்கொள்ளலே முறையெனவும் 'கதிரமலைப் பள்ளு' என்னும் நூலைப் பதிப்பித்து உதவிய ஸ்ரீமான் வ. குமாரசுவாமிப்புலவர் கருதுகின்றார். அவர் 'அங்கமொழி யன்னார் அமரர் தொழுதேத்த' என்னும் அடியை 'அங்கம் ஒழி அந்நாள் அரவமரர் தொழுதேத்த' என மாற்றி இதற்குப் பின்வருமாறு பொருள் கூறியுள்ளார். 'அங்கம் ஒழி அந்நாள் — திருமாலாற் புடைக்கப்பட்டு உடம்பு இருகூறாகிய அந்நாளில், அரவு அமரர் தொழுது ஏத்த — உடல் இருகூறு பட்டும் சாவா மருந்து உண்டதனால், ஒருகூறு பாம்பின் உடலும் மனிதத் தலையும் பெற்றது. மற்றக்கூறு பாம்பின் தலையும் மனித உடலும் பெற்றது. அவை

சாவா மருந்தை உண்டதினல் அரவங்களாகவும், அமரர்களாகவும் விளங்கிய இராகு கேதுக்கள் தவஞ்செய்து தொழுது நிற்க, அரவமரர் = அரவு + அமரர் அரவின் வடிவந் தாங்கி அமரராய் நின்ற அவுணன்'.

இனி, 'அங்கம் மொழி யமரர் தொழுதேத்த' என்னும் முதலடிக்கு, 'வேதங்களையறிந்த பிராமணர்களும் தேவர்களும் வணங்கித் துதிக்க' எனப் பொருள் எழுதி, 'அங்கத்தை ஒழித்த அத்தன்மையயுய மன்மதனும் தேவரும் வணங்க எனப் பொருள் கொண்டு, மன்மதன் முற்காலத்திற் திருக்கேதீச்சரத்திற் பூசித்தான் என்பாரும் உளர்' என இதற்கு விசேடவுரை ஒன்றனையும், வித்துவசிரோன்மணி ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்.

## நாகர்களும் திருக்கேதீச்சரமும் :

நாகர்களுக்கும் திருக்கேதீச்சரத்திற்குமுள்ள தொடர்பை இந்நூலில் 'நாகர்களும் திருக்கேதீச்சரமும்' என்ற கட்டுரையில் விளக்கமாகக் காண்க. நாகர்கள் மாதோட்டத்தில் வாழ்ந்தார்களென்ற உண்மையை வரலாற்ருசிரியர்கள் வலியுறுத்தியுள்ளனர். தட்சிணகயிலாய புராணமும் நாகர்களைப்பற்றிக் குறிப்பிடுகின்றது. துவட்டா என்பவன் திருக்கேதீச்சரத்திற்கு வந்தான். பாலாவியிலே தீர்த்தமாடிப் புத்திரப்பேறு குறித்துக் கேதீச்சரப்பெருமானை வணங்கினன். அப்போது கேதீச்சரப்பெருமான் தோன்றி அத்தலம் மகா துவட்டாபுரம் என வழங்கப்படும் எனவும், அவனுக்கு 'விசுவகர்மா' என்னும் புத்திரன் பிறப்பான் என்றும் அருளிச்செய்தார். இப்புராண வரலாறு நாகர்கள் – கம்மாளர்கள் என்னும் கொள்கையால் எழுந்தது போலும். இத்தலத்தில் அகத்திய முனிவர் வழிபட்டார் எனவும் புராணங்கள் கூறுகின்றன.

## அழிந்தமைக்குக் காரணம் :

பழமையும் பெருமையும் வாய்ந்த திருக்கேதீச்சரம் எவ்வாறு அழிந்ததென்பது ஆராய்ச்சிக்குரியதாகும். இத்தலம் வெள்ளப் பெருக்கினல் அழிந்ததெனச் சிலர் கூறுவர். வேறு சிலர் இந்நாட்டைப்

பிடித்த வெளிநாட்டார் இத்தலத்தை அழித்தனர் என்பர். இத் தலம் அழிந்தமைக்கு வேறு சிலர் இன்னெரு கதையையும் கூறுவர். இக்கதை பின்வருமாறு :–

'வடநாட்டு முனிவர் ஒருவர் இவ்விடத்திற் பூசிக்கும்பொழுது தமது வழக்கப்படியே சூரியபகவானை வரவழைத்தார். சூரியபகவான் காட்சிகொடுத்து 'இந்நாட்டுக்கு இயையாக் கிரியைகளைச் செய்து எம்மை வரவழைத்தமையால் நீயும் நீசனுவாய், இத்தலமும் அழிந்துபோகும் எனச் சபித்தான். உடனே மண்மாரி பொழிந்து இத்தலம் அழிந்தது'.

இத்தலம் மேட்டு நிலத்தில் இருக்கின்றமை குறித்து இக்கதை எழுந்திருக்கலாம். இல்லையேல் கருங்கற்கள் முதலியன புதைந்து மண்ணுல் மூடப்பட்டுக் கிடந்தமையாலும் இக்கதை தோன்றியிருக்கலாம்.

இத்தலம் ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன்னரே அழிந்திருத்தல் வேண்டுமென்பது ஆராய்ச்சியாளரின் முடிவு. இத்தலம் சீரழிந்துகிடந்த நிலைமையைப்பற்றி 'டி கொற்றூே' என்னும் சரித்திர ஆசிரியர் குறிப்பிட்டிருக்கின்றூர். வேலையாட்கள் நிலத்தைக் கிண்டிப் பார்த்தபொழுது யவன நாணயங்களும், மிகவும் வேலைப்பாடமைந்த சங்கிலி ஒன்றும் எடுக்கப்பட்டன என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவில் உள்ள எந்தக் கம்மாளனும் இத்தகைய சங்கிலியைச் செய்யமுடியாது என அவர் கூறியுள்ளார்.

மாந்தைப்பகுதி அரசாங்க அதிபராயிருந்த 'துவைனம் துரை' அவர்களின் அறிக்கையிலே திருக்கேதீச்சரத்தைப் பற்றிய குறிப்பொன்று இடம்பெறுகின்றது. அவற்றுள் முக்கியமான குறிப்பைக் கீழே தருகின்றூேம்.

'திருக்கேதீச்சரம் இராமேசுவரத்தைப் போலவே பெரிதாக இருந்தது. இப்போது இராமேசுவரத்துக்குச் சென்று வணங்குவது போல அக்காலத்தில் இந்தியாவிற் பல திசைகளிலுமுள்ள சைவர்கள் திருக்கேதீச்சரத்தை வழிபட்டு வந்தார்கள். போர்த்துக்கேயர்கள்


இத்தலத்தை இடித்து இக்கற்களைக்கொண்டே மாந்தையிலுள்ள கிறித்தவக் கோயிலைக் கட்டினுர்களெனக் கூறுவர்.

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலந் தொடங்கி அநேக ஆண்டுகளாக இங்கிருந்த சைவப் பெருமக்கள் இந்தக் கோயிலைப் புதுப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள் எனக் கருத இடமில்லை. மணல்மேடாகக் கிடந்த இத்தலம் எருக்கும், முட்செடிகளும் வளர்ந்து நரிகளும் புலிகளும் வாழும் காடாயிற்று. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இவ்விடத்திலே குழி அகழ்ந்து பார்ப்பார்களேயானுல் அரும்பொருள்களைப் பெறுவார்களென்பதற்கு ஐயமேயில்லை.

## நாவலர் பணி :

போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலங்களிலே திருக்கேதீச்சரம், சைவப்பெருமக்களின் சிந்தனையில் இருந்ததேயன்றிக் கற்கோயிலாக அமையவில்லை. ஆங்கிலேயர் காலத்திலே சைவமக்கள் சைவ உணர்ச்சியால் உந்தப்பெற்று இவ்வாலயத்தைப் புதுப்பிக்க ஆர்வமுற்றனர். அவ்வப்போது தோன்றிய சைவப் பெரியார்கள் திருக்கேதீச்சரப் பதிகங்களை மக்களுக்கு நினைவுறுத்தி வந்தனர். பின்பு ஆறுமுகநாவலர் காலத்திற் சைவமணங் கமழ்ந்து பரவியது. அந்நாளில் நாவலர்பெருமான் சமயகுரவர்களின் தேவார – திருவாசகங்களின் மூலம் திருக்கேதீச்சரத்தையும், அதன் பூர்வீகப் பெருமைகளையும் விளக்கிக்கூறினுர். அவர் 'திருக்கேதீச்சரம் ஒரு தேன் பொந்து; அதைச் சென்றடையுங்கள்' என்று நயம்படக் கூறி உறங்கிக் கிடந்த சைவமக்களுக்கு ஊக்கங் கொடுத்தார். 'யாழ்ப்பாணச் சமய நிலை' என்னும் பிரசுரத்தில் ஆங்கீரச ஆண்டு ஐப்பசி மாதம் (1872) பின்வருமாறு எழுதி வெளியிட்டார்.

'தேவாரம் பெற்ற சிவஸ்தலங்கள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்ருகிய திருக்கோணமலைக்குச் சம்பந்தமூர்த்திநாயனுர் திருப்பதிகமொன்றிருக்கின்றது. மற்றென்ருகிய திருக்கேதீச்சரத்துக்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் திருப்பதிகமொன்றுஞ் சுந்தரமூர்த்திநாயனுர் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன. இத் திருக்கேதீச்சரம் இவ்வடமாகாணத்தின் கண்ணுள்ள


PLATE No 2
PROPOSED TEMPLE IN TWO PRAKARAS FOR SRI GOURI AMBAL SAMETA TIRUKETHEESHVARANATH
TIRUKETHEESHVARAM CEYLON.
SCALE: 1 INCH = 10 FEET.
PLAN AT BASEMENT LEVEL (SHOWING THE DETAILS OF THE PROPOSED IMMEDIATE CONSTRUCTION)
M. SELLAKKANNU STHAPATI,
M. VAIDHYANATHA STHAPATI,
CONSULTING & PRACTISING ARCHITECTS
KARAIKUDI, S. INDIA

மன்னுருக்கு அதிசமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்திலுள்ளது. இத் திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக் கிடக்கின்றதே; புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே. நீங்கள் இந்த மகாஸ்தலத்தைச் சிறிதும் நினையாததென்னையோ! இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உப கரிக்கினும் எத்தனைப் பெருந்தொகைப் பொருள் சேர்ந்துவிடும்? இதை நீங்கள் எல்லீருஞ் சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்று வீர்களாயின் அருட்கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிர கஞ் செய்வார்'.

மேலும் இக்கோயிலிருந்த நிலத்தைச் சைவர்களுக்கு விலைக்குத் தருமாறு அரசாங்கத்திற்கு நாவலர் விண்ணப்பித்தார். ஆனுல் இக்காலத்திலிருந்த அரசாங்க அதிபர் யாது காரணம்பற்றியோ விலைக்குக் கொடுக்க விரும்பினுரல்லர். எனினும் சைவந் தழைக்கத் தோன்றிய நாவலரவர்கள் விதைத்த வித்தானது இலங்கையில் வாழ்ந்த சைவர்களின் உள்ளத்தில் வேரூன்றியது. இதன்பயனுக இலங் கையில் வாழ்ந்த சைவர்களும், இலங்கைக்கு வாணிபத்தின்பொருட்டு வந்த நாட்டுக்கோட்டை நகரத்தாரும் அடிக்கடி இந்த நிலத்துக்கு விண்ணப்பித்துக்கொண்டே இருந்தார்கள். 1890 ஆம் ஆண்டில் மன்னுரிலிருந்த கத்தோலிக்கக் குருவானவர் இந்நிலத்தைச் சைவ மக்களுக்கு விற்கக்கூடாதெனவும், அவ்வண்ணம் விற்பதனுல் கத் தோலிக்கர்களுக்குப் பெரும் இடையூருக முடியுமெனவும் முறை யிட்டுத் தடுக்க முயன்றும் அவர் முயற்சி கைகூடவில்லை.

திரு. குமாரசுவாமி அவர்கள் திரு. எஸ். நாகலிங்கம் அவர்க ளுக்கு 15-11-1893 இல் எழுதிய கடிதத்தில் திருக்கேதீச்சரத்தைப் பற்றிய பகுதியொன்று வருகின்றது. அதன் தமிழாக்கத்தைக் கீழே காண்க.

'நான் நேற்றைய தினம் தேசாதிபதி அவர்களைச் சந்தித்து உரை யாடியபோது திருக்கேதீச்சரக் காணி நமக்குரியதென்பதை ஆதாரத் துடன் எடுத்துக் கூறினேன். அவர் தம் பதவிக்காலத்தில் எந்தச் சமயத்தாருக்கும் காணிகளை இலவசமானியமாக அளிக்கப்போவ

தில்லை எனக் கூறினர். அது மாத்திரமன்று. அதே காணியில் உரோமன் கத்தோலிக்கரும் உரிமை கொண்டாடுகின்றனரெனவும் அவர் கூறினர். ஆனல் இந்துக்களே அந்நிலத்தை வாங்கக்கூடியவர்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். ஆகவே, நீங்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு சபை கூட்டித் தாமதமின்றி நன்கொடை திரட்டுவதே இப்போது செய்யவேண்டியது. என்னைப் பொறுத்தவரையில் யான் எனது நன்கொடையை மகிழ்ச்சியுடன் உதவச் சித்தமாயிருக்கிறேன். ஆனல் உங்களுடைய கல்லூரியின் நிமித்தம், உங்கள் பிரதிநிதிகள் இவ்விடம் ஏற்கனவே நிதிதிரட்ட வந்திருக்கின்றமையால் கொழும்பிலுள்ள இந்துக்களிடமிருந்து நீங்கள் எவ்வித பண உதவியும் எதிர்பார்க்க முடியாதே என அஞ்சுகின்றேன்'.

இதைத் தொடர்ந்து சைவர்கள் ஒரு சபையை ஏற்படுத்தி அச்சபையின் மூலம் கோயிலிருந்த காணியை வாங்க முயன்றனர்.

இறுதியில் 1893 இல் இந்நிலம் பிரசித்த ஏலத்தில் விற்கப்பட்டது. அப்போது திரு. ஆர். ஏ. ஏ. பழனியப்பாச் செட்டியாரவர்கள் 3100 ரூபாவுக்கு இந்நிலத்தை வாங்கினர்கள். அன்று தொடக்கம் பல புனருத்தாரண வேலைகள் ஆரம்பமாயின. பழைய கற்பக்கிருகத் தானத்தைக் காண்டற்காக அதிகப் பணஞ்செலவிட்டு அகழ்ந்து பார்த்தனர். ஆனல் அதனைக் கண்டுகொள்ள முடியவில்லை. நீண்ட சதுரக் கருங்கற்களும், செங்கட்டிகளும், சிற்சில எழுத்துக்கள் பதிந்த கற்களுமே வெளிவந்தன. பழைய இலிங்கமும் நந்தியும் பிள்ளையாரும் வெளிக்கிளம்பின. வேலையாட்கள் கவலையீனத்தாற் போலும் மகாலிங்கம் சிறிது பழுதடைய நேரிட்டது. இம் மகாலிங்கம் இப்பொழுது கோவிலின் மேற்குப் பிரகாரத்தில் பிரதிஷ்டை செய்யப்பெற்று வழிபாடு நடைபெற்று வருகின்றது.

### பசுபதிச் செட்டியார் :

விஜய வருடம் தைமாதம் 1894-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து திரு. சி. த. மு. பசுபதிச் செட்டியாரும் சில மேசன்மாரும் வேறு சில கூலியாட்களும் திருக்கேதீச்சரம் சென்று வாஸ்து சாந்தி,

கிராமசாந்தி முதலிய கிரியைகள் செய்து, காடுவெட்டி ஆராய்ந்த போது அகப்பட்ட கிணறு, இறைத்துச் சேறு அள்ளிய பிறகு நல்ல தீர்த்தமுடையதாய் இருந்தது. திருக்கேதீச்சரத்தினது அத்திபாரத் தானம் ஒருவாறு ஆராய்வின் பயனாக அகப்பட்டது. சுற்றுப் பிர திட்டா இலிங்கமும் ஒன்று அகப்பட்டது. ஆலயம் இருந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டு அதிலுள்ள மண்மேட்டை எடுத்தபோது இத் தலத்துத் தென்மேற்குப் புறத் திருமதில்கள் காணப்பட்டன. அம் மதில்கள் அப்பொழுதிருந்த மண்மேட்டில் ஏழு முழத்துக்குக் கீழே இருந்தன. ஆனால் அம் மண்மேட்டின் நிலமட்டத்திலிருந்து பதி னைந்து முழ உயரத்திலே அம்மதில்கள் இருந்தன. இவை அடியிற் கருங்கல்லாலும் கட்டப்பட்டிருந்தன. விஜய வருடம் தைமாதம் முதல் (1894) ஜய வருடம் ஆவணிமாதம் வரை பரிசோதனையில் மாத்திரம் எண்ணாயிரத்துக்கு மேலான ரூபா செலவாயிற்று. இத் தலத்திலே கொண்ட அன்பு மிகுதியினால் திரு. பசுபதிச் செட்டியார் தமது ஆன்மார்த்த சிவபூசையிலே இத்தலத்து மூர்த்தியாகிய கௌரி நாயகி அம்பாள்சமேத கேதீச்சரநாதரை வாழ்நாள் முழுவதும் வழி பட்டு வந்தார்.

## நகரத்தார் பணி :

இந்தியா, இலங்கை, மலாயா முதலாம் தேசங்களிலே புராண, இதிகாசச் சிறப்புடைய இடங்களிற் சிவாலயம் எழுப்பி நித்திய பூசை கள் முதலாம் கிரியைகள் நடாத்தி வழிபட்டு வந்த செட்டியார்கள் (நகரத்தார்) தமது பாரம்பரியப்படி இத் திருக்கேதீச்சரத்திலும் பூசைவிழா முதலியன நடாத்திப் பரிபாலித்து வந்தார்கள். ஆலயத் தைப் புனருத்தாரணஞ் செய்யப் பெருந்தொகைப் பணம் செலவிட்டு நகரத்தார் செய்த பணிகள் பாராட்டுதற்குரியன. சைவப் பற்றும், ஆலயத்திருப்பணி ஆர்வமும்கொண்ட நகரத்தார் கேதீச்சரப் புனருத் தாரண வேலைகளுக்குச் செய்த பணிகளைச் சைவ உலகம் என்றும் மறந்துவிடவே முடியாது.

## திருப்பணிச்சபையின் தோற்றம் :

பின்னர் 30 ஆண்டுகளுக்கு முன்னர் ஈழத்துச் சிவனடியார்கள் பலர்கூடி முன்பிருந்த சிறு ஆலயத்தைப் புனருத்தாரணஞ் செய்ய

முயன்றனர். நகரத்தாருடைய ஒத்துழைப்புடனும், இலங்கை, இந்தியா, மலாயா நாடுகளிலுள்ள சைவமக்களின் ஆதரவுடனும் ஈழத்துச் சிவனடியார்கள் குழு ஒன்று மலர்ந்தது. அஃது திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையாக உருப்பெற்றது. இங்ஙனம் விரிவடைந்த சபை ஆலய பரிபாலனத்திற்குச் சில பணிபுரிந்து வருவதுடன், அங்கு கோயில் கொண்டருளியிருக்கும் இறைவனுக்குக் கற்கோயில் கட்டுவதற்கு முன்வந்தது. அதன் பயனாய் 60 வருடங்களுக்கு முன்பு கட்டப்பெற்றிருந்த சிவ ஆலயத்தை 1952 ஆம் ஆண்டு ஆவணித் திங்களிற் பழுதுபார்த்துப் புதுப்பிக்கும் பணி ஆரம்பமானது. சபையின் இந்த முயற்சிக்கு நிதி தந்தும், ஆலோசனை கூறியும், ஊக்கமளித்தும் பணியாற்றிய மதுரைத் திருஞானசம்பந்தமடம் சந்நிதானம் இளவரசு திருப்பெருந்திரு தவயோகி சோமசுந்தரதேசிக பரமாச்சாரிய சுவாமிக்குச் சபையாரின் நன்றி என்றும் உரியது. இவ்வாறு பல சைவப்பெரியார்களின் நிதி உதவிகொண்டும் மெய்யடியார்களின் உடலுதவி கொண்டும் 'ஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருமடம்' என்னும் பெயரில் ஒரு திருமடத்தைத் திருக்கேதீச்சரத்தில் கட்டினர்.

## திருப்பணி வேலை ஆரம்பம் :

ஆலய அமைப்பை நிர்ணயிக்கத் திருக்கோயில் அமைப்பில் நிபுணத்துவமுள்ள பல சைவப்பெரியார்களுடைய ஆலோசனைகள் கோரப்பட்டன. முக்கியமாக இரு பெரியார்களை இங்கு நாம் குறிப்பிட வேண்டும். ஒருவர், சித்தாந்த சரபம் காசிவாசி அச்சுவேலி ஸ்ரீலஸ்ரீ சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் ஆவர். மற்றவர், ஆரம்பகாலத் தலைவராய் இருந்த திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் ஆவர். இப்பெரியார்களின் மேற்பார்வையில், ஆகம விதிகளுக்கமையத் திருவாளர்கள் வி. எம். நரசிம்மன் அவர்களும், ம. செல்லக்கண்ணு ஸ்தபதியார் அவர்களும், ம. வைத்தியநாத ஸ்தபதியார் அவர்களும் ஆலய அமைப்புப் படத்தை வரைந்து உதவினார்கள். திரு. ம. செல்லக்கண்ணு ஸ்தபதியாருடன் இன்னும் ஐந்து சிற்பிகளும் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர். இவர்களுக்கு உதவியாக இங்குள்ள இருபத்தைந்து பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். எண்ணிறந்த அடியார்கள் முன்னிலையில் 27-3-1954 வெள்ளிக்கிழமை

அன்று சுபவேளையில் பிள்ளையார் ஆலயத்தின் திருப்பணி வேலை ஆரம்பமானது. சபைத்தலைவர் அவர்களாற் பிள்ளையார் ஆலயத்திற்கு அத்திவாரக்கல் நாட்டப்பெற்றது. அத்துடன் எட்டுப் பிரகாரமூர்த்திகளின் ஆலயங்களுக்கும், மூன்றுபக்கத் திருமதில்களுக்கும், மடப்பள்ளி, களஞ்சியம் ஆகிய அறைகளுக்கும் அத்திவார வேலை ஆரம்பிக்கப்பட்டது. பின்பு 11-11-54-ல் முன்னைய பிரதம மந்திரி அதிகௌரவ சேர். ஜோன் கொத்தலாவல அவர்களால் இராசகோபுரத்துக்கு அத்திவாரக்கல் நாட்டப்பெற்றது. பின்னர் திரு. ம. செல்லக்கண்ணு ஸ்தபதியார் தலைமையிற் கட்டடவேலை தொடர்ந்து நடைபெற்றது.

## தற்கால நிலை :

ஆலயத்தின் கிழக்குப் பக்கத்திலே திருவாசலின் இருபுறத்திலும் களஞ்சியம், மடப்பள்ளி, யாகசாலை, ஆபரணக் களஞ்சியம் முதலியன அமைந்துள்ளன. யாகசாலைக்கு அண்மையில் வயிரவகோயில் கட்டப்பெற்று விமான வேலை பூர்த்தியடைந்துள்ளது. தெற்குப் பகுதியில் மடப்பள்ளியிலிருந்து 50 அடிவரை தூண்கள் கட்டிச் சாந்து போடப்பட்டுள்ளது. மேற்கு வீதியிற் பரிவார முகூர்த்தங்களாக விநாயகர், மகா விஷ்ணு, சோமஸ்கந்தர், பஞ்சலிங்கம், தேவசேனு சமேத ஸ்ரீ சுப்பிரமணியர் ஆகியோரின் ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் விநாயகர், சுப்பிரமணியர் ஆகிய பரிவார மூர்த்திகளுக்குச் சார்வரி ஆண்டு ஐப்பசித் திங்கள் 15 ஆம் நாள் (31-10-60) குடமுழுக்காட்டுவிழாச் செய்யப்பெற்று நாளாந்த பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. மேலே குறித்த ஆறு பரிவார ஆலயங்களுக்கும் நடுவே மகாலிங்கப்பெருமானை எழுந்தருளச்செய்து 31-10-60 இல் குடமுழுக்காட்டுவித்து அங்கும் நாளாந்த பூசை வழிபாடுகள் வழுவாது நடைபெற்று வருகின்றன.

ஏனைய ஆலயங்களின் வேலைபூர்த்தியாகி, இன்னும் தளமும் சுதவும் முடியவேண்டிய நிலையில் இருக்கின்றன. இவற்றை முடித்து அவ்வாலயங்களுக்குரிய மூர்த்திகளையும் எழுந்தருளுவிக்க வேண்டும். மேற்குப் பரிவாரத்திலுள்ள ஆலயங்கள் அடங்கியுள்ள மேற்தளத்துக்கு மூடுசாந்து போடப்பெற்றுள்ளது. வடக்குப் பகுதியிற் பள்ளி

உ

சிவமயம்



தோற்றந் துடியதனிற் தோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம் — ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தி லுற்றதி ரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.


திருச்சிற்றம்பலம்.

யறைக்கும் சுப்பிரமணியசுவாமி கோயிலுக்குமிடையில் மேற்தளத்துக்கு மூடுசாந்து போடப்பட்டிருக்கின்றது. நடராசர் கோயில் வேலைகள் யாவும் நிறைவெய்தி 31-10-60 இல் குடமுழுக்காட்டி நாளாந்த பூசைவழிபாடுகள் நன்கு நடைபெற்று வருகின்றன. பள்ளி அறையிற் கீழ்த்தளம் நீங்கலாக மிகுதி வேலைகள் நிறைவுபெற்றுள்ளன. முன்பிருந்த சண்டேசுவரர் ஆலயத்தைத் திருத்திச் சண்டேசுவரரை எழுந்தருளுவித்துக் குடமுழுக்காட்டி நாளாந்த பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

பாலாவித் தீர்த்தக்கரையிற் சுவாமி தீர்த்தத்திற்கு வரும் பொழுது வீற்றிருக்கவும், அடியார்கள் தீர்த்தமாடிச் சந்தியாவந்தனஞ் செய்யவும் ஒரு வசதியான மண்டபம் தேவையாக இருந்தது. இக்கரையோரத்தில் ஒரு பிள்ளையார் கோயிலையும் மண்டபத்தையும் கட்டுவதற்காக வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி பாலாவிப் பிள்ளையார் கோவிலைக் கட்டிமுடித்துக் குடமுழுக்காட்டுவதற்கு யாழ்ப்பாணம் இ. போ. ச. இந்து ஊழியர் சங்கம் முன்வந்தது. அவர்களது உதவியாற் கோயில் வேலைகள் யாவும் முடிந்து குடமுழுக்கு விழாவும் 1967 ஆம் ஆண்டு தைப்பூசத்தன்று நடைபெற்றது.

இரண்டாம் வீதியில் வசந்தமண்டபமும் அதைச்சேர்ந்த கட்டடங்களும் நிறுவப்பெற்றுள்ளன. அம்மண்டபத்திற்கு முன்புறமாக 80 அடி நீளமும் 68 அடி அகலமுங்கொண்ட ஓர் இருப்புக்கொட்டகை நிறுவப்பெற்றுள்ளது. சைவப் பிரசங்கங்களும், விழாக்களும், சிவராத்திரி காலத்தில் இன்னிசைக் கச்சேரிகளும் இம் மண்டபத்தில் நடைபெற்று வருகின்றன.

இராசகோபுர வேலை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இப்போது கட்டிமுடிக்கப்பெற்றுள்ள கோபுர வாசலின் மேல் எட்டு அடுக்குகள் கொண்ட கோபுரம் அமையவிருக்கின்றது. காலஞ்சென்ற சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களின் எண்ணத்தை நிறைவுசெய்யும் நோக்கத்துடன் லேடி வைத்தியநாதன்


THREE STOREYED RAJA GOPURA
SIDE ELEVATION.
M. SELLAKANNU STHAPATI,
M. VAIDHYANATHA STHAPATI,
CONSULTING & PRACTISING ARCHITECTS
KARAIKUDI. S. INDIA.
SCALE-1 INCH = 3 FT.
THREE STOREYED RAJA GOPURA
FRONT ELEVATION.


இராசகோபுரம்

அவர்களின் குடும்பத்தினர் இராசகோபுரக் கட்டுவேலையைப் பொறுப்பேற்றுள்ளனர். இராசகோபுரத்துக்கு வேண்டிய கருங்கற்கள் பொழியப்படுகின்றன. நடனக்கச்சேரிகள் மூலம் இக்கோபுரத் திருப்பணிக்குத் தேவையான பணத்தை லேடி வைத்தியநாதன் சேர்த்துவருகின்றார். வேறு சில தனிப்பட்ட சைவப் பெருமக்களும் பணவுதவிசெய்துள்ளமை இங்கு குறிப்பிடவேண்டியதொன்றும். விரைவிலே சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களின் நினைவாக இராசகோபுரம் கெம்பீரமாகக் கேதீச்சரத்திற் காட்சிதருமென்பது திண்ணம்.

கௌரியம்பாள் ஆலயத் திருப்பணி வேலையை மலாயாவிலுள்ள திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையார் பொறுப்பேற்றுள்ளனர். இவர்கள், ஓய்வுபெற்ற மலாயா அரசாங்க உத்தியோகத்தர் கொண்ட உப குழுவொன்றை யாழ்ப்பாணத்தில் அமைத்திருக்கின்றார்கள். இக்குழுவினர் கௌரியம்பாள் கோவிலைக் கட்டுவதற்கு வேண்டிய கருங்கற்களை வவுனியாவிலிருந்து வருவித்துச் சிற்பிகளைக் கொண்டு அவற்றைப் பொழிவிக்கின்றனர். விரைவில் கௌரியம்பாள் ஆலயவேலை பூர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மலாயாத்திருப்பணிச் சபையினரின் அயராத உழைப்பிற்குச் சைவப் பெருமக்கள் என்றும் நன்றியுள்ளவராவர்.

பாலாவித் தீர்த்தக் கரையிலே பாலாவி சேவா சங்கத்தாரால் பல அறைகள்கொண்ட விடுதியொன்று கட்டப்பட்டுள்ளது. மேற்கு வீதியிற் கொட்டிலுக்கு அண்மையிற் சிவபூசை மடம் ஒன்று கட்டப்பெற்று நிதிக்குறைவால் பூர்த்தியற்ற நிலையில் உள்ளது. கிழக்கு வீதியில் நாவலர் மடத்துக்கு அண்மையிலே திருக்குறிப்புத் தொண்டர்ச் சபையினரால் ஒரு பெரிய மடம் கட்டப்படுகின்றது. 'நடராசர் மடம்' என்ற பெயரைக்கொண்ட இன்னொரு மடம், நூல்நிலையத்துக்கு அண்மையில் அமைந்துள்ளது.

பாலாவித் தீர்த்தக் கரையில் அடியார்கள் வசதியுடன் தீர்த்தமாடுவதற்குத் தெப்பக்குளப் படிகள்போல நீளமாகப் படிக்கட்டுகள் அமைக்கப்பெற்றுள்ளன. இப்பணியைத் தொடர்ந்து பாலாவியின் நான்கு பக்கங்களுக்கும் படிகள் அமைத்தால் பாலாவி அழகான


PLATE No 5.
M. SELLAKKANNU STHAPATI
M. VAIDHYANATHA STHAPATI
CONSULTING & PRACTISING ARCHITECTS
KARAIKUDI - S. INDIA.
SCALE - 1 INCH 3 FEET
MUKHA MANTAPA
GARBHA GRIHA
AMBAL - SHRINE
SIDE ELEVATION
WEST VIEW

கௌரியம்பாள் ஆலயம்

ஒரு தெப்பக் குளமாகத் திகழும் என்பது திண்ணம். பாலாவியின் வடக்குப் பக்கத்தில் அரைவாசிக்குப் படிக்கட்டுகள் கட்டப்பெற்றுள்ளன. ஏனைய அரைவாசிக்கும் அவ்வாறு படிக்கட்டுகளை கட்டி முடிப்பது சைவப்பெருமக்களது கடமையாகும். பாலாவித் தீர்த்தம் அடியார்களது கொடிய நோய்களையெல்லாம் தீர்க்கும் இயல்புடையது என்பது 'பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்' என்ற தேவார அடியாற் தெரியவருகின்றது. பாலாவியின் நான்கு பக்கங்களுக்கும் படிக்கட்டுக்கள் கட்டிய பின்னர், அதன் அழகும் சிறப்பும் நன்கு புலனாகும். தெப்பத் திருவிழா நடாத்தப் பொருத்தமான தீர்த்தக் குளமாகத் திகழுமென்பது திண்ணம்.

மேற்கு வீதியில் திருவாசக மடம் அமைந்துள்ளது. திருவாசக மடத்து வேலைகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன. இம்மடத்திற் சென்னை சைவசித்தாந்த மகா சமாசம் **1960** ஆம் ஆண்டு தனது ஆண்டு விழாவை நடாத்தியது. மேலும் **1962** ஆம் ஆண்டு தொடக்கம் மார்கழித் திருவெம்பாவைத் தினங்களில் ஈழத்துச் சிவனடியார் கூட்டத்தினர் திருவாசக விழாவை ஆண்டுதோறும் கொண்டாடுவதுடன் மகேசுர பூசையையும் செவ்வனே நடாத்தி வருகிறார்கள்.

### சிவமணி சிவப்பணி :

இதுவரை கூறிய திருப்பணிகள் யாவுக்கும் அடிப்படைக் காரணராக இருந்தவர் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் ஆவர். திருப்பணிச்சபைத் தலைவரான நாட்தொடக்கம் தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் திருக்கேதீச்சரத் திருப்பணிக்காகவே அர்ப்பணித்தார். நற்பணி செய்த நாவலர் பெருமானின் நினைவு நிறைவேற வேண்டுமெனச் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் எண்ணினார். அதனைக் கருத்திற்கொண்டு அல்லும் பகலும் அயராது உழைத்தார். அவரின் அயராத உழைப்பால் இன்று திருக்கேதீச்சரம் கற்கோயிலாகக் காட்சிகொடுக்கின்றது.

சிறு குடிலாகக் காட்சிதந்த திருக்கேதீச்சரநாதனின் திருக்கோயிலை வான்முட்ட வைத்துவிட வேண்டுமென அவர் ஆசைப்பட்டார். அதற்காகச் சைவமக்களை எல்லாம் ஒன்றுதிரட்டினார். அவர்கள்

ஒவ்வொருவரினதும் உதவியை நாடினர். அவர்களிடம் பெற்ற உதவியினாலும், தமது அயரா உழைப்பினாலும் திருக்கேதீச்சர நாதனின் கோயிலைக் கட்டி எழுப்பினர். கோயிற் சுற்றாடலுக்கு வேண்டிய குடிநீர் வசதியையும், மடங்களையும், மின்சார ஒளியையும், மருத்துவ மனையையும், நூல்நிலயத்தையும் அமைத்துத் திருக்கேதீச்சரத்தைச் சீரும் சிறப்பும் பெறச் செய்தார். மேலும், திருக்கேதீச்சரத்துக்கென ஒரு கிராமச் சபையையும் அமைக்க வழிசெய்தார். இவ்வாறு சிவமணி அவர்கள் செய்த சிவத்தொண்டு சைவமக்கள் உள்ளத்தில் அழியாத ஓர் இடத்தைப் பெற்றுவிட்டது.

இதுவரை கூறியவைகொண்டு திருக்கேதீச்சர வரலாற்றை அறிந்தோம். எனினும் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி வேலைகள் இன்னும் பூர்த்தியாகாமல் இருப்பது பெரும் குறையாகும். திருப்பணிச் சபையார் எடுத்துக்கொண்ட முயற்சியாலே திருப்பணி வேலைகள் யாவும் விரைவிற் பூர்த்தியாகிக் கும்பாபிடேகம் நிகழவிருக்கும் நன்னாளைச் சைவப் பெருமக்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றனர்.

> "தொண்டர் நாள்தொறும் துதிசெய அருள்செய்
> திருக்கேதிச்சரமது தானே".

திருச்சிற்றம்பலம்.



திருக்கேதீச்சர சுப்பிரமணியசுவாமிகோவில் தூபிக்கு அபிஷேகம் நடைபெறுகின்றது. கோவில் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ இந்திரக் குருக்கள் பக்கத்தில் நிற்பதைக் காணலாம்.

உ

# திருக்கேதீச்சர ஆலயமும் மாந்தைத் துறைமுகமும்

திருக்கேதீச்சர ஆலயம், மாந்தைத் துறைமுகம் என்பன சீரும் சிறப்பும் பெற்று விளங்கும் காலத்தில் ஈழத்தில் வாழ்ந்த தமிழர்கள் அரசியல், பொருளாதாரம், கலை என்னும் துறைகளிற் சிறந்து விளங்கினர். புராணம், இதிகாசம், தேவாரம், கல்வெட்டுகள் என்பன திருக்கேதீச்சர ஆலயத்தின் மகிமையையும் மாந்தைத் துறைமுகத்தின் சிறப்பையும் ஓரளவு அறிந்துகொள்ள உதவுகின்றது. புதைபொருளாராய்ச்சியாற் கண்ட உண்மைகளும் ஏனைய சான்றுகளும் திருக்கேதீச்சர ஆலயத்தினதும், மாந்தைத் துறைமுகத்தினதும் வரலாற்றை விரித்துரைக்கப் பெரிதும் பயன்படுகின்றன.


திருக்கேதீச்சரத்து இறைவன் புகழை நாயன்மார்கள் இருவர் பாடிப்பரவினர். அவருள் ஒருவர் 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். மற்றவர் 9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார். திருக்கேதீச்சரத்து இறைவன் தோற்றத்தையும், அவன் அடியார்களுக்கு அருள் செய்யும் திறனையும் அவர்கள் பாடிப் பரவியுள்ளனர். திருக்கேதீச்சரத்து இறைவனைப் பாடியநேரத்தில் மாந்தையின் மாண்பையும் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

## மாந்தைத் துறைமுகம் :

மாந்தைத் துறைமுகத்தில் தங்கிநின்ற பெரிய கப்பல்களையும் மாந்தைப் பட்டினத்தில் அமைந்து விளங்கிய மாளிகைகளையும், மலர்ச்சோலைகளையும் பழத்தோட்டங்களையும் தம் தேவாரங்களில் கவின்பெறக் காட்டியுள்ளனர். பாலாவியின் முகத்துவாரத்தில் மாந்தைத் துறைமுகம் அமைந்திருந்தது. அங்கே மலைபோன்ற அலைகள் எழுந்தும் விழுந்தும் காட்சியளிக்கின்றன. களஞ்சியக் கட்டடங்களும், பாலத்துறையும் பாலாவியின் தென்கரையில் அமைந்திருந்தன.

அவ்விடம் இன்றும் வங்காலை என்ற பெயருடன் விளங்குகின்றது. வங்கம் என்பது கப்பல், காலை என்பது கப்பல் தங்கும் நிலையம். ஆகவே வங்காலை என்பதைக் கப்பல் தங்கும் நிலையம் என்று குறிப்பிடலாம். பாலாவியின் வடகரையில் திருக்கேதீச்சர ஆலயம் அமைந்து திகழ்கின்றது. அதை அடுத்து அதன் ஆட்சியாளரின் இல்லங்களும் மக்கள் வாழ்ந்த உயர்ந்த பெரிய மாளிகைகளும் காணப்பட்டன. இன்று மாளிகைத்திடல் என்ற பெயரோடு இருக்குமிடம், அன்று பெரிய மாளிகைகள் அமைந்து விளங்கிய உயர்ந்த இடமாக இருந்திருக்க வேண்டும். இன்று பாப்பாமோட்டை என்ற பெயருடன் அமைந்து விளங்குமிடம், அன்று அந்தணர் வாழ்ந்த இடமாக இருந்திருக்க வேண்டும். பார்ப்பார் வாழ்ந்த இடம் பாப்பாமோட்டை என்ருயிற்றுப் போலும். இன்று கோயிற்குளம் என்று வழங்குமிடம் அன்று திருக்கேதீச்சரத்திற்குரிய குளமாக இருந்திருக்க வேண்டும். இக்குளத்திலிருந்து கோயில் நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சி நெல் விளைவித்தனர். எனவே மாந்தையையும், மாந்தைத் துறைமுகத்தையும் சூழவிருந்த விடங்களில் மாடமாளிகைகளும் வயல் நிலங்களும், தோட்டங்களும் மலிந்து காணப்பட்டனவென்பது தெரியவருகிறது.

பண்டைக் காலத்தில் அரேபியாக் கடல்வழியாகக் கப்பற் போக்குவரத்து நடந்தது. உரோமாபுரி, கிரேக்கம், பலத்தீனம், மெசப்பத்தேமியா, எகிப்துப்போன்ற நாடுகளிலிருந்து கப்பல்கள் அரேபியாக் கடலுக்கூடாகச் சென்றன. அவ்வாறு சென்ற கப்பல்களுக்குத் தென்மேல் பருவக்காற்ருல் அல்லல் எதுவும் ஏற்படாமல் மாந்தைத் துறைமுகம் பாதுகாப்பளித்தது. மாந்தைத் துறைமுகம் இராமரணையின் பவளக் கற்பாறைக்கும் மன்னுர்த் தீவுக்கும் தெற்கே சில கல் தொலைவில் அமைந்திருந்தது. அதனுல் தென்மேல் பருவக்காற்ருல் பாதிக்கப்படாத ஒதுக்கில் மாந்தைத் துறைமுகம் இருந்தது. தென்மேல் பருவக்காற்றின் கொடுமையிலிருந்து தப்புவதற்குக் கப்பல்கள் மாந்தைத் துறைமுகத்தில் தஞ்சம் புகுந்தன என்று கூறலாம். மன்னுர்த் தீவுக்கும், இலங்கைக் கரைக்கும் இடையே இருந்த பகுதி அன்று கப்பற் போக்குவரத்திற்கு ஏற்றதாக விளங்கிற்று. எதிர்ப்பக்கமாக ஓடிய நீரோட்டங்களால் இப்பகுதியில் மணற்றிடர்கள் எதுவும் ஏற்படவில்லை. தென்கிழக்கு, தென்மேற்குக் காற்றுக்கள்



திருக்கேதீச்சர ஆலய இராசகோபுர வாசல்

எதிர்ப்பக்கமாக நீரோட்டங்களைச் செலுத்தக் காரணமாயின. எனவே தடைகள் எதுவுமின்றி ஆழமாக அமைந்திருந்த இக் கால்வாய்க்கூடாகக் கப்பல்கள் எளிதாகச் சென்றுவர முடிந்தது. ஆனால் இவ்வாறு ஆழமும் அகலமும் உடையதாய்ச் சிறப்புடன் விளங்கிய மன்னார்க் கால்வாய் சூரி நிறைந்து கப்பற் போக்குவரத்திற்குத் தடையாய் மாறியது எங்ஙனம்? மாந்தைத் துறைமுகம் மணற்குன்றுகள் நிறைந்தும், அலைபுரண்டோடிய பாலாவி பள்ளமாகவும், அதனையடுத்த பாகங்கள் மணற்றிடராகவும் மாறியது எவ்வாறு?

## மல்வத்து ஓயாவும் பாலாவியும்:

மாத்தளைப் பகுதியின் பரந்த பள்ளத்தாக்கில் ஓடிய நீரும், மல்வத்து ஓயாவும் சேர்ந்து பாலாவி என்ற பெயரோடு அன்று மாந்தைக் கடலில் கலந்தது. அவ்வாறு ஓடிய மல்வத்து ஓயா தன் படுக்கையை மாற்றித் தெற்குப் பக்கமாக மதவாச்சிப் பகுதிக்கூடாகப் பாய்வதாயிற்று. இக்கருத்தையே அண்மையில் இலங்கையில் விஞ்ஞான அடிப்படையில் மல்வத்து ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தைக் குறித்து ஆய்ந்த ருசியப் பேராசிரியரும் வலியுறுத்திச் சென்றார். இஃது இவ்வாறாகப் புதிதாக வெட்டப்பெற்ற மாபெருங் குளம் (                ) ஒன்று பாலாவியை இரண்டாகப் பிரித்துவிட்டது. அவ்வாறு பிரிந்த நீரின் ஒரு பகுதி அருவியாறு என்ற பெயரோடு இன்று மன்னார்த் தீவுக்குப் பல கல்தொலைவில் கடலில் விழுகின்றது. இவ்வாறு இரண்டாகப் பிரிந்ததன் காரணமாகப் பாலாவியின் முகத்துவாரம் சேறும், சூரியும் நிறைந்ததாக மாறிற்று. மேலும், புதிதாக அமைக்கப்பட்ட புகைவண்டிப் பாதையும், கற்பாதையும் மன்னார்க் கால்வாயை முற்றாக மறைத்துவிட்டன. புகைவண்டிப் பாதையாலும், கற்பாதையாலும் மன்னார்த்தீவு இலங்கையோடு இணைக்கப்பட்டபோது, தலைமன்னார் இந்தியாவிற்குக் கிட்டிய துறைமுகமாயிற்று. பராக்கிரமபாகு மன்னன் காலத்திலிருந்தும், போர்த்துக்கேயர் வருகையிலிருந்தும் தலைமன்னார் சிறந்த துறைமுகமாக அமைந்து விளங்கிற்று. மாந்தை எவ்வாறு முக்கிய துறைமுகமாக அமைந்து விளங்கியதோ அதேபோன்று தலைமன்னாரும் முக்கியம் பெற்றுத் திகழத்தொடங்கியது. கி. மு. பதினொராம் நூற்றாண்டின்

முன் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக மாதோட்டம் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது. இந்தியாவிற்கும் ஈழத்திற்கும் உரிய சிறந்த துறைமுகமாகவும் விளங்கிற்று. அல்லாமலும் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பெற்ற பண்டங்களை மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் துறைமுகமாகவும் இருந்தது.

## வாழ்வும் தாழ்வும்:

தமிழகத்தின் தென்கரையிலே அமைந்து மிளிர்ந்த '' இராமேசுவரத்திற்கு '' ஈடும் இணையும் உள்ளதாய் ஈழத்திலே மன்னார்க்கரையில் '' திருக்கேதீச்சரம் '' அமைந்து விளங்குகின்றதன்றோ ! ஆனால் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த அந்நியர் படைகளால் பல முறை திருக்கேதீச்சரம் அல்லலுக்குள்ளாயிற்று. எனவே, எதிர்க்கரையில் திகழ்ந்த இராமேசுவரம் படையெடுப்புக்களால் பங்கப்படாமல் சிறப்புடன் விளங்கத் திருக்கேதீச்சரம் சீரழிந்து சிறப்புக் குன்றிற்று. ஈழத்துத் தமிழ் மக்களின் வாழ்வு தாழ்வுக்கேற்பத் திருக்கேதீச்சரமும் உயர்ந்தும் தாழ்ந்தும் வந்தது. சோழமன்னர்கள் இலங்கையைப் பொலநறுவையில் இருந்து ஆட்சி செய்த காலத்தில் மாதோட்டம், திருக்கேதீச்சரம் ஆகிய இரண்டினதும் நிலைமை உச்சநிலையை அடைந்தது. ஆனால் அரசியலில் ஏற்பட்ட மாற்றம் அவைகளின் சிறப்பைத் திடீரெனச் சீரழியச் செய்தது. (திருக்கேதீச்சரம்) இது சிறப்புடன் இருந்த காலத்தில் 'இராசராசேசுவரம்' என்னும் பெயரும் வழங்கப்படலாயிற்று.

யாழ்ப்பாணத்துச் சிங்கைநகரிலே அரசகுடும்பத்திற் பிறந்த காரணத்தால் பராக்கிரமபாகு மன்னன் யாழ்ப்பணக் குடாநாட்டின் மேல் அந்தரங்கமான அனுதாபமுடையவனுயிருந்தான். இன்னும் முதலாம் சுந்தரபாண்டியன் (கி. பி. 1251—1280) ஆட்சிக்காலத்தில் திருக்கேதீச்சரம் அரசனின் ஆதரவைப்பெற்றுப் பாண்டியமன்னர்காலச் சிற்பமுறையில் புதுப்பித்துக் கட்டப்பட்டது. இன்று திருக்கேதீச்சரத்தில் காணப்பெறும் கற்சிற்பங்கள் இவ்வுண்மையை வலியுறுத்தும் சான்றுகளாம். மேலும் குடுமியாதலையிலுள்ள சடாவர்மன் வீரபாண்டியனின் கல்வெட்டு ஒன்று அவன் ஈழத்தில் ஈட்டிய வெற்றியைப் புகழ்ந்து பேசுகின்றது. ஈழத்து அரசனை

வென்றதோடல்லாமல் அவனைக் கப்பம் கட்டுமாறும் செய்தான் என்றும், தனது இரட்டை மீன் முத்திரையையும், கொடியையும் கோணமலையில் (திருகோணமலை) பொறித்துத் தன் நாடு திரும்பினான் என்றும் அக்கல்வெட்டு எடுத்துரைக்கின்றது. எனவே சடாவர்மன் ஆட்சிக்காலத்திலே திருக்கேதீச்சரம் அவனின் ஆதரவை ஓரளவு பெற்றிருக்கலாம். இலங்கையை வென்ற சடாவர்மன் கடல் வழியாகத் திருக்கோணமலைக்குச் சென்றிராவிட்டால் திருக்கேதீச்சரம் அவனது முழு ஆதரவைப் பெற்றிருக்கும்.

## போர்த்துக்கேயர் வருகை:


போர்த்துக்கேயர் இலங்கையின் வடகரையில் இறங்கியபோது திருக்கேதீச்சரம் இந்துக்களின் முக்கிய வழிபாட்டு ஆலயமாகத் திகழ்ந்தது, என்பது திண்ணம். 'எமேர்சன் ரெனந்து' கூறுவதை இங்கு நோக்குவாம்.

"யாழ்ப்பாணத்தைப் பலவந்தமாகக் கைப்பற்றி அங்கே ஆட்சி செய்த மலபார் அரசபரம்புரையினது அரசுரிமையை ஒழித்து நேரடியான ஆட்சியை **1617** வரையிலும் போர்த்துக்கேயர் ஏற்படுத்தவில்லை. தமது வாணிகப் பெருக்கத்திற்குத் துணைபுரிந்த வளமிக்க தென்மாகாணங்களிலும் பார்க்கத் தங்கள் குடியேற்றத்திற்குப் பாதுகாப்பளிக்கத் தகுதியுடையதாக இருந்த யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கேயர் நீண்ட காலமாக விரும்பிவந்தனர். ஆட்சிக்குப் பணியாத அப்பகுதியில் தமது மதத்தையும் பரப்பப் பாடுபட்டனர். இப்பகுதியைக் கைப்பற்ற **1544**-ம் ஆண்டில் போர்த்துக்கேயர் முயன்றனர். போர்த்துக்கேயர் தெக்கானில் இந்து ஆலயங்களைக் கொள்ளையடிக்கச் சென்றபோது இவ்வாறு முயன்றனர். யாழ்ப்பாணக் குடாநாட்டின் தலைவனைக்கண்டு தம்கீழ்ச் சிற்றரசனாக இருந்து கப்பங் கட்டுமாறு வற்புறுத்தினர். அதை விரும்பாதவிடத்து அவன் தம்மோடு சேர்ந்து போரிடத் தயாராகவேண்டும் என்று கூறினர். அத்தலைவன் முன்னையதற்கு இணங்கி ஆண்டொன்றுக்கு **4000** டுக்கட்ஸ்க் கப்பங்கட்ட இசைந்தான். அதே ஆண்டில் மன்னார்ப்பகுதி மக்கள் பலர் வண. பிரான்ஸ் சேவியரின் ஆணையின் கீழ் உரோமன் கத்தோலிக்கராக மாறினர். யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த மன்னன்

மதமாற்றத்தை வேரறுக்க மதம் மாறிய அறுநூறு பேர்களைக் கொன்று ஒழித்தான். ஏன்? மதம் மாறிய தனது தனயனின் தலையையே கொய்துவிட்டான். இதைக் கண்ணுற்ற இரண்டாவது மகன் தந்தைக்குப் பயந்து கோவாசென்று அங்கே சரணடைந்தான்''.

''இவ்வாறு வரம்புகடந்த கொடுமைகள் செய்த அரசனுக்கு உறுதியான மெதுவான ஆனால் கடுமையான தண்டனை அளிக்கும் படி மூன்றும் ஜேன் இந்திய வைஸ்ரோய்க்குக் கட்டளையிட்டான். இதனால் மன்னார்ப்பகுதியிலுள்ள கிறிஸ்தவர்கள் முன்போலத் தொல்லைகளுக்குள்ளானார்கள் என்றும், 'கோவாவிற்கு ஓடிச்சென்றவனின் அண்ணனுடைய அரசுரிமை பறிக்கப்பட்டது என்றும் இரு காரணங்களைக் காட்டி 1560 ஆம் ஆண்டில் இந்திய வைஸ்ரோய் டொன் கொன்ஸ்டான்டைப் டி ப்பிரகாசர் ( ) யாழ்ப்பாணக் குடாநாட்டின்மீது போர்தொடுத்தான். டி கௌடேவின் ( ) இந்திய வரலாற்றின் எழுபதாவது பிரிவு இதனை நன்கு விளக்கிக் கூறுகின்றது. அதன்படி கொச்சி மேற்றிராணியார் போர்த்துக் கேயப் படைகளுடன் இங்குவந்தார் என்றும், கடற்கரையிலே பலி பீடம் ஒன்றை அமைத்து அதைப் பணிந்து வணங்கி ஏற்றுக்கொள் வோரை மன்னித்துப் பாதுகாப்பு அளிப்பதாகக் கூறினார் என் றும் தெரியவருகின்றது. இவ்வாறு தொடங்கிய போர் மிகவும் கொடுமை நிறைந்ததாக இருந்தது. மத நம்பிக்கையுள்ளோர் பலர் போர்த்துக்கேயரின் பீரங்கிகளுக்கு இரையாயினர். நகரமும் கைப் பற்றப்பட்டு, அரண்மனையும் அழிக்கப்பட்டது. அரசனும் பிடிபட் டான். போர்த்துக்கேயர் அரசன் தமக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்றும் ஏழாவது புவனேகபாகுவின் மருகனும், டொன் ஜோன் தர்மபாலாவின் தந்தையுமான விதியபண்டார கண்டியிலிருந் தும் கோட்டையிலிருந்தும் கைப்பற்றிய செல்வங்களை மறைத்துவைத் திருக்கும் இடைத்தைக் கூறவேண்டும் என்றும் வற்புறுத்தினர். இவ்வாறு அவன் செய்யின் இழந்த அரசுரிமையை மீண்டும் பெற முடியும் என்றும் அவர்கள் கூறினர். அதற்கு உடன்பட்ட மன்னன் 8000 குருசேடோஸ் தொகையையும் மன்னார்த் தீவையும் போர்த் துக்கேயருக்குக் கொடுக்க முன்வந்தான்.

உ



திருச்சிற்றம்பலம்.

''மேலும் யாழ்ப்பாண அரசன் சிங்களவர்களோடு சேர்ந்து போர்த்துக்கேயருக்கு எதிராக உதவி செய்தான் என்ற குற்றத்திற்காக 1591–ஆம் ஆண்டிலும் 1604–ஆம் ஆண்டிலும் கோவாவிலிருந்து படைகள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டன. அப்போர்களில் வலிகுன்றிய அரசன் ஒவ்வொரு முறையும் பணிந்துசென்றமையால் பயமுறுத்தலின் அபாயம் குறைந்தது. அதனுல் யாழ்ப்பாணப் பகுதி தமக்கு உரித்தானது என்று போர்த்துக்கேயர் கொண்டிருந்த எண்ணம் போர்களின் நிலைமைக்கு ஏற்பச் சிறிது சிறிதாகப் பின்போடப்பட்டது. ஆனுல் 1617-ஆம் ஆண்டில் கொன்ஸ்டன்டைன் டி சாய் நொரோனு ( ) என்னும் அரசியற் தலைவனின்கீழ்ப் படையொன்று யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டது. அப்படை அநாகரிகமான முறையில் போர்செய்து நகரைக் கைப்பற்றியது. அல்லாமலும் யாழ்ப்பாணத்து மன்னனைக் கோவாவிற்குக் கைதியாகக் கொண்டுசென்று அங்கே அவனின் தலையை வெட்டினர். இதனுல் அவனது மருமகனுன மலபார் அரசபரம்பரையைச் சேர்ந்த கடைசி இளவரசன் தன் அரசுரிமையை இழந்து பிரான்ஸிஸ்கன் மடத்தில் சேர்ந்தான். அவனது உடைமைகள் அனைத்தும் போர்த்துக்கேயருக்கு ஆயது'' என்று ஏமேர்சன் ரெனந்து எடுத்துக் கூறியுள்ளார்.

ஏமேர்சன் ( ) வெளிப்படையாகக் குறிப்பிடாவிட்டாலும், போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தில் திருக்கேதீச்சரம் சீரும் சிறப்பும் உள்ளதாய்த் திகழ்ந்தது என்பது தெளிவு. தெக்காணில் இந்து ஆலயங்களைக் கொள்ளையிடப் போர்த்துக்கேயர் முயன்றனர். அவ்வாறு முயன்றுகொண்டிருந்த அவர்களுக்கு இந்தியக் கரையில் அமைந்து விளங்கிய திருச்செந்தூர் ஆலயத்தையும், கன்னியாகுமரிக் கோயிலையும் கொள்ளையிடுவதிலும் பார்க்கத் திருக்கேதீச்சரத்தைக் கொள்ளையடித்தல் மிகவும் எளிதாக இருந்தது. அவ்வாறு அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியில் வெற்றியும் கண்டனர். (இராமநாதபுரம் இராசாவின் படைப்பலக் காரணத்தாற்போலும் இராமேஸ்வரத்தைக் கொள்ளையடிக்கப் போர்த்துக்கேயரால் இயலாமற் போயிற்று).

## தமிழர் ஆட்சியை இழத்தல்:

மேலும், மன்னார்த்தீவில் வாழ்ந்த மக்கள் போர்த்துக்கேயரால் மதமாற்றம் செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து திருக் கேதீச்சரம் கொள்ளையடிக்கப்பட்டது. அவ்வாலயத்தை இடித்து அதன் கற்களை எடுத்துச் சென்று மன்னார்த் துறைமுகத்தைப் போர்த்துக்கேயர் கட்டினர். இவ்வாறு திருக்கேதீச்சரத்தில் போர்த்துக்கேயர் செய்த கொடுமைகளைக் கண்டு யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த அரசன் சினங்கொண்டான். பழிக்குப் பழிவாங்க எண்ணினான். ஆனால் அவன் முயற்சி அடக்கியொடுக்கப்பட்டது. யாவும் படுகொலையில் முடிந்தது. அதைத்தொடர்ந்து மேலும் நடந்த செயல்களை அன்றைய சமய நிலையின் சீரழிவையும், ஒழுக் கத்தின் இழிவையும் காட்டுவனவென்றே கூறலாம். ஆனால் இந் நிலையில் நான் ஒன்றைத் திட்டமாகக் குறிப்பிடலாம். திருக் கேதீச்சரத்தின் வீழ்ச்சியோடு ஈழத்தமிழரின் ஆட்சியும் அழிந்தது. அதுவரை சுதந்திரமாக வாழ்ந்த தமிழ் மக்கள் தமது ஆட்சியை இழந்து அடிமைகளாயினர்.

இலங்கை வேந்தனான இராவணன் சிறந்த சிவபக்தன். அவன் கோணேசுவரத்து இறைவனிடம் அன்பு கொண்டிருந்தான். இரா வணனின் மாமனான மயன் திருக்கேதீச்சரத்துப் புராதன ஆல யத்தை அமைத்தான் என்பது மரபு. இவ்வாலயத்தில் எழுந்தருளி யிருந்த இறைவனை, இலங்கையில் போரிட்டு வாகை சூடிய இராமன் வழிபட்டுச் சென்றான் என்று கூறுவர். இலங்கையில் வெற்றிபெற்ற பின் அயோத்திக்குத் திரும்பிய அவன் வழியில் இராமேசுவரத்தில் ஆலயம் ஒன்றினை அமைத்தான் என்றும் சொல்வர். மேலும் மகா பாரதத்தின் கதாநாயகனான அருச்சுனன் தெற்கே தலயாத்திரை செய்தபோது திருக்கேதீச்சரத்தைத் தரிசித்து இறைவனை வழி பட்டான் என்றும் சொல்லப்படுகின்றது. அவ்வாறு அருச்சுனன் இலங்கைக்கு வந்தபோதுதான் மாதோட்டத்தையடுத்திருந்த பகுதியை ஆட்சிசெய்த நாககன்னியான 'அல்லி அரசாணியை' அவன் சந்தித்தான் என்றும் கூறப்படுகின்றது. மன்னார்த் தீவுக்குத் தெற்கேயுள்ள பெருநிலப் பகுயில் பாழடைந்து காணப்படுவன அல்லிராணியின் கோட்டை என்று கூறுவர்.

மாந்தை, கி. மு. மூன்றும் நூற்றாண்டிலிருந்து 'மகதித்தா' என்ற பெயர் உடையதாய் இருந்தது என்று புத்த இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இராமரும், அகத்தியரும், அருச்சுனனும் மாந்தைத் துறைமுகத்தில் இறங்கி இலங்கையிற் புகுந்தனர் என்றால் விசயனும் அவனுடைய நண்பர்களும் அவ்வாறே இங்கு வந்தனர் என்பதை நாம் ஒருவாறு ஊகித்து அறிய முடிகின்றது. இவை உண்மையானால் விசயனோடு கூடிவந்த உபத்தீசன் என்ற பிராமணன் வழிபட்ட சிவாலயம் திருக்கேதீச்சரந்தான் என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர். யாழ்ப்பாண வைபவமாலை, ''விசயன் கி. மு. ஆறும் நூற்றாண்டில் இலங்கைக் கரையைச் சேர்ந்ததும் நெடுங்காலமாகப் பாழடைந்து கிடந்த திருக்கேதீச்சர ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டினான்'' என்று எடுத்துரைக்கின்றது.

''ஒன்பதாம் பத்தாம் நூற்றாண்டுகளில் இலங்கையிலே தமிழரின் ஆட்சி சிறப்படைந்தது. மக்கள் வளம் பெற்று வாழ்ந்தனர். எனவே நாயன்மார் காலத்தில் மாதோட்டம் சீரும் சிறப்பும் உடையதாய்த் திகழ்ந்தது'' என்பது 'ராஜரட்ன கார' என்ற சிங்கள நூலில் நின்றும் அறியக்கிடக்கின்றது.

## நாவலர் பணி:

திருக்கேதீச்சர ஆலயத்தின் புனருத்தாரண முயற்சி முதல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களால் தொடங்கப்பட்டது. ஆனால் அன்று வாழ்ந்த சைவ மக்களின் உணர்ச்சிக் குறைவும், கிறீத்தவர்களுடைய பலத்த எதிர்ப்பும் நாவலருடைய முயற்சிக்கு உடனடியாகப் பலனையளிக்கத் தடையாயின. ஆனால் நாவலரின் மறைவிற்குப் பின் பதினான்கு ஆண்டுகள் கழித்து அவருடைய கனவு நனவாயது. அரசாங்க அதிபராக யாழ்ப்பாணத்திற் கடமையாற்றிய சேர். வில்லியம்ருவினம் சி. சி. எஸ். யாழ்ப்பாணக் கச்சேரியில் நிலங்களை 13-12-1893 இல் ஏலம் போட்டபோது நாற்பது ஏக்கர் காடடர்ந்து கிடந்த நிலத்தை யாழ்ப்பாணத்துச் சைவப்பெருமக்கள் விலைக்கு வாங்கினர். அன்று தொடக்கம் திருக்கேதீச்சர ஆலய புனருத்தாரண வேலைகள் தொடங்கின என்று கூறலாம். சேர். வில்லியம் ருவினம் தனது ஆட்சி அறிக்கையில் திருக்கேதீச்சரத்து ஆலயத்தின் பழைய மகிமையைக் குறிப்பிட்டுள்ளார்.

**போக் என்பவரின் அறிக்கை :**

'' திருக்கேதீச்சரம், மகாதீர்த்தம், மாதோட்டம் அல்லது மாதோட்டை '' என்ற (                    ) தலைப்பில் 1887 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் நாள் திரு. போக் என்பவரால் படிக்கப்பெற்ற அறிக்கையிலிருந்து, புராதன ஆலயமான திருக்கேதீச்சரத்தின் நிலைமையைப் பற்றித் திட்டவட்டமான சில உண்மைகளை நாம் அறியமுடிகின்றது.

'' இப் பழைய நகரில் உடைந்த சில சிற்பங்களின் பகுதிகளையும் ஓடுகளையும், செங்கட்டிகளையும், மட்பாண்டங்களையும் தவிர வேறு எதுவும் நிலத்தின்மேல் இல்லை. பழைய வீதிகளின் அறிகுறிகளும் இரண்டொரு கிணறுகளும், செங்கட்டிக் கட்டடங்கள், கோயில்கள் என்பனவற்றின் அத்திவாரங்கள் என்பனவும் காணப்படுகின்றன. குன்று ஒன்றின் மத்தியிலே செங்கட்டியால் அமைந்த பழைய அத்திவாரம் ஒன்று இருக்கின்றது. இவ்விடத்திலேயே முக்கிய நகரின் பெரும்பகுதி இருந்திருக்கவேண்டும் என்று அவர் கூறினர்.


ஆனல் அந்தக் கூட்டத்தில் இருந்த சேர். பொன். இராமநாதன் அவர்கள் குறித்த அறிக்கையின் ஒருபகுதிக் கருத்தை மறுத்துரைத்து விரிவான விளக்கத்தோடு இந்துசமய அடிப்படையில் அந்த இடத்தின் அமைவைத் தெளிவுபடுத்தினர். மேலும் அவர் பழைய கட்டடங்கள் இருந்தவிடம் நகருக்குப் புறம்பானது என்றும், அவை ஆலயத்தின் உடைமைகள் என்றும் எடுத்துக்காட்டினர். அங்கு ஆலயத்தின் ஆட்சிக்குழுவினர், அடியார்கள், வேலையாட்கள் என்பவர்கள் வாழ்ந்தனர். அன்று திருக்கேதீச்சரத்து ஆலயத்தைச் சூழ்ந்து இருந்த அகழியின் அமைவு முக்கியமான தொன்றெனலாம். அங்கே இரண்டு அகழிகள் அமைந்திருந்தன. ஓர் அகழி கடல் நீரையும், மற்றது நன்னீரையும் உடையனவாய் இருந்தன. கோயிற் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகவே அகழிகள் அவ்வாறு அமைக்கப்பட்டிருந்தன போலும்.

பிரதான ஆலயத்தின் பாழடைந்த மூலப் பகுதி 1894 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வாறு கண்டு அறிவதற்குக் கோயில் நிலத்தில் அமைந்திருந்த சோழர் காலக் கிணறு ஒன்றும், போர்த்துக்கேயர் காலத்திற்கு முன் வழிபடப்பட்ட சிவலிங்கம் ஒன்றும், நந்தி ஒன்றும், கணேசரின் உருவம் ஒன்றும் உதவியாயின.

ஈழத்துச் சைவப் பெருமக்களின் விருப்பத்திற்கு இணங்க பெனரிஸிலிருந்து மகிமை பொருந்திய சிவலிங்கம் ஒன்று கொண்டு வரப்பெற்றுத் திருக்கேதீச்சரத்து ஆலயத்தில் குடமுழுக்குச் செய்யப்பட்டது என்று இராமேசுவரத்திலுள்ள வரலாற்றுக் குறிப்புகளால் அறியக் கிடக்கின்றது. இந்த மூர்த்தியே இன்றைய ஆலயத்தின் ஆதி மூலத்தில் அமைந்து திகழ்கின்றது. புராதன ஆலயம் இருந்த இடத்தில் 1903 ஆம் ஆண்டு யூன் மாதம் 28-ம் நாள் சிறிய கோயில் ஒன்று கட்டப்பட்டது. ( )

### அரசாங்க உத்தியோகத்தர் பணி:

இன்று அம்மையும் அப்பரும் அமர்ந்து அருள்புரியும் ஆலயம் முதலாவது உலகப் போருக்குப்பின் மன்னரில் தங்கியிருந்த யாழ்ப்பாணத்து அரசாங்க உத்தியோகத்தர்களால் கட்டப்பெற்றது. இவ்வாறு அமைந்த ஆலயம் காலப்போக்கில் புனருத்தாரணம் எதுவுமின்றிச் சிதைந்தபோது ஆகஸ்ட் மாதம் 1952-ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டுக் குடமுழுக்கு விழாவும் நடைபெற்றது. இப்பணியினை 1948 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19 ஆம் நாள் கொழும்பிற் கூடிய இந்துக்களால் நிறுவப்பெற்ற 'திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபையார்' செய்தனர். குடமுழுக்கு விழாவின்பின் பிரதான ஆலயத்தில் பூசையும் வழிபாடும் இனிது நடைபெறுகின்றன. ஏனைய ஒன்பது பிரகாரங்களுக்குரிய ஆலயங்கள், இராசகோபுரம், திருமதில் என்பனவற்றின் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இன்றைய ஆலயத்தின் அமைப்பு பழைய மரபினைத் தழுவிச் சமயத்திலும் சிற்பத்திலும் ஆற்றல் நிறைந்த தென்னிந்திய சிற்ப வல்லுனர்களால் திட்டப்பட்டது. மேலும் ஆலயத்தின் தென்கிழக்குப் பக்கத்திலுள்ள வெளிவீதியில் உற்சவ மண்டபமும் (வசந்த மண்டபம்) அதைச் சார்ந்த கட்டடங்களும் அமைக்கப்படும். இன்னும் அடியார்கள் ஆயிரக்கணக்கில் கூடிநின்று கண்டுகளிக்கக் கூடியதாகத் தேரோடும் வீதி ஒன்று வெளிப்புறச் சுவருக்கு வெளியே பெருமளவில் அமையும். அதனைச்சூழ்ந்த பகுதிகள் ஏனைய வீதிகளுக்கு ஒதுக்கப்படும். அங்கே பூந்தோட்டங்களும், அழகிய சோலைகளும், மடங்களும், சத்திரங்களும், அந்தணர்-அடியார்கள்-வேலையாட்கள் என்போர் இருக்கும் இல்லங்களும் அமையும். குருகுலப் பாடசாலை ஒன்றும், உயர்ந்த சமயப் படிப்புக்குக் கல்லூரி ஒன்றும், துறவிகள் தங்கி இளைப்பாறும்



*30-10-60* இல் திருக்கேதீச்சரத்தில் நடைபெற்ற கும்பாபிஷேகக் காட்சிகளிலொன்று.

சாலை ஒன்றும் இடம்பெறும். குருகுலப் பாட்சாலை இப்போதே ஆரம்பமாகியுள்ளது. அனாதைக் குழந்தைகள் இல்லத்தோடு இணைந்த மகளிர் நல நிலையம் ஒன்றும் நிறுவ ஏற்பாடாகியுள்ளது.

## மூர்த்திகள் பிரதிஷ்டை :

சார்வரி ஆண்டு ஐப்பசித் திங்கள் 15 ஆம் நாள் (31-10-60) திருக்கேதீச்சரத்து வரலாற்றிலே முக்கிய புனித தினமாகும். அன்று திருக்கேதீச்சரத்து ஆலயச் சுற்றுப்பிரகாரத்தில் புதிதாக அமைக்கப் பட்டிருந்த ஆலயங்களில் மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து குட முழுக்கு நடந்தது. புராதன மகாலிங்கம், விநாயகர், சுப்பிரமணியர், நடராசர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகளுக்கு ஓம மண்டலங்க ளோடு கூடிய கிரியை முறைகளமைந்த மகாகும்பாபிஷேகம் அப் புனிதநாளில் இனிது நிகழ்ந்தது. குடமுழுக்குச் செய்யப்பெற்ற மகாலிங்கம் மிகவும் பழைமையானது. இவ்விழாவில் நூற்றுக் கணக்கான சிவநேயச் செல்வர்கள் கலந்து திருக்கேதீச்சரநாதரின் இன்னருளைப்பெற்று ஏகினர்.

பத்தாண்டுகளாகத் திருக்கேதீச்சர புனருத்தாரண சபையார் செய்துவந்துள்ள அரும்பணிகளை அவ்வாலயத்தைத் தரிசிக்கும் அடி யார்கள் நேரில் கண்டுகொள்வர். திருக்கேதீச்சரத்திற்கு இறைவனைத் தரிசிக்க வரும் அடியார்கள் தங்குவதற்கான மடங்களையும், எளி தாகப் போக்குவரத்துச் செய்வதற்காகத் தார் இட்ட வீதிகளையும் அங்கே பார்க்கலாம். அல்லாமலும் குழாய்த் தண்ணீர் வசதியும் திருக்கேதீச்சரத்தில் செய்யப்பட்டுள்ளது. ஒழுங்கான பஸ் போக்கு வரத்தும் திருக்கேதீச்சரத்துக்கு இருக்கின்றது. கடைகளும் தொலை பேசியோடு கூடிய அஞ்சலகம் ஒன்றும் அங்கே நிறுவப்பட்டுள்ளன. மின்சார வசதியும் உண்டு.

சைவசமயத்தின் சின்னமாகத் தமிழ்ப் பண்பாட்டின் அறிகுறி யாகத் தமிழ்மொழியின் அடையாளமாகத் திருக்கேதீச்சரம் மன்னா ரில் திகழ்கின்றது. அங்கே அம்மையப்பராக அமர்ந்து இன்னருள் புரியும் இறைவனை வாழ்வில் ஒருமுறையாவது தரிசித்து வழிபட வேண்டியது ஒவ்வொரு ஈழத்துச் சைவர்களதும் கடமையாகும்.

"தொண்டர் நாள்தொறும் துதிசெய அருள்செய் கேதீச்சரமதுதானே".

திருச்சிற்றம்பலம்.

உ

# தேவாரகாலத் திருக்கேதீச்சரம்

திருக்கேதீச்சரத்து இறைவன் புகழைப் பாடிப் பரவியோர் இருவர். ஒருவர் ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர். இன்னொருவர் ஒன்பதாம் நூற்றுண்டிற் சைவம் வளர்த்த சுந்தரமூர்த்தி சுவாமிகள். கேதீச்சரத்து இறைவன் புகழைப் பாடிய அவர்கள் மாதோட்டத்தின் மாண்மையையும், பாலாவியின் பண்பையும் பாராட்டிப் பாடினர்.

திருக்கேதீச்சரத்து இறைவனின் பெருமையை நாவுக்கரசர் ''பூதியணி பொன்னிறத்தர் பூணு நூலார் பொங்கரவர் சங்கரர் வெண் குழையோர் காதர் கேதீச்சரம் மேவினர்'' என்று திருத் தாண்டகத்தில் குறிப்பிட்டுள்ளார். மணிவாசகப்பெருமான் 'குயிற் பத்திலும், திருவார்த்தையிலும்' இலங்கையில் மண்டோதரிக்கு இறைவன் அருள் செய்த தலம் என்று பாடியுள்ளது திருக்கேதீச் சரமே என்று எல்லோராலும் கருதப்படுகின்றது. கேது வழிபட்டமை யால் 'கேதீச்சரம்' என்ற பெயரை இத்தலம் பெற்றது எனக் கூறுவர்.

## நோய் தீர்க்கும் பெருமான்:

கேதீச்சரப் பெருமானை வழிபடுவோர் வினைகளும் நோய்களும் தீரப்பெற்றுப் பெருவாழ்வு பெறுவர். இந்த உண்மையினைத் திரு ஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருக்கேதீச்சரப் பதிகத்தில் பல விடங்களிற் குறிப்பிட்டுள்ளார். ''கேடிலாத கேதீச்சரந் தொழு தெழக் கெடுமிடர் வினைதானே'' என்றும், ''அண்ணல் கேதீச்சரம் அடைவார்க்கு அருவினை யடையாவே'' என்றும், ''முடிகள் சாய்ந் தடி பேணவல்லார் தம்மேல் மொய்த்தெழும் வினைபோமே'' என் றும் திருஞானசம்பந்தப் பெருமான் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கேதீச்சரத்தான், ''அங்கத்துறு நோய்கள் அடியார்மேல் ஒழித்தருள்வான்'' என்றும், ''வெய்யவினை யாயவடியார்மேல் ஒழித்தருள்வான்'' என்றும், ''ஊனத்துறு நோய்கள் அடியார்மேல் ஒழித்தருள்வான்'' என்றும் ''குறையாத் தமிழ்'' சாற்றியுள்ளார்.

## மாதோட்ட வளம் :

தேவார காலத்தில் மாதோட்டத்தில் ஓங்கி வளர்ந்த பொழில்கள் அழகு செய்தன. அங்கே மாமரங்களும், கமுகுகளும், வாழைகளும் நெருங்கி வளர்ந்து காட்சிகொடுத்தன. மாமரங்களில் தொங்கிய கனிகளையும், கதலியில் பழுத்திருந்த பழங்களையும் மந்திகள் உண்டு களித்தன. சோலைகளிலுள்ள நறுமலர்களில் வண்டுகள் வதிந்திருந்தன. இவ்வாறு நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே அமைந்த மாதோட்டத்தைக் ''கனைகடல் கடிகமழ் பொழில் அணி மாதோட்டம்'' என்றும், ''மாவும் பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்ட நன்னகர் புறமருவிய மாதோட்டம்'' என்றும் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாடியுள்ளார். இவ்வடிகள் நம் அகக்கண்முன்னே அழகிய பொழிலையும் அங்கே கனியுண்டு களிக்கும் மந்திகளையும் காண்பிக்கின்றனவல்லவா? மாதோட்டத்திலுள்ள மாஞ்சோலையின் மாண்பினை ''மாவின் கனிதூங்கும் பொழில் மாதோட்ட நன்னகர்'' என்று தேவாரத்திலே சொற்களால் தீட்டுகின்றார் சுந்தரர்.

## தேனுண்ணும் வண்டுகள் :

மாதோட்டத்துப் பூஞ்சோலையிற் புதுமலர்களில் வண்டுகள் பல வதிந்தன. அவை இனிய தேனை விரும்பி உண்டு மதிமயங்கி ரீங்காரஞ்செய்து பண்கள் பாடித் திரிந்தன. அவ்வண்டுகளின் இசை யாழின் இசையைப் போன்று சுந்தரர் செவிகளில் ஒலித்தது. தாம் கண்டதையும் கேட்டதையும் ''இறையார் பொழில் வண்டு யாழ் செய்யும் கேதீச்சரத்தானே'' என்றும், ''மட்டுண்டு வண்டாலும் பொழில் மாதோட்ட நன்னகர்'' என்றும், ''வரிய சிறை வண்டு யாழ் செயும் மாதோட்ட நன்னகர்'' என்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிப் பரவியுள்ளார்.

## அழகிய காட்சி :

மாதோட்ட நன்னகரிலுள்ள சோலை ஒன்றிலே அழகான காட்சி ஒன்றினை ஞானக்கண்ணாற் கண்டு வியக்கின்றார், சம்பந்தர். மாமலர்ப் பொழிலிடையே மயில் ஒன்றைக் கண்டார். அந்த மயில்

அழகாக ஆடுவதையும், அதன் நடனம் வண்டுகளின் இன்னிசைக்கு இயைய அமைந்து இருந்ததையும் நோக்கினர். அக்காட்சி சம்பந்தப் பெருமானின் கண்ணையும் கவர்ந்துள்ளது. இக்கவின்காட்சியை

''பண்டு நால்வருக்கு அறமுரைத்தருளி'' என்னும் தேவாரத்தில்,

''வண்டு பண்செய மாமலர்ப் பொழிலிடை மஞ்ஞை நடமிடும்''

என்று அழகாகப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

## தெங்கம் பொழில் :

அக்காலத்தில் மாதோட்ட நன்னகரில் திருக்கேதீச்சரத்தைச் சூழ்ந்து தென்னைகள் நிரைநிரையாகச் செழித்து வளர்ந்து காட்சி கொடுத்தன. அன்றைய இந்த இயற்கை எழிற் காட்சியினைத் ''தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரத்தானே'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் அருளிச்செய்த தேவாரம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். ஏன்? இன்னும் அங்கு தென்னைகள் செழித்துவளர்கின்றனவே! கடற்கரையை அடுத்துள்ள நிலமாதலாலும், தென்னை செழித்து வளர உகந்த நிலமாக மாதோட்டத்தின் தென்பாகம் இருப்பதாலும் தேவாரகாலத்திற் தென்னஞ்சோலை திருக்கேதீக்சரத்தைச் சூழ்ந்திருந்தது என்பது தெற்றெனத் தெரிகின்றது.

## பொன் கொழிக்கும் பூமி :

தேவார காலத்தில் மாதோட்ட நன்னகர் திருவுறையும் பொன்னகராகத் திகழ்ந்தது. முத்துக்களும் வலம்புரிச் சங்குகளும் விலையுயர்ந்த மணிகளும் அங்கு குவிந்து கிடந்தன. மாதோட்ட நகரின் செல்வப் பெருக்கினைத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் ''பொன்னிலங்கிய முத்து மாமணிகளும் பொருந்திய மாதோட்டம்'' என்று பாடியுள்ளார். இன்னும் மாதோட்டத்தின் அயலிலுள்ள முழங்கு திரைப் பெருங்கடலில் வெண்சங்குகள் மலிந்து கிடந்தன என்பதை ''வானத்துறு மலியுங்கடல் மாதோட்ட நன்னகர்'' என்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் கூற்று மேலும் வலியுறுத்துகின்றது.

## சிறந்த துறைமுகம் :

தேவாரகாலத்தில் மாதோட்டம் சிறந்த துறைமுகமாகவும் விளங்கியது. அங்கே சங்குகளும், முத்துக்களும், மணிகளும் மட்டுமன்றி பல்வேறு நாடுகளிலிருந்து இறக்குமதியான பண்டங்களும் குவிந்து கிடந்தன. வாணிபத்தில் சிறப்புற்று விளங்கிய மாதோட்ட நன்னகரில் வாழ்ந்த மக்கள் எவ்வித குறையுமின்றிப் பல செல்வங்களும்பெற்று இன்புற்றனர். இவர்களின் இன்ப வாழ்விற்கு எறி திரை கடலும் உறுதுணையாய் அமைந்தது. இதனாலேயே '' வையம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர் '' எனத் தேவாரம் இந்நகரினைப் புகழ்ந்து பேசுகின்றது. மேலும் பல பண்டங்களை ஏற்றிய நாவாய்கள் அத்துறைமுகத்திற்கு வருவதும் போவதுமாயிருந்தன. பல நாவாய்கள் துறைமுகத்தில் காணப்பட்டன என்பதை '' வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில் '' என்னும் தேவார அடி இனிது புலப்படுத்தி நிற்கின்றது. எனவே மாதோட்டம் அன்று மிகவும் பெரியதொரு துறைமுகமாக விளங்கிற்று என்பதும், அதனையடுத்திருந்த கடல் கப்பற்போக்கு வரத்திற்கு ஏற்றதாக இருந்ததென்பதும் தெளிவாகின்றது.

## பாலாவி :

தேவார காலத்தில் மாதோட்டம் எழில் பெற்றுத் திகழ்வதற்கு அதன் நடுவண் இருந்த பாலாவியும் ஒரு காரணமாகும். மாதோட்டத்தில் வாழ்ந்த மக்களுக்குப் பல வழிகளிலே பாலாவி பயன்பட்டது. பாலாவியிற் பாய்ந்து சென்ற புது நீரினை மறித்து இடையிடையே தேக்கிப் பல மைல்களுக்குப் பரந்து கிடந்த செந்நெல் வயல்களுக்கு மாதோட்ட மக்கள் பாய்ச்சிப் பயிரிட்டனர். பாலாவித் தண்ணீரினாலே பசுமைபெற்று விளங்கிய வயல் நிலங்கள் மாதோட்ட நகரின் வளத்தை மேம்படுத்தின.

தேவார காலத்திற் பாலாவி மிகவும் ஆழமுடையதாய்ப் பரந்து நீண்ட ஆற்றுப்படுக்கையினைக் கொண்டதாய் விளங்கிற்று. கடலிடைக் கலந்த பாலாவியின் பெருக்கினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் '' பரியதிரை எறியவரு பாலாவியின் கரைமேல் '' என்று தமது தேவாரத்திலே தீட்டுகின்றார். 'பாலாவியிலே தீர்த்தமாடுவோர் பாவமும் பிணியும் நீங்கி முத்தியின்பத்தைப் பெறுவர்' என்று 'நக்கண

கைலாச மான்மியம்' என்னும் நூல் கூறுகின்றது. "பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்" என்னும் சுந்தரமூர்த்தி நாயனரின் கூற்று இதனை மேலும் வலியுறுத்துகின்றது.

**மணவாளன் :**

மாதோட்டத்தின் மத்தியில் எழுந்தருளியிருக்கும் இறைவன் நித்திய மணவாளனாக விளங்குகின்ருன் என்று தேவாரம் புகழ்கின்றது. "மத்தம் மதயானையுரி போர்த்த மணவாளன்" எனப் போற்றிப் பாடுகின்ருர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அங்ஙனம் அவர் நித்திய மணவாளனாகில் அங்கு நாள்தோறும் மணமுரசு ஒலிக்கவேண்டுமே? ஆம், மணமுரசு சுந்தரர் செவிகளில் ஒலித்தது. மாதோட்ட நகரின் அயலிலுள்ள மறிகடல் நாள்தோறும் மங்கல ஒலி செய்துகொண்டே இருக்கும்.

இதனை

"மாடெலாம் மணமுரசெனக்
கடலின் தொலிகவர் மாதோட்டம்"

என்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரப் பதிகம் ஒன்றிலே வரும் இவ்வடி திருக்கேதீச்சரத்து மணவாளனின் மங்கல முரசு எது என்பதை எமக்குத் தெரிவியா நிற்கின்றது. அக்கடல் இன்று ஆழம் குறைந்ததாய் இருந்த போதிலும் பண்டு பாய்க்கப் பல்கள் பல ஓடிய மறிகடலாகத் திகழ்ந்தது. அக்கடலில் சங்குகள் மலிந்து கிடந்தன. அதன் அயலில் மாதோட்டம் புகழ்பெற்றுச் சிறந்த துறைமுகமாக விளங்கியது. அக்கடல் 'கனைகடல்' எனவும் 'மறிகடல்' எனவும் 'வங்கம் மலிகின்ற கடல்' எனவும் 'வானத்துறு மலியும் கடல்' எனவும் 'கறையார் கடல்' எனவும் தேவாரங்களிற் புகழ்ந்து பேசப்படுகிறது.

எனவே திருக்கேதீச்சரத்து இறைவன் இன்னருளைப் பாடிய நாயன்மார்கள் மாதோட்டத்தின் சீரையும் சிறப்பையும் பாலாவியின் பாங்கையும் அழகாகத் தேவாரங்களில் எடுத்துரைத்துப் போந்தார்கள். பண்டு எழில் மிக்குத் திகழ்ந்த இப்புனித நகர் இடைக் காலத்தில் சிதைவுற்றுக் காடடர்ந்து கிடந்ததை எண்ணுந்தோறும் சைவப்பெருமக்களின் உள்ளங்கள் நைந்து வருந்துமன்ருே.

திருச்சிற்றம்பலம்.

# திருமுறைகளில் திருக்கேதீச்சரம்

சைவத் திருமுறைகள் திருக்கேதீச்சரத்து இறைவனையும், கௌரியம்பாளையும் பலவிடங்களிற் குறிப்பிடுகின்றன. அக்குறிப்புக்கள் வாயிலாகக் கௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சரநாதரின் அருட் தோற்றத்தையும், அப்பெருமான் அடியார்களின் நோய்தீர்த்து இன்னருள் செய்யுந் திறனையும் அறியமுடிகின்றது. இன்னும், மாதோட்டத்தின் மாண்பையும், பாலாவியின் பண்பையும் பல தேவாரங்கள் பாராட்டிப் பேசுகின்றன. மேலும், திருக்கேதீச்சரத்தின் பழமையையும், வரலாற்றையும் அறிந்துகொள்ள அவை பெரிதும் உதவுகின்றன.

## ஏழாந் திருமுறையில் :

ஏழாந் திருமுறையிலிடம்பெறும் சுந்தரமூர்த்திநாயனர் அருளிச் செய்த திருக்கேதீச்சரப் பதிகம் வாயிலாகப் பல உண்மைகளை நாம் அறிய முடிகின்றது. இப்பதிகத்திலுள்ள பல தேவாரங்கள் திருக்கேதீச்சரத்து இறைவனின் தோற்றத்தை அழகாக எடுத்துரைக்கின்றன. வேறு சில தேவாரங்களில் திருக்கேதீச்சரத்துப் பெருமான்,

'அங்கத்துறு நோய்கள் அடியார்மேல் ஒழித்தருளுபவன்' என்றும்,

'அடியார்மேல் வெய்யவினை ஒழித்து அருளுபவன்' என்றும்,

'ஊனத்துறு நோய்கள் அடியார்மேல் ஒழித்தருளுபவன்' என்றும் குறிப்பிடப்பெற்றுள்ளன.

'பரியதிரை எறியவரு பாலாவி' என்றும்,

'பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவி' என்றும்,

'பத்தாகிய தொண்டர் தொழுபாலாவி' என்றும் பாலாவியின் பண்பைச் சில தேவாரங்கள் குறிப்பிடுகின்றன.

'வங்கம் மலிகின்ற கடல் மாதோட்டம்' என்றும்,

'வரியசிறை வண்டு யாழ் செய்யும் மாதோட்டம்' என்றும்,

'வையம் மலிகின்ற கடல் மாதோட்டம்' என்றும்,

'வானத்துறு மலியுங்கடல் மாதோட்டம்' என்றும்,

'மட்டுண்டு வண்டாலும் பொழில் மாதோட்டம்' என்றும் 'மாவின் கனி தூங்கும் பொழில் மாதோட்டம்' என்றும் வேறு சில தேவாரங்கள் மாதோட்டத்தின் மாண்பைப் பாராட்டிப் பேசுகின்றன. இவற்றையெல்லாம் சுந்தரமூர்த்தி நாயனரின் திருக்கேதீச்சரப் பதிகத்தைப் படிப்போர் இனிது கண்டுகொள்வர்.

## இரண்டாந் திருமுறையில்:

இரண்டாந் திருமுறையிலிடம்பெறும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் அருளிச்செய்த திருக்கேதீச்சரப் பதிகத்தை நோக்குவாம். இப்பதிகத்திலுள்ள சில தேவாரங்கள்,

'கேதீச்சரங் கைதொழக் கடுவினையடையா' என்றும்,

'கேதீச்சர மடைவார்க்கு அருவினையடையாவே' என்றும்,

'முடிகள் சாய்ந்தடி பேணவல்லார் தம்மேல் மொய்த்தெழும் வினைபோம்' என்றும்,

'தொண்டர் நாள்தொறும் துதிசெய அருள்செய் கேதீச்சரம்' என்றும் குறிப்பிடுகின்றன. மேலும் திருக்கேதீச்சரத்து இறைவனுடைய தோற்றத்தைப் பெண்ணெர் பாகத்தர், பிறைதவழ் சடையினர், பொடிகொண் மேனியர், புலியதளரையினர், வடிகொண் மூவிலை வேலினர், கேழல் வெண் மருப்பணிந்த நீண் மார்பர், 'பேழைவார் சடைப் பெருந்திரு மகடனைப் பொருந்த வைத்தார்' என்றும், 'ஒரு பாகம் மாழையங்கையற் கண்ணிபாலருளிய பொருளினர்' என்றும், தேவாரங்களில் திருஞானசம்பந்தர் குறிப்பிட்டுள்ளார்.

மாதோட்டத்தின் சிறப்பையும் சில தேவாரங்களில் சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார்.

'கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்' என்றும்,

'இருங்கடற் கரையினி லெழிறிகழ் மாதோட்டம்' என்றும்,

'வாழையம் பொழின் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டம்' என்றும்,

'வண்டு பண்செய மாமலரப் பொழின் மஞ்ஞை நடமிடு மாதோட்டம்' என்றும்,

'கடல்வாயப் பொன்னிலங்கிய முத்துமாமணிகளும் பொருந்திய மாதோட்டம்' என்றும்,

'மாவும் பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்டம்' என்றும் தேவாரங்கள் குறிப்பிடுகின்றன.

## ஆறுந் திருமுறையில் :

ஆறுந் திருமுறையில் திருநாவுக்கரசு நாயனுர் திருக்கேதீச்சரத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதைப் பார்ப்பாம். திருவீழிமிழலைப் பதிகத்திற் பின்வரும் பாடல் இடம்பெறுகின்றது.

'பூதியணி பொன்னிறத்தர் பூண்நூலர்
பொங்கரவர் சங்கரர் வெண்குழையோர் காதர்
கேதீச்சர மேவினுர் கேதாரத்தார்
கெடில வடவதிகை வீரட்டத்தார்
மாதுயரந் தீர்த்தென்னை வுய்யக் கொண்டார்
மழபாடிய மேவிய மழுவாளனுர்
வேதிகுடியுளார் மீயச்சூரார்
வீழி மிழலையே மேவினுரே'.

இத்தேவாரத்தில் திருக்கேதீச்சரப்பெருமானுடைய தோற்றத்தை அப்பர் சுவாமிகள் அழகாக எடுத்துக் காட்டுகின்றுர். திருக்கேதீச்சரப்பெருமான் விபூதியணிந்த பொன்போன்ற நிறத்தை உடையவர். பூண்நூலை உடையவர். சினங்கொண்ட அரவத்தை அணிந்துள்ளார். வினைகளைப் போக்குகின்றவர். வெண்ணிறமான காதணிகளை உடையவர் என்று இத்தேவாரம் குறிப்பிடுகின்றது. எனவே திருவீழிமிழலையைப் பாடிய திருநாவுக்கரசு நாயனுர், திருக்கேதீச்சரத்துப் பெருமானையும் தமது தேவாரத்தில் இங்கு குறிப்பிடக் காண்கின்றேம்.

## எட்டாந் திருமுறையில் :

மணிவாசகப் பெருமான் திருவாசகத்தில் திருக்கேதீச்சரத்தைப் பற்றி எங்ஙனம் குறிப்பிட்டுள்ளார் என்பதை நோக்குவாம். குயிற்

பத்தில் வரும் ஒரு பாடலிலும், திருவார்த்தையில் வரும் ஒரு பாடலிலும் மணிவாசகப்பெருமான் குறிப்பிடுவது திருக்கேதீச்சரமாகவே இருக்கவேண்டுமென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

குயிற்பத்து

ஏர்தருமேழ் உலகேத்த எவ்வுருவுந் தன்னுருவாம்
ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர் வண்டோதரிக்குப்
பேரருளின் பமளித்த பெருந்துறை மேயபிரானைச்
சீரியவா யாற்குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்.

பொழிப்புரை: ஒலிக்கும் கடல்சூழ்ந்த தெற்கண் உள்ளதாகிய அழகிய இலங்கைக்கு அரசியாகிய வண்டோதரிக்கு, இன்பத்தின் எழுச்சியைத் தரும் மேலுலகத்தவர் எல்லாரும் போற்ற, எத்தகைய வடிவும் தன் திருவடிவேயாகப் பேரருளால் வடிவுகொண்டு, பேரின்பத்தை அளித்த பெருந்துறைப்பிரானும், தென்பாண்டி நாடனும் ஆகிய அவனைக் குயிலே! நின்னுடைய மிகுபுகழ் படைத்த வாயால் என்பால் வரக் கூவுவாயாக, என்றவாறு.

திருவார்த்தை

பின்வரும் பாடல் வண்டோதரிக்கு அருள்செய்த தன்மையை அறிபவரே எம்பிரானுர் ஆவர் எனத் தோழியர் கூறியதாக அமைந்துள்ளது.

''வந்(து) இமை யோர்கள் வணங்கி ஏத்த
மாக்கரு ணைக்கட லாய் அடியார்
பந்தனை விண்(டு) அற நல்கும் எங்கள்
பரமன் பெருந்துறை ஆதி அந்நாள்
உந்து திரைக்கடலைக் கடந்(து) அன்று
ஓங்கு மதில் இலங் கைஅதனில்
பந்தணை மெல்விர லாட்(கு) அருளும்
பரி(சு) அறிவார் எம் பிரானுவாரே''.

பொழிப்புரை: பெருந்துறைக்கண் இமையோர்கள் வந்து வணங்கித் தன்னை ஏத்தா நிற்க, அடியவர்கட்குப் பாசக்கட்டு நீங்குமாறு

அருளை நல்கும் எங்கள் மேலோனும், திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் முதல்வனும் ஆகிய இறைவன் அந்நாளில், வீசுகின்ற திரைகளையுடைய கடலைக் காலாலே கடந்து சென்று, மதில் ஓங்கா நிற்கும் இலங்கை நகரதனுட்புக்கு, பந்தணைக்கும் மென்மையாகிய விரலையுடைய வண்டோதரிக்கு அருள்செய்த தன்மையை எவர் அறிவாரோ அவரே எம்பிரானர் ஆவர், என்றவாறு.

இவ்வாறு குயிற்பத்திலும், திருவார்த்தையிலும் கூறியபடி வண்டோதரியின் பொருட்டு நிகழ்த்திய திருவிளையாடல் திருக்கேதீச்சரத்திற்றான் நிகழ்ந்திருத்தல் வேண்டுமெனவும், அவனுடைய தந்தையாகிய மயன் வாழ்ந்த இடம் மாதோட்டமெனவும் சரித்திர ஆராய்ச்சியறிஞர் ஸ்ரீமான் வ. குமாரசாமிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இது உண்மையாயின் திருக்கேதீச்சரத்தின் தொன்மையையும் பெருமையையும் எத்தகையதென ஒருவாறு யூகித்துக்கொள்ளலாமல்லவா? எனவே இவற்றையெல்லாம் எட்டாந் திருமுறை வாயிலாக அறியவேண்டியிருக்கின்றது.

### பன்னிரண்டாந் திருமுறையில்:

சேக்கிழார் பெருமான் செய்தருளிய திருத்தொண்டர் புராணத்திலும் திருக்கேதீச்சரத்தைப்பற்றிய குறிப்புக்கள் இடம்பெறுவதைக் காணலாம். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் வரலாற்றைக் கூறும் போதும், சேரமான்பெருமான் நாயனர் புராணத்தைக் கூறும் போதும் சேக்கிழார்பெருமான் திருக்கேதீச்சரத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

அந்நகரி லமர்ந்தங்க ணினிது மேவி
யாழி புடைசூழ்ந் தொலிக்கு மீழந்தன்னின்
மன்னு திருக்கோணமலை மகிழ்ந்த செங்கணர்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப்பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்
திருக்கேதீச்சரத்தண்ணர் செய்ய பாதம்
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்ப ரோடும்
உலவாத கிழிபெற்றார் உவகை யுற்றார்.


"மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன் வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடை சாத்திப் பயில்கின்ருர் பாம்பணிந்த
சென்னியர் மாதோட்டத்துத் திருக்கேதீச்சரம் சார்ந்த
சொன்மலர் மாலைகள் சாத்தித் தூரத்தே தொழுத மர்ந்தார்".

இங்கே சேக்கிழார் பெருமான் மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரத்தைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர், சேரமான் பெருமான் நாயனுருடன் சென்ற சுந்தரமூர்த்தி நாயனுருக்கும், வணங்கியதைக் குறிப்பிடுகின்ருர். இரண்டாவது பாடலில் திருக்கேதீச்சரம் சார்ந்த என்பதைத் திருக்கேதீச்சரம் சார்ந்து என்றும் குறிப்பிடுவர்.

ஆகவே, திருக்கேதீச்சரத்தைப்பற்றிய வரலாற்றை அறிந்து கொள்வதற்குத் திருமுறைகள் பெரிதும் பயன்படுகின்றனவென்பதும், அவற்றைக்கொண்டு திருக்கேதீச்சரத்தின் பழைமையையும், பெருமையையும் சைவ உலகம் அறிந்து மகிழ முடிகின்றதென்பதும் இனிது தெளிவாகின்றது.

திருச்சிற்றம்பலம்.

## புராதன மகாலிங்கம்



பழைய சிவலிங்கம் இப்பொழுது மேற்குப் பிரகாரத்தில் பிரதிஷ்டை செய்யப்பெற்றிருக்கிறது. கி. மு. 500 ஆம் ஆண்டுகளுக்கு முன்னரே (விசயன் இலங்கைக்கு வரமுன்னம்) பூர்வீக குடிகளாகக் கருதப்படும் நாகரும் இயக்கரும் சிவ வழிபாடுசெய்த லிங்கம். திருக்கேதீச்சரத்தில் தோண்டி எடுக்கப் பெற்ற புதைபொருள்.

உ

# நாகர்களும் திருக்கேதீச்சரமும்

இந்திய இலங்கைச் சரித்திரத்தில் நாகர் என்னும் ஒரு மக்கட் கூட்டத்தினர் அடிக்கடி கூறப்படுகின்றனர். இலங்கையின் வடபகுதி பண்டைக்காலத்தில் நாகதீபம் என வழங்கப்பட்டது. யாழ்ப்பாணக் குடாநாடு அந்நாகதீபத்தின் ஒரு பகுதியாகக் கொள்ளப்பட்டது. புத்தர் அக்காலத்தில் நாகதீபமாகிய யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வந்தாரென்று மாகாவம்சம் கூறுகின்றது. மணியக்கிகன் என்னும் நாக அரசன் கலியாணி என வழங்கப்பட்ட களனியாவில் அரசு செலுத்தினனெனவும், அவன் நாகதீப அரசர்களுக்கு நெருங்கிய தொடர்புடையோனென்றும் மகாவம்சம் கூறுகின்றது. நாகதீபத்தின் சிறந்த துறைமுகம் மாதோட்டமென்பதும் சரித்திர உண்மைகளிலொன்று. ''நாகதீபந் தொடங்கி களனியாவரை நாகர்களே வாழ்ந்தனர். இவர்கள் விசயனுக்கு முன் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த மக்களாக வேண்டும்'', என Ceylon Historical Quarterly என்னும் ஆராய்ச்சி வெளியீடு கூறுகின்றது.

நாகர்களைப் பற்றி மகாவம்சம் தெளிவாகக் கூறியபோதிலும் இக்காலச் சிங்கள சரித்திர நூலாராச்சியாளர், 'நாகர்கள் எனக் கூறப்படுவோர் மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்களல்லவென்றும், அவர்கள் கற்பனை மனிதர்கள்' என்றும் ஆராய்வின்றிக் கூறி மகிழ்கின்றனர். இக்கூற்றுக்குக் காரணமென்னவெனில், நாகர்களை மக்களெனக் கூறிவிட்டால், விசயனுக்கு முன்பே மக்கள் இலங்கையில் நாகரிகப் பண்புகளுடன் வாழ்ந்தார்களென்பதை, அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய முடிபு ஏற்பட்டுவிடுமென்பதே.

இருக்குவேத காலத்திலேயே நாகர்கள் வட இந்தியாவிலிருந்தார்களென்பதற்கு, இருக்குவேத மந்திரங்களில் குறிப்புகளுண்டு. இந்திரனின் பகைவர்களிலொருவன் விருத்திரன். இவனை அகி என்றும் இருக்குவேதம் கூறும். (இரு – 172) அகி என்பதின் பொருள் சர்ப்பம் என்பதாம். விருத்திரன், தாஸ்யுஸ் ( Dasyus ) என்னும்

மக்களின் தலைவன்; அர்ப்பித என்னும் வேறொரு நாகத் தலைவனும் இந்திரனின் பகைவருள் ஒருவனுகக் கூறப்படுகிருன். யுத்தத்திற் குச் செல்லும்பொழுது தங்கள் தேர்களில் ஆராய்ச்சியாளர் கூறும் முடிபுகளிலொன்று மகாபாரதத்தில் நாகர்களைப்பற்றிப் பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. காண்டாவனதகனத்தில், நாகர் கள் அவ்விடத்தைவிட்டு வெளியேறிய நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன.

சிந்து நதிக்கரைப் பள்ளத்தாக்கில் காணப்பட்ட புதைபொருள் களில் நாகரது சின்னங்கள் காணப்பட்டன. அங்கு வாழ்ந்த நாகர்கள் பின் ஆரியர்களால் அழிக்கப்பட்டனரென்றும், அவர் களின் சந்ததியார் இன்றும் மலைப் பிரதேசங்களில் காணப்படுகின் றனரென்றும், Will Durrant என்னும் சரித்திர நூல் ஆசிரியர் கூறு கின்ருர்.

கி. மு. ஆரும் நூற்ருண்டில் சிசுநாகன், பிம்பிசாரன் என்னும் நாக அரசர்கள் மகத நாட்டை அரசாண்டார்களென இந்திய சரித் திரம் மிகத் தெளிவாகக் கூறுகின்றது. நாகர்களே புத்தரின் உப தேசங்களைக் கேட்டு, முதலில் அவரைப் பின்பற்றிய மக்களெனக் கருதக்கூடிய விதத்தில், நாகத் தலைவர்களின் வடிவங்கள் ஆந்திர நாட்டுப் பௌத்த சிற்பங்களில் காணப்படுகின்றன.

முற்காலத்தில் இந்திய நாட்டு நாகர்கள் எகிப்து நாட்டுக்குப் படையெடுத்துச் சென்றனர் என்று, வண. பிதா. ஹெரஸ் அவர்கள் கூறுகின்ருர். எகிப்துக்கும் வங்காள நாட்டுக்குந் தொடர்பிருந்த தாகச் சுதன்சு குமார்றே (Suthansu Kumaray) தமது Pre-Historic India and Ancient Egypt என்னும் ஆராய்ச்சி நூலிற் கூறுகின்ருர். எகிப்திய அரசர்கள் வங்காளத்தைச் சிலகாலம் ஆண்டார்கள் என்பதற்கு ஆதாரமுண்டென்கிருர் இவ்வாசிரியர். இந்நிகழ்ச்சி கி. மு. 1358 இல் நிகழ்ந்ததென்பது அவர் கூற்று. வங்காளத்தின் வடகிழக்கு மூலை யில் இன்றும் நாகர் இனத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனரென் பதை எவர்தான் மறுப்பர்?

இந்திய சரித்திர வரலாறு, நாணய வரலாறு, கற்சாசனம் முத லிய ஆதாரங்களைக்கொண்டு, நாகர்கள் இந்தியாவில் கி. பி. இரண் டாம் நூற்ருண்டு தொடங்கி, நான்காம் நூற்ருண்டு வரை சிறப்

புடன் அரசு வீற்றிருந்தார்களென ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். குப்தர்களுக்கு முற்பட்ட நாக அரசர்கள் வரலாறு புராணங்களில் காணப்படுகின்றது. சமுத்திரகுப்தனின் கற்றூண் சாசனம் பல நாக சிற்றரசர்களைப் பற்றிக் கூறுகின்றது. வட நாட்டில் பத்மாவதி என்னும் நகரில் (மத்திய பாரதம்) ஒன்பது அரசர்களைக் கொண்ட பரம்பரை வாழ்ந்ததாகவும், வடமதுரையில், ஏழு அரசர்களைக்கொண்ட பரம்பரை வாழ்ந்ததாகவும், வாயுபுராணமும், பிரமாண்டபுராணமும் கூறுகின்றன.

பத்மாவதி நாகர்கள் சிவவழிபாடுடையோரென்பது அவர்களது நாணயங்களிற் திரிசூலமும், இடபமும் இடப்பட்டிருப்பதால் அறியப்படுகின்றது. பாதம் பாவையா என்னும் இடத்தில் சுவர்ணவிந்து என்னும் சிவலிங்கம் பீடம் காணப்பட்டமை அவர்களது நெறி சைவம் என்பதற்குச் சான்றாகும். நாணயங்களிலிருந்து பின்வரும் நாக அரசர்கள் அறியப்படுகின்றனர். பீமநாகன், வியாக்கிர நாகன், விபுநாகன், கந்தநாகன், வசுநாகன், தேவநாகன், பிருகஸ்பதிநாகன், பவநாகன், கணகதிநாகன் என்னும் அரசரின் நாணயங்கள் வடமதுரையில் ஏராளமாகக் காணப்பட்டன.

மைசூர்ப் பகுதியிலும் கிறீத்த சகாப்தத்தின் தொடக்கத்தில் நாகர்கள் வசித்தனர். இவர்களின் அரசர்கள் சாதவாகன அரசினரின் கீழ் அமைந்து மாகாண அதிபர்களாக ஆதிக்கஞ் செலுத்தி வந்தனர். சாதவாகன ஆதிக்கம் அழிந்தவுடன் இவர்களே அரசர்களாயினர். கி. மு. மூன்றாம் நூற்றாண்டின் சாசனமொன்று, நாகனாகிய புலுமாவி என்னுஞ் சேனைத் தலைவனைப்பற்றிக் கூறுகின்றது. வேறொரு சாசனம் சூட்டுகுலநந்திசதகர்னி, நாகர் ஆதிக்கத்தைத் தென்திசைவரை பரப்பினான் என்று கூறுகின்றது. இவன் வைஜந்தி நாட்டை கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் ஆண்ட மன்னனாவான். அமராவதி ஜக்கையப்பேட்டை முதலிய இடங்களில் காணப்பட்ட சாசனங்களில் நாகப்பெயர்கள் அநேகம் காணப்படுகின்றன.

மெச்சிக்கோ நாட்டை ஆண்ட பிற்கால அரசர்கள் நாகவழிபாடுடையோராகவிருந்தனர், என்றும் அந்நாட்டு நாகவழிபாடும், நாககருடக்கற்பனைக்கதைகளும், இந்தியாவிலிருந்தே அங்கு பரவிய

தென சமஸ்லால் (Chamanlal) தமது "இந்து அமெரிக்கா" என்னும் நூலில் விரித்து எழுதுகின்ருர். மெக்சிக்கோவின் மய (Maya) நாகரிகம் எல்லாவிதங்களிலும் இந்துக்களின் நாகரிகத்தை ஒத்த தென்பது அந்நாட்டு நாகரிகப் பண்புகளை ஆராய்ந்தார் கூற்று. மய என்னுஞ் சொல் இந்தியாவிலிருந்தே அங்கு வந்ததென்பதும் ஒரு சாரார் துணிபு. மயமக்கள் சிறந்த சிற்பிகள்.

**"The Mayas, the Astecs and the other races of Ancient America had master builders and great architects whose works, though in ruins, are still marvels of the present day".**

இக்கால மக்களும் ஆச்சரியப்படத்தக்கவிதமாக மயமக்கள் தங்கள் அரண்மனைகளையும் கோயில்களையும் அமைத்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. மயன், நாகர் குலத்தவன் என்றும் மாதோட்டத்தில் மயன் குலத்தவர்கள் சிறந்த கோட்டைகளைக் கட்டினுர்களென்றும் முதலியார் இராசநாயகமவர்கள் தமது "பூர்வீக யாழ்ப்பாணம்" என்னும் நூலில் கூறியுள்ளார். மயனின் மகளே இராவணனின் மனைவியாகிய வண்டோதரி. இவர் சிறந்த சிவபக்தராக விளங்கினுர் என்பதைத் திருவாசகத்தால் அறிகின்ருேம்.

**The ancient Mexican Pyramid (Gopura) Temples were similar to Pyramid temples of India, the Home of Pyramids Mackenzie.**

பண்டைய மெச்சிக்கோவின் கோபுரக் கோயில்கள், கோபுரங்களின் தாயகமாகிய இந்தியாவின் கோபுரக் கோயில்களை ஒத்தன என மக்கன்சி என்பவர் கூறுகின்றனர்.

நாம் இதுகாறும் கூறியவற்றிலிருந்து நாகர்கள், கற்பனை மனிதர்களல்லவென்பதும், அவர்கள் நாகரிக மக்களே யென்பதும் அவர்கள் இந்தியாவில் மிகப் பண்டைக்காலந் தொடங்கி வாழ்ந்து வந்தனர் என்பதும், அவர்கள் ஆரிய மக்கள் இனத்தைச் சேராதவர்கள் என்பதும், அவர்களது சமயநெறி, சிவலிங்க வழிபாடுடைய சைவ சின்னங்களைப் பொறித்து மகிழ்ந்தனரென்பதும், தெளிவாக அறியப்படும். இன்றும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நாக சம்பந்தமுடைய சைவ ஆலயங்கள் காணப்படுகின்றன. நாகதம்பிரான்

கோயில் செம்பியன்பற்றிலும், நாகம்மாள் கோயில் நயினுதீவிலும் சைவத்தலங்களாக இன்றும் விளங்குகின்றன. பூநகரியில் நாக தேவன் துறையென ஒருதுறை இன்றுமிருக்கிறது.

வடஇலங்கை நாகர்களின் மொழி தமிழென்பதும், அவர்களுக்கும் தென்தமிழ் நாட்டிற்கும் நெருங்கிய தொடர்பிருந்த தென்பதும், சங்ககால இலக்கியங்களால் அறியப்படும். இந்நாகர்களால் வழிபடப்பட்ட ஆலயங்களிலொன்றே மாதோட்டத்திலுள்ள திருக் கேதீச்சரம். இத்தலம் இராகு, கேதுக்களால் வழிபடப்பட்ட தெனப் புராணங்கள் கூறுவதும், இத்தலம் நாகர் தொடர்புடைய தென்பதை வலியுறுத்துகின்றது. எப்படி நாகர்கள் மிகத் தொன்மை வாய்ந்த நாகரிக மக்களோ, அப்படியே சைவமும் மிகத் தொன்மை வாய்ந்த சமய நெறியாகும். இலங்கை, விஜயனுக்கு முற்பட்ட காலந்தொடங்கி, சைவசமயத்திற்கு இருப்பிடமாக விளங்குகின்றது. திருக்கேதீச்சரத்தின் தொன்மை சைவத்தின் தொன்மைக்கு அழியாச் சான்ருகும். இலங்கையில் பண்டைக்காலத்தில் வாழ்ந்த நாகரிக மக்களாகிய நாகர்கள் வழிபட்ட சைவத்தலங்களிலொன்றே திருக் கேதீச்சரமாகும் என்பது நாம் எடுத்துக்காட்டிய சான்றுகளால் வலியுறுத்தப்படுவது காண்க.

திருச்சிற்றம்பலம்.

உ

# திருக்கேதீச்சர மகிமை

[ வித்துவசிரோன்மணி ஸ்ரீமத் ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் செய்த உரையோடு கூடிய திருக்கேதீச்சரத் திருப்பதிகங்களும், திருக்கேதீச்சர மகிமை என்னும் சிறு நூலும் சேர்த்து 1925 இல் திருப்பி அச்சிடப்பட்டபொழுது நல்லூர் ஸ்ரீமான் த. கைலாசபிள்ளை அவர்கள் எழுதிய முகவுரை. ]

'நாம் வசிக்கும் இலங்கையானது இராவணனாலே பூசிக்கப்பட்ட பல கோடி சிவலிங்கங்களையுடைய புண்ணிய நாடாயிருந்தது. கதிர்காமம் முதலிய மற்றைச் சைவாலயங்களையும் உடையதாயிருந்தது. ஸ்ரீ இராமருடைய பாத தாமரைகள் தீண்டப்பெற்றதாயுமிருந்தது. பின் பௌத்தாலயங்களுக்கும் இடமாயிருக்கின்றது. இவ்விலங்கையைச் சைவருள் எவன் புகழ்ந்தாலும் முதல் அவன் சொல்வது தேவாரம் பெற்ற ஸ்தலங்களாகிய திருக்கேதீச்சரம், திருகோணமலை என்னும் தலங்களைத தன்னகத்துடையதும், திருப்புகழ்பெற்ற ஸ்தலங்களுள் கதிர்காமத்தைத் தன்னகத்துடையதும் என்பதேயாம். மற்றைப் பெருமைகளை யெல்லாம் பிறகுதான் சொல்லுவான்.

இவ்வளவு பெருமை பெற்ற திருக்கேதீச்சரமானது கேதுவினால் ஆதியிற் பூசிக்கப்பட்டது. இது இதற்கு முன் நானூறு ஐந்நூறு வருஷங்களிற் போலும் யாதோ மாதம் (1872) நாவலரையா அவர்கள் ஒரு விஞ்ஞாபனம் வெளியிட்டார்கள். அது கண்டு அப்போது அதில் முயற்சித்தவர் அத் திருக்கேதீச்சரத்துக்குச் சமீபத்திலுள்ள விடத்தற்தீவு என்னுமிடத்திலிருந்த ஸ்ரீ. வி. இராமுப்பிள்ளை வைத்தியர், வை. ஆறுமுகம்பிள்ளை, த. இராகவப்பிள்ளை முதலானோரும், சில நாட்டுக்கோட்டை நகரத்தாரும் இப்பணியைத் தலைமேற்கொண்டு புரிவாராயினர். இவருள் மு. பசுபதிச் செட்டியாரென்பவர் செய்த முயற்சிகள் மிகப் பலவாகும்.

திருக்கேதீச்சரம் என்னும் ஆலயம் இருந்த நிலம் எப்படியோ அரசினரிடம் விலைக்கு வாங்கப்பட்டுவிட்டது. அதில் ஆலயமுமொன்று சிறிதாக அமைக்கப்பட்டுவிட்டது. அது இப்போது ஒரு

வாறு நடந்துவருகிறது. இனி அதைப் பெருப்பித்துக் கிரமமாக நடத்தவேண்டியதே இப்போதுள்ள சைவர் மேற் பொறுத்த கடனு யிருக்கின்றது. இதை நிறைவேற்றிவைக்கும் புண்ணியவான்கள் எங்கே பிறந்திருக்கிருர்களோ அறியோம் . . . . .

விராட் புருடனது சரீரமாகிய பிரமாண்டத்தின் இட நாடிக்கு ஸ்தானமென்று சாந்தோக்கியம் முதலிய உப நிஷத்துக்களிலே எடுத்தோதப்படுவதும், திருமூல நாயனுராற் சிவபூமி என்று பாராட்டப்படுவதும் ஐம்பத்தாறு தேசங்களுள் முக்கிய தேசமென்றும் புண்ணிய பூமியென்றுந் தஷிண கைலாச மான்மியத்திலே பேசப் படுவதும், அனுக்கிரக ஸ்தலமென்று மாணிக்கவாசக சுவாமிகளாற் புகழப்படுவதுமாகிய இவ்வீழ தேசத்திலே புராணுேத்தமமான சிவ ஸ்தலங்கள் பல உள்ளன. தேவாரம் பெற்ற சிவ ஸ்தலங்கள் திருக்கேதீச்சரம், திருக்கோணுசலமென்னுமிரண்டுமாம். அவற்றுள் திருக்கோணுசலம், மலேநடுவே சமுத்திரத்தாலெதிருண்டமை யால் அதை முன்போலாக்குதற்குங் கிரமமாக வழிபடுதற்கும் அருமையாயிற்று. திருக்கேதீச்சரமோ விசாலமானதாய் ஆலயத் திருப்பணி முதலியவற்றிற்கு மிகவும் தக்க ஸ்தானமாயிருத்தலி ஞல் சைவசமயிகளாகிய நாமெல்லாம் இதன் மகிமையை அறியவும் இதனே முன்போலாக்கவும் முயலவேண்டுவது அத்தியாவசியமாம். இத் திருக்கேதீச்சரம், தன்னிடத்தே இறந்தோருக்குப் பிரணவோப தேசம் செய்யுந் தானமாயுஞ் சேது மத்தியமாயுமிருத்தலால் தல விசேஷம் மிகவுடையது. பாலாவியின் கரையிலே பிண்டமிட்டோ ருக்குக் கயாசிராத்தபல மெய்துமாதலால் தீர்த்த விசேஷம் மிக வுடையது. கேதீச்சர மகாலிங்கம், மானுடலிங்கம், ஆரிடலிங்கம், தேவலிங்கம், காணலிங்கமென்னும் இவைகளிலும் விசிட்டமுடைய தும் தன்னிலும் விசிட்டமாவது பிறிதில்லாததுமாகிய சுயம்புவாத லாலும் தேவர், முனிவர் முதலியோர்க்கு அபீஷ்ட சித்திமுத்திகளேக் கொடுத்தமையாலும் இலிங்க விசேஷம் மிகவுமுடையது. இவ்வாறு தலம் தீர்த்தம் மூர்த்தியென்னும் மூன்று விசேஷங்களும் ஓரிடத்தி லமைவது மிகவருமை. அவை மூன்றுடன் தேவாரத் திருப்பதிகமும் அமையப்பெற்றுள்ள இத் திருக்கேதீச்சரம் உத்தமோத்தம புண்ணிய க்ஷேத்திரமென்பது யாரும் மறுக்கலாகாத உண்மையாம்.

## ஸ்ரீஸ்கந்தேய புராணத்துத் தக்ஷிணகைலாச மான்மியத்தில் இரண்டாம் அத்தியாயத்திலே கூறப்பட்டுள்ள திருக்கேதீச்சர வைபவம் வருமாறு :

சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளை நோக்கி ''முன்னொரு காலத்தில் வாயுபகவான், தன்னோடு மாறுகப் போர்செய்த ஆதி சேடன் ஆயிரம் பணுமகுடங்களால் மகாமேருவை மறைக்க, அவனை விலக்க, அம்மகாமேருவின் மூன்று சிகரங்களை வன்மையாற் பிடுங்கி, அவற்றுள் ஒரு சிகரத்தை திரிகூடாத்திரியாகத் தாபித்துச் சென்ருன். இன்பமுண்டாக்குவோரும் மகாதேவருமாகிய சிவபெருமான், அங்கே சுயம்புவும் நித்தியருமாயெழுந்தருளியிருக்கின்ருர். முனிவர்களே ! கேதீச்சர மஹாலிங்கம் பலாவியின் கரையிலே சகல லோகங்களுக்கும் நன்மையுண்டாக்கும் பொருட்டு வீற்றிருக்கின்றது. உத்தமமாகிய அந்தணன் அங்கே மகத்தாகிய பாலாவியில் ஸ்நானஞ் செய்து பிதிர் தேவர்களுக்குத் தருப்பணம் பண்ணிக் கேதீச்சர லிங்கத்தை நமஸ்கரித்துத் தசதானமியற்றுவானுயின், இவன் சாயுச்சிய பதம் பெறுகின்ருன். நித்தம் எந்த மனிதன் பிறவியிடையே கேதீச்சரத் தியானஞ் செய்வானே அவன் சகல பாவங்களிலும் நீங்கிப் பரிசுத்தனுய்ச் சிவலோகத்திற் பெருமையுறுகின்ருன். (எவனேனுமொருவன்) பாலாவியிலே ஸ்நானஞ்செய்து, பின்பு கேதீச்சரப் பிரபுவை வணங்கினுல் அவன் கையிலே போக மோக்ஷங்களிருக்கும். இவ்விஷயத்தில் ஆராய்ச்சி செய்யவேண்டுவதில்லை. பாலாவியிலே ஸ்நானம் பண்ணிப் பின்பு கேதீச்சர லிங்கசேவை செய்பவன் பிரமகத்தி முதலிய பாவங்களினின்றும் நீங்குகிறுன். இங்கே ஐயமில்லை. உத்தமனுகிய மனிதன் பாலாவியின் கரையிலே பிண்டங் கொடுக்கில் கயாச்சிராத்த சமமாகிய புண்ணியத்தை அடைகின்ருன். இவ்விடத்திற் சந்தேகமில்லை''.

பிரம்மா, விஷ்ணு, ருத்திரர் முதலினேரும், தேவர், கந்தருவர், இராக்கதர், வித்தியாதரர், நாகர், சாத்தியர், கின்னர கருடர், ஆதித்தர், வசுக்கள் என்னும் இவர்களும், அங்ஙனமே உண்மையறிந்தோராகிய முனிவர்களும் என்றும் மகிழ்ச்சியடைந்த மனமுடையராய் இந்த ஸ்தலத்தில் வசித்தார்கள். ஆதலால் அதன்

வைபவத்தைச் சொல்லவல்லேனல்லேன். பிறரும் வல்லரல்லர். பசு, பக்ஷி, மனிதர்கள் சகலரும் மிருகம் முதலிய சகல செந்துக்களும் எப்பொழுது மரணமடைந்தாரோ அப்பொழுது கேதீச்சரப் பிரபாவத்தினுற் சிவாலயத்தின் பாகத்திலே தலைவைத்துக் கிடப்பவராவர். தருமரூபியாகிய சிவபெருமான் அவரனைவருடையவும் வலக் காதிலே பிரணவ மந்திரத்தை உபதேசித்தருளுவர்.

ஆதலால் சாயுச்சிய பதவியை மனிதர், பக்ஷி, மிருகம் முதலிய சகல சரீரிகளுமடைந்தார்கள். அதுபற்றி இந்த ஸ்தலத்தையொத்த புண்ணிய ஸ்தலம் முன்னுண்டாயதுமில்லை; இனியுண்டாவதுமில்லை. மகாதுவட்டா புரத்திலே மனிதனுவது செந்துவாவது செனிக்கில் முத்தி அவர் கையதாகும்.

ஏனைய செல்வங்கள் சொல்ல வேண்டுமா? நல்லவனுயினும் தீயவனுயினும் இந்த ஸ்தலத்திலே மரணம் வரையும் பாலாவியிலே ஸ்நானம்பண்ணி அதன்மேல் கேதீச்சரப் பிரபுவை வழிபட்டுப் பிக்ஷையெடுத்தாவது விடுத்தாவது இந்திரிய நிக்கிரகஞ் செய்திருப்பானுயின் அவன் குலகோடியோடு கூடிச் சிவசாயுச்சியமடைவன். இந்த ஸ்தலத்திலே மனிதன் பத்தியோடு பஞ்சாக்ஷர மந்திரத்தைச் செபித்து உருப்போடுவானுயின் அவன் சித்தியடைவன். இதில் ஐயமில்லை. (என்று சொல்ல, முனிவர்கள்) ''இந்த ஸ்தலம் கேதீச்சரமென்று முனிவரே நீர் சொன்னீர், மகாதுவட்டாபுரம் என்னும் பெயர் எங்ஙனம் இதற்கெய்தும் என்று வினவினுர். அது கேட்ட சூதமுனிவர் முற்காலத்திலே துவட்டா வந்து பாலாவியிலே ஸ்நானஞ்செய்து கேதீச்சர லிங்கத்தைப் பூசித்து உத்தமோத்தமமாகிய தவத்தைச் செய்தான். இவ்வமயத்திலே மகாதேவரும் பிரபுவுமாகிய சிவபெருமான் அவனது தவத்தினுலே திருவுளமகிழ்ந்து பார்ப்பதியம்மையாரோடு தோன்றியருளினுர். துவட்டா அவரைத் தரிசித்து மேலாகிய பத்தியோடு துதிக்கத் தொடங்கினுன்.

'அம்மையாரோடு கூடியவரே' உருத்திரராகிய உமக்கு நமஸ்காரம். பரமான்மாவாகிய உமக்கு நமஸ்காரம். 'கேதீச்சரப் பிரபுவே! சேதுமத்திய வாசியாகிய உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம்.

அனைத்துலகுக்கும் நாயகராகிய உமக்கு நமஸ்காரம். அச்சத்தை யொழிப்பவரே! உமக்கு நமஸ்காரம். கேதீச்சரப் பிரபுவே சேதுமத்திய வாசியாகிய உமக்குநமஸ்காரம். கேதீச்சரப் பிரபுவே! ஆதி மத்தி யாந்த ரகிதரும் ஆதாரத்திற் குறைவிடமானவரும் சேதுமத்திய வாசியுமாகிய உமக்கு நமஸ்காரம். கேதீச்சரப் பிரபுவே! பிரமா விஷ்ணு ஸ்வரூபரும் சிருஷ்டி ஸ்திதிகளுக்குக் காரணரும் சேது மத்திய வாசியுமாகிய உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம். கிருபா சமுத்திரமாகிய கேதீச்சரப் பிரபுவே! உமாதேவியாரது திவ்வியமாகிய பாதி வடிவுடையவரும் சேதுமத்திய வாசியுமாகிய உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம். சுந்தரமான விசுவரூபமுடையவராகிய உமக்கு நமஸ்காரம். சுந்தரருடைய பார்ப்பதியம்மையாருக்குப் பிராணநாயகராகிய கேதீச்சரப் பிரபுவே! சேதுமத்திய வாசியாகிய உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம். உலகத்திற்காதாரமானவரே! உமக்கு நமஸ்காரம். கேதீச்சரப் பிரபுவே! செந்தாமரை மலர்போலும் திருவடியுடையாரும் சேதுமத்திய வாசியுமாகிய உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம். கேதீச்சரப் பிரபுவே! புத்திரனைத் தருக, அருளைத் தருக, நல்ல புத்தியைத் தருக, சேதுமத்திய வாசியாகிய உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம். இந்த ஸ்தோத்திரத்தினலே உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம். இந்த ஸ்தோத்திரத்தினலே திருவுள மகிழ்ந்து சிவபெருமான் துவட்டாவுக்கு இதனைத் திருவாய் மலர்ந்தருளினர். ''துவட்டாவே! சொல்லுதும் கேள், இந்த க்ஷேத்திரம் எவற்றினு முத்தமோத்தமமானது. ஆதலால் நீ இங்கே வசிக்குக. நம்மீது பத்தி உனக்குண்டாகட்டும். இவ்வுலகத்திலே இன்றுதொட்டு இந்த ஸ்தலத்திற்குத் துவட்டாபுரம் என்னும் பெயருண்டாம். நமதருளினல் உனக்கு விசுவகன்மாவெனும் புத்திரனுண்டாவான்'' என்று வரங்கொடுத்துச் சிவபெருமான் மறைந்தருளினர். ஆதலால் இந்த ஸ்தலத்தையொத்த ஸ்தலம் முன்னுண்டானதுமில்லை. இனி உண்டாவதுமில்லை (என்று கூறினர்).

திருச்சிற்றம்பலம்.

௨

# திருக்கேதீச்சரத்திற் புதைபொருள் ஆராய்ச்சி

[காலஞ்சென்ற புதைபொருள் ஆராய்ச்சி உதவித் தலைவர் திரு. எஸ். சண்முகநாதன் அவர்கள் திருக்கேதீச்சரத்தில் 1950 இல் புதைபொருள் ஆராய்ச்சி நடாத்தினர். துர் அதிட்டவசமாக அவர் செய்த ஆராய்ச்சிகள் முடிவுபெறமுன் அவர் இறந்துவிட்டார். அவர்செய்த ஆராய்ச்சிபற்றிய அறிக்கை 1950 இல் வெளிவந்த புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதியின் வெளியீட்டில் முதல் அனுபந்தமாக உள்ளது. அதன் தமிழாக்கத்தை இங்குத் தருகின்றோம்.]

அனுராதபுரம் இலங்கைக்குத் தலைநகராயிருந்த காலத்தில் மன்னர் மாவட்டத்திலுள்ள மாந்தை பிரதான துறைமுகமாய் விளங்கிற்று. இதைச் சிங்களத்தில் 'மகாதிட்ட' என்றழைப்பர். இலங்கைச் சரித்திரத்தைக் கூறும் மகாவம்சம் என்னும் நூலில் 'மகாதிட்ட' சரித்திரகாலந் தொடங்கிப் பிரசித்த துறைமுகமாக விளங்கியது என்பது பலவிடங்களில் கூறப்படுகிறது.

இந்நகரமிருந்த இடத்தில் இப்பொழுதும் நகரின் சுற்றுமதில்களையும், இரட்டை அகழிகளையும் காணக்கூடியதாகவிருக்கிறது.

இந்த மாந்தை என்னும் நகரமிருந்தவிடத்தில் புதைபொருள் ஆராய்ச்சி 1887 இல் போக்கென்பவராலும், 1925 — 28 இல் ஏ. எம். கொகாற் என்பவராலும் நடாத்தப்பட்டது.

கொகாற் என்பவரின் ஆராய்ச்சி முடிவுகள் அவர் உடல்நலக் குறைவு காரணமாக 1929 இல் இளைப்பாற நேர்ந்தபடியால் தக்க முறையில் வெளிவரவில்லை.

மகாதிட்டத்திலிருந்த திருக்கேதீச்சரம் என்னும் சிவன்கோவிலைப் பற்றி 7 ஆம் நூற்றுண்டிலிருந்து தேவாரங்களில் குறிக்கப்பட்

டிருக்கிறது. பாளி நூலான '' தத்துவசம் '' என்னும் நூலிலும் பண்டைக் காலத்தில் இந்த இடத்தில் ஒரு சிவன்கோயில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

1950 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 18 ஆம் திகதி மறுபடியும் புதைபொருள் ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. நகரின் கிழக்கு வாசலிலிருந்து போகும் நாற்பதடி அகலமுள்ள ஒரு வீதி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த வீதிக்குச் சமாந்தரமாகவுள்ள, ஆனுல் அகலங் குறைந்த இன்னெரு வீதியுங் காணப்படுகிறது. இந்த வீதியின் இருமருங்கிலும் கட்டடங்களின் அழிவுகள் காணப்படுகின்றன. கிழக்கு வாசலிலிருந்து போகும் வீதி பிற்காலத்திற் கட்டப்பட்ட கோயிலுக்குப் போவதாகக் காணப்படுகிறது. இக்கோயில் எக்காலத்தது என்று இப்போது கூறமுடியாமலிருக்கிறது. நாற்பது வருடங்களுக்குமுன் இந்த இடத்தில், பின்னப்பட்டதும், இலங்கையிலுள்ள சிவலிங்கங்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரியதுமான சிவலிங்கமொன்று கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இப்பொழுது இருக்கும் கோயிலுக்கருகில் காணப்படும் கற்களைப்போன்ற ஒரு தீர்த்தக்கல் இந்த இடத்தில் காணப்படுகிறது. இந்த இடத்தில் இன்னும் ஆராய்ச்சி செய்தால் இக்கட்டடத்தைப் பற்றிய விபரங்களை அறியக்கூடும்.

சுட்ட மண்ணிஞல் கட்டப்பட்ட ஒரு கிணறு அல்லது கழிவுநீர்க் குழியும், கல்லினுல் கட்டப்பட்ட இரு கிணறுகளும் காணப்படுகின்றன. 32 அடி தோண்டப்பெற்றபின் மூன்றடி விட்டமுள்ள கல்லினுல் கட்டப்பட்ட கிணற்றின் நீர்மட்டம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்படித் தோண்டிக்கொண்டு போகும்பொழுது, விசித்திரமான பானை சட்டிகளும், மிருகங்களின் எலும்புக்கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உரோமபுரி, அரேபியா, சீனு முதலியவிடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட பலவித பீங்கான்களும் காணப்பட்டன. இவற்றுள் சிலவற்றைக்கொண்டு இவற்றின் காலத்தை நிர்ணயிக்க முடியும்.

மாந்தை நகர மதில்களுக்குப் புறத்தே இடுகாடு கண்டுபிடிக்கப்பட்டுத் தோண்டியபொழுது, ஒரு கிடங்கில் ஒரு மனிதனின் முழு


எலும்புக்கூடும், அதோடு சம்பந்தப்பட்ட சட்டி பானைகளும் கண்டெடுக்கப்பட்டன. பேராசிரியர் டாக்டர் பி. கே. சண்முகம் இந்த இடத்தினைப் பார்வையிட்டு இவ்வெலும்புக்கூட்டை ஆராய்ச்சிக்காகப் பல்கலைக் கழகத்திற்கு எடுத்துச் சென்றுள்ளார். வேறு இடங்களில் கண்டெடுக்கப்பட்ட தலையோடுகளும் எலும்புகளும் பல்கலைக் கழகத்திற்கு ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டுள்ளன.

பலவிதமான மணிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவைகளைப்பற்றிய முடிவான ஆராய்ச்சி செய்வதற்கு நாளெடுக்கும்.

இவ்விடத்தில் எடுக்கப்பட்டதும் குதிரைகள் பூட்டப்பட்டதும் தந்தத்தால் செய்யப்பட்டதுமான தேர் ஒரு விசித்திரமான பொருளாகும். இத்தேருக்குப் பத்துக் கம்புகளும், குடமும், அச்சுமுண்டு. தேர்த்துலா இருசோடி குதிரைகளுக்கும் நடுவில் காணப்படுகின்றது. துலா நுனியில் நுகம் வைக்கப்பட்டிருக்கிறது. இந்நுகத்தில் குதிரைகள் பூட்டப்பட்டிருந்தன.

காலநிலை காரணமாகவும் தண்ணீர் வசதிக்குறைவு காரணமாகவும் இப்போது ஆராய்ச்சி நிறுத்தப்பட்டிருக்கிறது. பின்னர் இன்னுமொருமுறை மூன்று மாதங்களுக்கு ஆராய்ச்சி நடாத்தப்படும்.

திருச்சிற்றம்பலம்.



1. திருக்கேதீச்சர ஆலய முகப்புத் தோற்றம்.
2. திருக்கேதீச்சர ஆலயத் தூபி.
3. பாலாவியை நோக்கிச் செல்லும் வழி.
4. திருக்கேதீச்சரத்தின் ஒரு தோற்றம்.

உ

# திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி

[ திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரணச் சபைத் தலைவராய் விளங்கிய சு. சிவபாதசுந்தரம் அவர்கள் மலாய்நாட்டுச் சைவ அன்பர்களுக்குச் சுற்று நிருபமாக பின்வருங் கடிதத்தை 1949ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30 ஆம் திகதி ஆசிரியர் த. மயில்வாகனம் மூலம் அனுப்பினர். இதன் பயனக மலாய்நாட்டுச் சைவ அன்பர்கள் அங்கு திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையொன்றை ஏற்படுத்திப் பொருள் சேகரித்துக் கௌரி அம்பாள் கோயிலைக் கருங்கற் திருப்பணியாகச் செய்வதாகத் தீர்மானித்தார்கள்; இப்பொழுது வேலையும் ஆரம்பித்துவிட்டார்கள். ]

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுரும், சுந்தரமூர்த்தி நாயனுரும் தேவாரம் பாடிய சிவத்தலம் இலங்கையிலே ஒன்றுதானுள்ளது. அது மன்னுருக்குச் சமீபத்திலுள்ள திருக்கேதீச்சரம். இது நெடுங் காலமாயழிந்திருந்தது. ஆறுமுகநாவலர் பெருமான் இதைப் புதுக்கக் கட்டுதற்காக அந்த இடத்தை விலைக்குத் தரும்படி அரசினரைக் கேட்டபோது அவர்கள் மறுத்துவிட்டார்கள். பின்பு சேர். இராமநாதன் முதலியோரது முயற்சியினுலே, அது அரசினரிடம் வாங்கப்பட்டது. அந்த இடத்திலே ஒரு கோயில் கட்டி நாற்பது வருடங்களின் முன் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அது செங்கல்லாற் கட்டப்பட்டபடியால் இப்போது பழுதடைந்திருக்கின்றது. அதைக் கருங்கல்லாற் கட்டவேண்டுமென்ற எண்ணம் இப்போது இவ்வூரில் தோன்றியிருக்கிறது. இதைக் கட்டி முடித்தற்காகத் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையொன்று ஆக்கப்பட்டிருக்கிறது. கருங்கல்லாற் கட்டுதற்கு மூன்று லட்சம் ரூபாவரையிலே மதிக்கப்பட்டிருக்கிறது. இப்போது பணம் சேர்க்கும் முயற்சி தொடங்கிவிட்டது. கோயிலுக்குப் பக்கத்திலே இப்போது ஒரு விசாலமான மடம் 5000 ரூபாய் செலவுசெய்து கட்டப்பட்டுவிட்டது. இது எங்களுக்குள்ளே சிலர் சேர்த்துக் கட்டியது; ஊர்ப் பொருளாற் கட்டியதன்று. கோயிலுக்காக ஒருவர் 2500 ரூபாய்

கொடுத்தார். ஏழுபேர் ஒவ்வொருவரும் 1001 ரூபா கொடுத்திருக்கிறார்கள். மலாய் நாட்டிலும் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையொன்று ஆக்கப்படுதல் நல்லது. சம்பந்த சுவாமியும் சுந்தரமூர்த்தி சுவாமியும் பாடிய தலம் மிகச் சிறப்பாக இருத்தல்வேண்டும். அவர்களுடைய பெருமையை நிலைநாட்டுதற்காகச் சைவசமயத்தவர் ஒவ்வொருவரும் முயற்சி செய்தல் பெருங்கடனாகும். அவர்களுக்காகவே அன்றி எமது நாடாகிய இலங்கைக்காகவும் இக்கோயிலிலே எங்களுடைய மனம் முழுவதும் செல்லவேண்டும். சம்பந்தசுவாமிகள் தேவாரம் பாடிய தலங்கள் இந்தியாவிலே முந்நூறுவரையில் உண்டு. சுந்தரமூர்த்திநாயனார் பாடிய தலங்கள் இந்தியாவிலே நூறுவரையிலுண்டு.

இவர்கள் பாடிய தலம் இலங்கையிலே திருக்கேதீச்சரமாகிய ஒன்றேயாம். இலங்கையினுடைய பெருமைக்காகவும் இலங்கையைச் சேர்ந்த சைவசமயத்தவர் யாவரும் இக்கோயிலை உன்னத நிலையில் வைத்தல்வேண்டும். இதற்குப் பொருளுதவலும் வேறு; மற்றைய கோயில்களுக்குப் பொருளுதவுதலும் வேறு. ஆயிரம் ரூபா நோட்டும் கடதாசித் துண்டுதான்; காற்சதத்துக்கு வாங்கும் கடதாசித் துண்டும் கடதாசிதான். இவற்றுக்கிடையேயுள்ள வித்தியாசமென்னவென்றால், நோட்டில் இவருடைய ( ) கையெழுத்துக்கள் உண்டு. மற்றக் கடதாசியிலே அவர்களுடைய கையெழுத்தில்லாமை. ( ) என்று சொல்வதுபோல, சம்பந்த சுவாமியும் ''திருக்கேதீச்சர நாதர் அடியவர்களுக்கு அருள் செய்வார்'' (''தொண்டர் நாள் தொறும் துதிசெய அருள்செய் கேதீச்சரமதுதானே'') என்று சொல்லியருளினர். அன்றியும் இக்கோயில் சூரபன்மனுடைய காலத்துக்கும் மிகவும் முந்தியது. இக்கோயிலிருக்குமிடத்துக்கு மாதோட்ட நகரம் என்று பெயர். இந்த இடத்துக்கு இந்தப் பெயர் வந்த காரணம் என்னவென்றால், சூரபன்மனுடைய மனைவியுடைய தகப்பனுடைய தகப்பன் துவட்டா என்பவர் நெடுங்காலம் பிள்ளையில்லாமையினலேயே திருக்கேதீச்சரத்திலே தவம்செய்து புத்திரபாக்கியம்பெற்று அங்கே ஒருநகரத்தையுண்டாக்கி வாழ்ந்தார். அவருண்டாக்கிய நகரமாதலால், அதுக்கு மாதுவட்டா நகரம் என்று பெயர் வந்தது. இந்தச் சரித்திரம் தட்சணகைலாச புராணத்திலுள்ளது. இக்கோயிலுக்குத் தட்சணகைலாசம் என்ற பெயருண்டு.


இக்கோயிலுக்கு இருவரும் பாடியருளிய தேவாரங்களும் அவற்றின் உரையும் கோவிலின் மகிமையும் சேர்ந்த புத்தகப் பிரதியொன்று இன்று அனுப்புகிறேன். மலேயாவிலுள்ள சிவ நேசர்கள் சிலரை ஓர் இடத்திலே கூட்டி இதை அவர்களுக்கு விளங்கப்படுத்தி அவர்களுடைய துணையோடு ஒரு பெருங் கூட்டத்தைக் கூட்டித் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையொன்று தாபிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன். நாம் சம்பாதிக்கும் பொருளிலே திருக்கேதீச்சரத்துக்குக் கொடுக்கப்படும் பகுதியானது இப்பிறவியிலும் இனிமேல் வரும் பிறவிகளிலும் நீங்காத துணையாக நிற்குமென்பதற்கு ஐயமில்லை. இவ்வளவு நீளமான கடிதங்கள் உவ்விடத்திலுள்ள பலருக்கு எழுதவேண்டியதாயினும் இப்போது அவ்வளவு உடல் வலுவில்லாமையால், நான் மற்றவர்களுக்கெழுதாமையைக் குறித்து அவர்கள் என்னிலே குறை பாராட்டலாகாது.

### திரு. குமாரசுவாமி அவர்கள்

### திரு. நாகலிங்கம் அவர்கட்கு 15-11-1893 இல் எழுதிய கடிதத்தில், திருக்கேதீச்சரத்தைப் பற்றிய பகுதியின் மொழிபெயர்ப்பு :

''யான் நேற்றைய தினம் தேசாதிபதி அவர்களைச் சந்தித்து உரையாடியபோது திருக்கேதீச்சரக் காணி நமக்குரியதென்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறினேன். அவர் தம் பதவிக்காலத்தில் எந்தச் சமயத்தாருக்கும் காணிகளை இலவச மானியமாக அளிக்கப் போவதில்லை எனக் கூறுகின்றார். அதுமாத்திரமன்றி, அதே காணியில் ரோமன் கத்தோலிக்கரும் உரிமை கொண்டாடுகின்றனரெனவும் அவர் கூறினார். இந்துக்களே அந்நிலத்தை வாங்கக்கூடியவர்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். ஆகவே, நீங்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு சபை கூட்டித் தாமதமின்றி நன்கொடை திரட்டுவதே இப்பொழுது செய்யவேண்டியது. என்னைப் பொறுத்த வரையில் யான் எனது நன்கொடையை மகிழ்ச்சியுடன் உதவச் சித்தமாயிருக்கிறேன். ஆனால், உங்களுடைய கல்லூரியின் நிமித்தம் உங்கள் பிரதிநிதிகள் இவ்விடம் ஏற்கனவே நிதிதிரட்ட வந்திருக்கின்றமையால் கொழும்பிலுள்ள இந்துக்களிடமிருந்து நீங்கள் எவ்வித பண உதவியும் எதிர்பார்க்க முடியாதே என அஞ்சுகின்றேன்''.

திருச்சிற்றம்பலம்.



“ எந்த மனிதன் பிறவியிடையே கேதீச்சரத் தியானஞ் செய்வானே அவன் சகல பாவங்களிலும் நீங்கிப் பரிசுத்தனாய்ச் சிவலோகத்திற் பெருமையுறுகின்றான் ”.

— கைலாச மான்மியம்.

௨

# திருக்கேதீச்சரத்தில் மகா சிவராத்திரி

மாதோட்ட நன்னகரில் கேதீச்சரப் பெருமான் கௌரியம்பாள் சமேதராக எழுந்தருளி அடியார்களுக்கு இன்னருள் பாலிக்கின்ருன். அப்பெருமானுக்கு ஆண்டுதோறும் திருவிழாக்கள் பல சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அவற்றுள் சிவராத்திரி விழா, நவராத்திரிப் பூசை, திருவெம்பாவை, சங்காபிடேகம், அலங்கார உற்சவம், கதிர்காமத் திருவிழா என்பன மிகவும் முக்கியமானவை. இவற்றுள் மகாசிவராத்திரி விழா திருக்கேதீச்சரத்திற்கென்று அமைந்த ஒரு பெருவிழாவாகும்.

திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையார் மகாசிவராத்திரி விழாவைக் கடந்த சில ஆண்டுகளாகத் திருக்கேதீச்சரத்தில் மிகவும் விமரிசையாக நடாத்தி வருவதைச் சைவ உலகம் நன்கு அறியும். திருக்கேதீச்சரத்தின் மகிமையையும் மகாசிவராத்திரியை அத்தலத்தில் அனுட்டிப்பதாற் பெறக்கூடிய நற்பேற்றையும் நன்குணர்ந்து அத்தினத்தில் பல்லாயிரக் கணக்கான அடியார்கள் திருக்கேதீச்சரத்திற் கூடுகின்றனர். இவ்வெண்ணிக்கை ஆண்டுதோறும் பெருகிக்கொண்டே வருகின்றது.

மகாசிவராத்திரி தினத்தன்று கௌரியம்பாள் சமேத கேதீச்சரநாதருக்கு விசேட பூசை, அபிடேகம் என்பன நான்கு சாமங்களிலும் நடைபெறும். மறுநாள் அதிகாலேயிற் கேதீச்சரப் பெருமான் வீதிவலம் எழுந்தருளிப் பாலாவியில் தீர்த்தமாடிப் பக்த கோடிகளுக்குக் காட்சி தந்து ஆலயம் சென்றடைவது வழக்கமாகும். இப்புண்ணிய தினத்தில் இரவு முழுவதும் ஆலயத்தில் இன்னிசை விருந்து, வேத பாராயணம், கதாப்பிரசங்கம், சொற்பொழிவுகள், புராணபடனம் என்பன நடைபெறும்.

### சிவராத்திரி அரங்கு :

ஆலயத்தின் முன் சிவராத்திரி அரங்கு ஒன்று அமைக்கப்பட்டுச் சிவராத்திரி நிகழ்ச்சிகள் சில ஆண்டுகளாக நடைபெற்று வந்தன.

ஆனால் 1965 ஆம் ஆண்டிலிருந்து இந்நிகழ்ச்சிகள் வசந்தமண்டபத்தில் நிகழ ஒழுங்குகள் செய்யப்பெற்றுள்ளன. மகா சிவராத்திரி தினத்தன்று வசந்தமண்டபத்தில் இரவு முழுவதும் இசை நிகழ்ச்சிகள் நடந்தவண்ணமிருக்கும். இலங்கையிலுள்ள சிறந்த இசை வித்துவான்களும், இசைக் கலைஞர்களும் ஆண்டுதோறும் இவ்விழாவிற் கலந்து திருமுறை ஓதுவார்கள்; இன்னிசை வழங்குவார்கள்: நாதமழை பொழிவார்கள். இவ்விழாவிற்கென்று சிறப்பாகத் தமிழகத்திலிருந்து இசைக் கலைஞர்களைச் சில காலங்களில் வரவழைப்பதுமுண்டு.

இத்தினத்தில் மகாலிங்க மண்டபத்திற் திருமுறை ஓதல், கூட்டுப் பிரார்த்தனை என்பன நடைபெறும். அடியார்கள் மகாலிங்க மண்டபத்தில் கூடி பக்திப்பரவசத்தோடு சிவபுராணத்தை ஓதும் போது அதனைக்கேட்டு நிற்பவர்களும் உருகிநிற்பர். குருகுல மாணவர்களின் வேதபாராயணம் இனிமையும், பக்தியுணர்வும் உண்டாக்க வல்லதாக அமையும். மகாலிங்க மண்டபத்திற் கூடும் அடியார்கள் கூட்டுப் பிரார்த்தனை, திருமுறை ஓதல், வேதபாராயணம் என்பவற்றில் கலந்து காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நிற்பர்.

## வானொலி அஞ்சல் :

திருக்கேதீச்சரத்தில் நிகழும் சிவராத்திரி நிகழ்ச்சிகளை இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனத்தார் ஆண்டுதோறும் அஞ்சல்செய்து வருகின்றனர். நான்குசாமப் பூசைகளையும், மகாலிங்க மண்டபத்தில் நிகழும் கூட்டுப் பிரார்த்தனைகளையும், வசந்த மண்டபத்தில் நடைபெறும் இசைநிகழ்ச்சிகளையும் இரவு முழுவதும் அஞ்சல்செய்து வருவது பாராட்டுதற்குரியதாகும். இவ்வரிய பணியினாற் திருக்கேதீச்சரத்தில் நிகழும் சிவராத்திரி விழாவிற் கலந்துகொள்ள இயலாதவர்கள் தத்தம் இல்லங்களிலிருந்தபடியே விழா நிகழ்ச்சிகளையும், பூசைகளையும் கேட்டு இன்புறுவதோடு திருக்கேதீச்சரப்பெருமானை அகக் கண்களாற் கண்டு வணங்கி இன்னருள் பெறவும் முடிகின்றது.

## தீர்த்தக் காவடி :

சிவராத்திரி நன்னாளில் திருக்கேதீச்சரத்தில் தீர்த்தக்காவடி எடுப்பதை இன்று சைவப்பெருமக்கள் பெரும் பேருகக் கருதுகின்றனர். எனவே நான்கு சாமங்களிலும் அடியார்கள் தீர்த்தக் காவடி எடுப்பதற்குத் திருப்பணிச் சபையார் வேண்டிய ஒழுங்குகள் செய்துள்ளனர். நான்கு சாமங்களிலும் ஒவ்வொன்றிற்கும் 108 அடியார்கள் பாலாவியிலிருந்து தீர்த்தக்காவடியெடுத்து வந்து முறைப்படி தாமே அபிடேகம் செய்ய ஆண்டுதோறும் வேண்டிய ஒழுங்குகளை முகாமைக்காரர் செய்துவருகின்றனர். தீர்த்தக் காவடியெடுத்துப் பாவம் வினை அறுப்பார் நிலையைத் திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரிப் புண்ணிய தினத்தில் நாம் காணலாம்.

## இந்து வாலிபர் சங்கம் :

ஆண்டுதோறும் முக்கியமாகச் சிவராத்திரி தினத்தில் இந்து இளைஞர் சங்கங்களின் உறுப்பினர் திருக்கேதீச்சரத்தில் ஆற்றிவரும் பணியைச் சைவப்பெருமக்கள் நன்கு அறிவர். ஆண்டுதோறும் இந்து இளைஞர்கள் ஈழத்தின் பல பாகங்களிலுமிருந்து திருக்கேதீச்சரத்திற்குத் திரண்டுவந்து சிவராத்திரி தினத்தில் தொண்டுகள் பல புரிந்து வருகின்றனர். சிவராத்திரி இரவு முழுவதும் சுறுசுறுப்பாக ஓடியாடித் தொண்டாற்றும் அவ்விளைஞர்களின் உற்சாகமும் உழைப்பும் முன்மாதிரியானதே! சிவராத்திரிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகவே திருக்கேதீச்சரத்திற்கு வந்து அங்கு தங்கியிருந்து அவர்கள் ஆற்றும் பணிகள் மிகப் பல. சிலர் அர்ச்சனைச் சீட்டுக்கள் விற்பர். இன்னுஞ் சிலர் அர்ச்சனைச் சாமான்கள் விற்பர். வேறு சிலர் மாலை தொடுத்தல், ஆலயத்தைத் தூய்மை செய்தல், அன்னதானம் வழங்கல் முதலிய திருத்தொண்டுகளில் ஈடுபடுவர். கொழும்பு, யாழ்ப்பாணம், திரிகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலிருந்து திரண்டுவந்து திருத்தொண்டு பல புரியும் இவர்களைச் சைவ உலகம் பாராட்டி வரவேற்குமென்பது திண்ணம்.

## போக்குவரத்து வசதிகள் :

திருக்கேதீச்சர சிவராத்திரி விழாவில் கலந்து கொள்ளுவதற்கு ஆண்டுதோறும் வரும் அடியார்க்கு வேண்டிய போக்குவரத்து

வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. புகைவண்டி, வசு முதலிய வற்ருல் அடியார்கள் திருக்கேதீச்சரம் வந்து சேர்வதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்படுவது வழக்கமாகும். புகைவண்டியால் வரும் அடியார்கள் வவுனியா, மன்ஞர் ஆகிய புகையிரத நிலையங்களில் இறங்கியதும் வசுமூலம் திருக்கேதீச்சரத்திற்கு வருவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படும். பலவிடங்களிலிருந்து மன்ஞருக்குச் செல்லும் வசுக்களும், மன்ஞரிலிருந்து புறப்பட்டுப் பலவிடங்களுக் குச் செல்லும் வசுக்களும் சிவராத்திரித் தினத்திற் திருக்கேதீச்சரத் திற்கு வந்துபோகும். மேலும் சிவராத்திரி இரவு கழிந்து தீர்த்தம் முடிந்ததும் அடியார்கள் காலையில் வீடு திரும்புவதற்குப் போதிய வசுக்கள் திருக்கேதீச்சரத்திலிருந்து புறப்படத் திருப்பணிச் சபை யார் ஆண்டுதோறும் ஒழுங்குசெய்து வருகின்றனர்.

## சிவராத்திரித் தண்ணீர்ப்பந்தல்:

மன்ஞர்ச் சைவ அடியார்கள் சிவராத்திரித் தண்ணீர்ப்பந்தர் என்ற பெயருடன் தண்ணீர்ப்பந்தல் ஒன்றைச் சிவராத்திரி தினத் தில் நடாத்தி ஆற்றிவரும் சேவை குறிப்பிடத்தக்க தொன்ருகும். பகலும் இரவும் தொடர்ந்து பானவகை வழங்கி இவர்கள் ஆற்றும் தொண்டு ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற பரந்த பண்போடு கூடியதாகும். மேலும் சிவராத்திரிக்குத் திருக் கேதீச்சரத்திற்கு வரும் அடியார்கள் எல்லோருக்கும் தீர்த்தநாளிற் பாலாவிப் பாசன சேவைச் சங்கத்தாரால் அன்னதானம் வழங்கப் பட்டு வருகின்றது. விரும்பும் அடியார்களுக்கு சிவதீட்சை பெறு வதற்கும் ஒழுங்குகள் செய்யப்படும்.

இவ்வாறு சிவராத்தி விழா திருக்கேதீச்சரப் பழமையையும், மகிமையையும் விளக்குவதை அங்கு செல்லும் அடியார்கள் இனிது கண்டுகொள்வர்.

திருச்சிற்றம்பலம்.

உ

# திருக்கேதீச்சரத்தில் தீர்த்தக் காவடி

திருக்கேதீச்சரத்துக்கு யாத்திரை செய்யும் அடியார்கள் அங்குத் தீர்த்தக் காவடியெடுத்து மாகாலிங்கப் பெருமானை அபிடேகம் செய்து வணங்கும் காட்சி அற்புதமானது. திருக்கேதீச்சரத்திற் தீர்த்தக் காவடியெடுத்து வழிபடக்கூடிய ஒரு முறையைத் தொடக்கி வைத்த கைங்கரியம் திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரண சபைத் தலைவர் காலஞ்சென்ற சேர். கந்தையா வைத்தியநாதனையே சாரும். தீர்த்தக்காவடி எடுப்பதில் அடியார்கள் அடைகின்ற அனுபவங்கள் பலவெனக் கூறலாம். பத்தியுணர்வும், பரவசநிலையும் பெற்று, உலக இன்பங்களை மறந்து தீர்த்தக் காவடியெடுக்கும் அடியார்களின் நிலையை உணரமுடியுமேயொழிய, எடுத்துரைக்க வியலாது.

## புறப்படுதல் :

திருக்கேதீச்சர ஆலயத்தின் மேற்குப் பிரகாரத்தில் அமைந்துள்ள மகாலிங்க மண்டபத்திலிருந்து அடியார்கள் தீர்த்தக் காவடியெடுக்கப் புறப்படுவார்கள். அதிகாலையிலே குறிப்பிட்ட நேரத்தில் ஆண்களும் பெண்களும் மகாலிங்க மண்டபத்திற் கூடுவர். அவர்கள் ஒவ்வொருவர் கையிலும் வெள்ளிக்குடம் ஒன்று காணப்படும். கோயில் ஓதுவார் 'நமச்சிவாய வாழ்க' என்று சிவபுராணத்தை ஓதத் தொடங்குவார். அவரைத் தொடர்ந்து எல்லோரும் சிவ புராணத்தைச் சொல்லுவர். பத்திப்பரவசமான நிலையில் மகாலிங்க மண்டபத்தில் அவர்கள் ஓதும் சிவபுராண ஒலி பாலாவிக்கரையிற் கேட்கும். அடியார்கள் கூட்டமாக சிவபுராணத்தை வாய்விட்டு ஓதிக்கொண்டு பாலாவிக்கரையை நோக்கிப் புறப்படுவர். நெற்றியிற் திருநீறும், மார்பில் உருத்திராக்கமும், நாவிற் பஞ்சாட்சரமும் விளங்க அடியார்கள் பாலாவியை நோக்கிச் செல்லும் காட்சி பத்திப்பரவசமானது.

## தீர்த்தமாடுதல் :

பாலாவியை அடைந்ததும் அடியார்கள் தீர்த்தமாடத் தொடங்குவர். ''பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்'' என்று சில அடியார்கள் சுந்தரமூர்த்தி நாயனாரின் தேவாரத்தை


வாய்விட்டுப் பாடுவர். வேறு சிலர் தீர்த்தமேந்திச் செல்லும் வெள்ளிக் குடங்களை விளக்கித் தூய்மை செய்வர். வேறு சிலர் பாலாவித் தீர்த்தத்தில் நீராடுவர். இன்னும் சிலர் ''பரியதிரை யெறிய வரு பாலாவி'' என்று கூறிப் பாலாவியைப் பாடிப்பாடி நீராடுவர். இவ்வாறு ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் பாலாவியிற் தீர்த்தமாடுவர். அப்போது ஆலயத்து ஓதுவார் தமது வெள்ளிக் குடத்திற் பாலாவித் தீர்த்தத்தை நிறைத்துத் தலைமீது வைத்துக் கண்களை மூடி 'ஓம் நமசிவாய' என்று பஞ்சாட்சரத்தைப் பத்திசிரத்தையோடு ஓதுவர். அவ்வொலியே தீர்த்தக் காவடி புறப்படுவதற்கு ஆயத்தம் என்பதைப் புலப்படுத்தும். எனவே அடியார்கள் எல்லோரும் தத்தம் குடங்களிற் பாலாவித் தீர்த்தத்தை நிரப்பித் தலையிற் தாங்கிப் பஞ்சாட்சரத்தை ஓதிக்கொண்டு புறப்பட ஆயத்தமாவர். தீர்த்தமாடி நனைந்த ஆடையுடன் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் தீர்த்தக் காவடியைத் தலையிற் தாங்கிப் பாலாவியிலிருந்து கேதீச்சரப் பதிகங்களைப் பண்ணோடு பாடிக்கொண்டு ஆலயத்தை நோக்கிச் செல்லும் காட்சி சேக்கிழார்பெருமான் எடுத்துக்கூறும் சிவனடியார் திருக்கூட்டத்தையே நினைவுபடுத்தும்.

## பத்தி நிலை :

நனைந்த ஆடை, தலையிற் பாலாவித் தீர்த்தம், வாயிற் தேவாரப் பண், இந்நிலையில் அடியார்களின் கைகளிரண்டும் தலையிலுள்ள தீர்த்தக் குடத்தை இறுகப் பிடித்துக்கொள்ளும். கால்களை மெல்ல மெல்ல வைத்து அவர்கள் நடக்கத் தொடங்குவர். அப்போது மெய்யரும்ப விதிர்விதிர்த்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி அடியார்கள் திருக்கேதீச்சரப் பெருமானை நினைந்துருகுவர். புனிதமான பாலாவித் தீர்த்தத்தால் மகாலிங்கப் பெருமானை அபிடேகம் செய்யப் போகின்றோமே என்ற நினைவால் அவர்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கி வழியும். அப்போது அவ்வடியார்கள் உற்றார் உறவினரை மறந்து உலக இன்பங்களைத் துறந்து, இறைவனது நினைவோடு ஆலயத்தை நோக்கிச் செல்வர். ஆலயத்து வாயிலை அடைந்ததும் எம்பெருமானை நோக்கி அவர்கள் தீர்த்தக் காவடியுடன் நிற்கும் காட்சியை எங்ஙனம் எடுத்துக்கூறமுடியும்!

## வலம் வருதல் :

பின்னர் அடியார்கள் தீர்த்தக் காவடியுடன் ஆலயத்தை வலம் வருவர். வலம் வரும்போது சிவபுராணத்தை அவர்கள் ஓதுவார்கள்.



பூவுளானுமப் பொருகடல் வண்ணனும் புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் னடியிணை காண்கிலா வித்தக மென்னாகும்,
மாவும் பூகமுங் கதலியு நெருக்குமா தோட்டநன் னகர்மன்னித்
தேவிதன்னொடுந் திருந்து கேதீச்சரத் திருந்தவெம் பெருமானே.

— திருஞானசம்பந்தர்.

அம்பாள், முருகன், நடராசப்பெருமான் சந்நிதிகளில் அவர்கள் நின்று பக்தியோடு சிவபுராணத்தை ஓதுவர். முன்னையிலும் இப்போது அவர்களின் பத்திநிலை மேம்பட்டதாகவே இருக்கும். ஆலயத்தின் வாயிலை அடைந்து திரும்பவும் திருக்கேதீச்சரப் பெருமானை நோக்கி நின்று தம்மை மறந்த நிலையில் ''நாயிற்கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயவான தத்துவனே'' என்று பாடி நிற்பர். பின்னர் கூட்டமாக மகாலிங்க மண்டபத்தை அடைவர். அங்கே ஓதுவாரைப் பின்தொடர்ந்து அடியார்கள் மகாலிங்கப் பெருமானை மூன்றுமுறை வலம் வருவர்.

## அபிடேகம்:

மகாலிங்கப் பெருமானை வலம் வரும்போது ஓதுவார் 'ஓம் நமசிவாய' என்ற மந்திரத்தைப் பத்தியோடு ஓதுவர். அவர் ஓதுவதைத் தொடர்ந்து அடியார்களது 'ஓம் நமசிவாய' என்ற பேரொலி எழுந்து வானைப்பிளக்கும். முதலில் ஓதுவார் தாம் கொணர்ந்த பாலாவித் தீர்த்தத்தைப் பத்தியோடு மகாலிங்கப் பெருமானுக்கு அபிடேகம் செய்வார். அப்போது அரோகரா! அரோகரா! என்ற பேரொலி எழும். அவரைத் தொடர்ந்து ஏனைய அடியார்களும் எம்பெருமானுக்கு ஒவ்வொருவராக அபிடேகம்செய்து வணங்குவர். அடியார்கள் எல்லோரும் அபிடேகம்செய்து முடியும்வரை 'ஓம் நமசிவாய' என்ற ஒலி எழுந்துகொண்டே இருக்கும். இறுதியில் ஆலயத்தின் பிரதம குருக்கள் பஞ்சாலாத்தி காட்டுவார். அப்போது அடியார்கள் தம் கைகளைத் தலைமீது வைத்து 'கேதீச்'சரத்துப் பெருமானுக்கு அரோகரா! என்று வணங்கி நிற்பர். பின்னர் குரு அடியார்களுக்கு விபூதி பிரசாதம் வழங்குவர். விபூதி பிரசாதம் பெற்று மகாலிங்கப் பெருமானை வணங்கி மண்டபத்தைவிட்டு நீங்கும் அடியார்களின் அகமகிழ்ச்சி அவர்களின் முகத்திற் பிரதிபலிக்கும். தீர்த்தமாடிக் காவடியெடுத்து அபிடேகம்செய்து பெரும்பேறு பெற்றோம் என்று பெருமகிழ்ச்சிகொண்டு உதயகாலத்துப் பூசையைக் காண அவர்கள் விரைந்து செல்வர். அப்போது உதயகாலத்துப் பூசைக்கு ஆலயத்து மணி கேட்கும்.

''தொண்டர் நாள்தொறும் துதிசெய வருள்செய்
கேதீச்சரமது தானே''.

திருச்சிற்றம்பலம்.


௨

# திருக்கேதீச்சரத்தில் சிவானந்த குருகுலம்

அகில இலங்கை இந்துமாமன்றம் 6-2-1965 இல் நிறுவப்பட்டது. அன்று சைவசமய வளர்ச்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் அர்ச்சகர் பாட சாலை ஒன்று நிறுவப்படவேண்டுமெனப் பல அறிஞர்கள் கருத்துத் தெரிவித்தனர். அக்கருத்துக்களை ஏற்று அர்ச்சகர் பயிற்சிக் கலா சாலை ஒன்று நிறுவுவதென இந்துமாமன்றத்தினர் முடிவுசெய்தனர். குருகுலம் நிறுவுவதற்குரிய இடத்தைப் பற்றியும், அதனுடன் தொடர்புடைய ஏனைய விடயங்களையும் ஆராய்வதற்கு ஓர் உப குழு நியமிக்கப்பட்டது.

அந்த உபகுழுவினர் சீரான குருகுலக் கல்வி அமைதியும் புனித மும் நிறைந்த ஓர் ஆலயத்தின் அண்மையில் அமைவதே சாலச் சிறந்ததெனக் கருதினர். இளமைப் பருவத்தில் உள்ளத்தை ஒரு வழிப்படுத்துவதற்கும், கல்வியிலே கருத்தைச் செலுத்துவதற்கும் அமைதியான சூழ்நிலையும், தெய்வீகச் சுற்றாடலும் இன்றியமையா தனவென அக்குழுவினர் கருதினர். எனவே, மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமைந்த திருக்கேதீச்சரத்திலேயே குரு குலம் அமைய வேண்டுமென மாமன்றமும் கருதிற்று. இம்முயற்சி யில் முன்னின்று உழைத்தவர் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களாவர்.

திருக்கேதீச்சரத்திற் குருகுலத்தை நிறுவுவதற்கு வேண்டிய நிலத் தைத் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையார் கொடுத்துதவினர். குருகுலக் கட்டடத்தை அமைப்பதற்கு ரூபா 40,000/- வரை வேண்டியிருந்தது. இந்நிலையில் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் குறித்த தொகைப் பணத்தைப் பெறுவதற்கு அயராது உழைத்தார்கள். அவரின் முயற்சியின் பயனாய் ஒரு தரும நிறுவன மும், திருமதி சி. தம்பையா அவர்களும் ரூபா 30,000/- வரை கொடுத்துதவினர். இப்பணத்தைக்கொண்டு குருகுலக் கட்டடம் நிறுவப்பட்டது. இன்னும் வேண்டிய தளபாடங்களை வாங்கவும்,



திருக்கேதீச்சர ஆலயம்


மாணவர் இருப்பதற்கான விடுதியை அமைக்கவும் முடிந்தது. இன்னும் குருகுலத்திலேயே சிறந்த ஒரு நூல்நிலையத்தை நிறுவவும், குருகுலத்துச் சுற்றுடலைச் சிறந்த முறையில் அமைக்கவும் வாய்ப்பு ஏற்பட்டது.

கட்டடம், தளபாடம், விடுதி, ஏனைய வசதிகள் என்பன ஒழுங்கானதும் மாணவர்களைச் சேர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பிராமணப் பிள்ளைகளையே சேர்த்துப் பயிற்றுவதென முடிவுசெய்யப்பட்டது. அதற்கான விளம்பரங்கள் பத்திரிகையில் வெளிவந்தன. சிவானந்த குருகுலத்திற் சேர்ந்து படிக்கப் பல பிராமணப் பிள்ளைகள் முன்வந்தனர்.

சிவானந்த குருகுலத்தின் திறப்பு விழாவிற்கு வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. திறப்புவிழா பிலவ ஆண்டு தை மாதம் 13 ஆம் நாள் (20–1–62) வெள்ளிக்கிழமை நடைபெற்றது. திறப்பு விழாவிற் பல சைவப் பெரியார்கள் கலந்துகொண்டனர். கொக்குவில் த. குமாரசுவாமிப் புலவரவர்கள், சிவானந்த குருகுலத்தின் இன்றியமையாமையையும், அது சைவசமயத்துக்கு ஆற்றக்கூடிய நற்பணியையும் பற்றித் தமது பேச்சிற் குறிப்பிட்டார்கள். சிவானந்த குருகுலம் அமைந்துள்ள இடத்தின் சிறப்பையும், பெருமையையும் பாராட்டி இன்னும் பலர் சொற்பொழிவாற்றினர். சிவானந்த குருகுலம் ஆரம்பமானபோது பன்னிரண்டு மாணவர்கள் சேர்ந்தனர். இத்தாபனத்தின் முகாமையாளராக சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் பணியாற்றினுர்கள். அச்சுவேலி சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் பிரதம குருவாகவும், சிவஸ்ரீ. நாராயண சாஸ்திரிகள் துணைப் பிரதம குருவாகவும், கொக்குவில் த. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் தமிழ்ப் பயிற்சி ஆசிரியராகவும், சுன்னாகம் திரு. த. சிவலிங்கம் அவர்கள் செயலாளராகவும் கடமையாற்றினர்.

குருகுலத்திற் சேர்ந்த பன்னிரண்டு மாணவர்களும் 3 ஆண்டு பாடத்திட்டத்துக்கு அமைய மூன்றுண்டுப் பயிற்சியை மேற்கொண்டனர். மூன்று ஆண்டுகளிலும் இம்மாணவர்கள் வடமொழி, தமிழ்

திருக்கேதீச்சரம் — சிவானந்த குருகுலம்



குருகுல வகுப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கும் காட்சி

என்பனவற்றில் அறிவும், சமயக் கிரியாமுறைகளையும் நன்கு கற்ப தற்கு வாய்ப்பிருந்தது. வடமொழியில் காவியம், இலக்கணம், சுத்திபம், வேதம், ஆகமம் என்பனவற்றைக் கற்பதற்கு ஏற்பப் பாடத்திட்டம் அமைந்திருந்தது. அதேபோலத் தமிழில் இலக்கியம், இலக்கணம், சமயபாடம், திருமுறைகள் என்பனவற்றைப் படிப்ப தற்கும் பாடத்திட்டம் இடமளித்தது.



குருகுலம் வளர
சேர். கந்தையா வைத்தியநாதன் கண்காணிப்பு.

மூன்று ஆண்டுப் படிப்பை முடித்தபின்னர் மேலும் தொடர்ந்து உயர்தரக் கல்வி கற்பதற்குப் பாடத்திட்டம் அமைக்கப்பட்டிருந்தது. அந்த இரண்டு ஆண்டுகளிலும் வடமொழி, தமிழ் என்பனவற்றில் நல்ல அறிவையும், சிறந்த சமயக் கிரியைமுறைகளையும் பயின்று குருக்கள் பட்டம் பெறுவதற்குப் பாடத்திட்டம் இடமளித்தது. ஆனால் மூன்று ஆண்டுப் படிப்பை முடித்து மாணவர் எவரும் ஏனைய இரண்டு ஆண்டுகளிலும் உயர்தரப் படிப்பை மேற்கொள்ள முன்வர வில்லை.

முதல் மூன்று ஆண்டுகளிலும் கிரியாவிளக்கம், முத்திரா லட்சணம், வைதீகசந்தி, சைவசந்தி மண்டலங்கள் வரைதல்,

சதாசாரம், பவித்திரம், கூர்ச்சம் முதலியன கற்றுகவேண்டும். இன்னும் ஆலயத்துக்குச் சென்று மூர்த்திகளைச் சுத்தம் செய்தல், வேறு கைங்கரியங்கள், கோயிற் பழக்கங்கள், கிரியைகள் என்பனவற்றைச் செய்முறையாகப் படிப்பதற்கும் பாடத்திட்டம் இடமளித்தது.

சிவானந்த குருகுலத்திற் சேர்ந்து பயின்ற மாணவர்களுக்குக் கல்வி, உணவு, உடை, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப் பட்டன. ஒரு மாணவனுக்கு ஓர் ஆண்டுக்கு ரூபா 600/– வரை வேண்டியிருந்தது. இச்செலவுகளைப் பின்வரும் சைவத் தாபனங்களும், சைவப் பெரியார்களும் கொடுத்து உதவினர்.

1. திருக்கேதீச்சரம் புனருத்தாரண சபை.
2. கொழும்பு விவேகானந்த சபை.
3. கொழும்பு, கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை.
4. திருமதி சிவானந்தம் தம்பையா அவர்கள்.
5. நல்லூர் தேவஸ்தான முகாமையாளர்.
6. திரு. எஸ். நவரத்தினம் அவர்கள்.
7. இன்னும் பலர்.

இந்துசமய ஆலோசனைச் சபை ஆண்டொன்றிற்கு ரூபா 1000/– கொடுத்து உதவியுள்ளது. ஏனைய செலவுகளையும், பொறுப்புக்களையும் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் பொறுப்பேற்று நடாத்தினர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கல்வி கற்று மாணவர் மூன்று ஆண்டுகளைப் பூர்த்திசெய்து வெளியேறி யுள்ளனர். இவர்கள் இப்போது பல ஆலயங்களில் அர்ச்சகர்களாக அமர்ந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். இவர்கள் இவ்வாறு ஆலயங்களில் இரண்டு ஆண்டுகள் பயிற்சிபெற்றுத் திரும்பிவந்து சிவானந்த குருகுலத்திற் சேர்ந்து பயின்றால் ஏனைய இரண்டு ஆண்டு களின் பின்னர் ஆசாரிய பட்டம் பெறுவர்.

திருக்கேதீச்சரம் — சிவானந்த குருகுலம்



மூன்று ஆண்டுகள் தொடர்ந்து
வேதசிவாகமக் கல்விபயின்ற பன்னிரு குருகுல மாணவர்களும்
சமஸ்கிருதப் பயிற்சி உப அதிபரும்

இவ்வாறு மாணவர் பயிற்சிபெற்று வெளியேறிய பின்னர், புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கு அகில இலங்கை இந்து மாமன்றம் முயன்றது. அப்போது பிராமணரல்லாத சைவப் பிள்ளைகளையும் சேர்க்க வேண்டுமெனப் பலர் அபிப்பிராயம் தெரிவித்தனர். அவ்வபிப்பிராயத்தை ஏற்று சைவப் பிள்ளைகளுக்கும் அர்ச்சகர் பயிற்சி ஏற்றமுறையில் அங்கு அளிப்பதென இந்து மாமன்றம் முடிவு செய்தது. இந்தியாவிலிருந்து தகுதிவாய்ந்த ஓர் ஆசிரியரை வரவழைத்துச் சிவானந்த குருகுலத்தை நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. இப்போது தகுந்த ஓர் ஆசிரியரின் தலைமையில் மாணவர் சிவானந்த குருகுலத்திற் பயிற்சியைப் பெற்று வருகின்றனர். இம்முயற்சியைச் செவ்வனே செய்துவரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தாரைச் சைவ உலகம் பாராட்டி வரவேற்கவேண்டும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்".

திருச்சிற்றம்பலம்.

௨

# திருக்கேதீச்சர நாதன் ஊஞ்சல்

## காப்பு

உலகமெலாந் தனதுருவா யொளிர்வி ராட்டின்
ஓங்குமிடை நாடியா மிலங்கை தன்னில்
நிலவுதிருக் கோணமலை கிழக்கின் கண்ணே
நிகரில்கதிர் காமந்தென் திசையின் கண்ணே
மலருநகு லேசாதி வடக்கின் கண்ணே
மருவமேற் றிசைக்கேதீச் சரத்தான் மீது
இலகுதமிழ் ஊஞ்சலிசை யடியேன் பாட
இனிதருளும் கணபதிதாள் காப்ப தாமே.

## பதிகம்

திருவோங்கு நால்வேதம் தம்ப மாக
சிறந்த சிவாகமங் கள்மேல் விட்ட மாக
மருவோங்கு மாறங்கம் தாம்ப தாக
வளர்கலைகள் ரத்னமணிப் பலகை யாக
தருமாதி நான்குமுயர் சிங்க மாகத்
தாங்கவொளிர் பிரணவவொண் பீட மீதில்
கருணைமிகு திருக்கேதீச் சரநா தா! நற்
கௌரியுமை யுடனிருந்தே ஆடீ ரூஞ்சல்.

ஈசானம் நவரத்தினக் கிரீடம் மின்ன
எழில்நீறு திலகம்தற் புருடம் மன்ன
தேசான அகோரமதில் மதாணி கண்டி
திகழ்வாம தேவமதில்யோக பட்டம்
மாசான தகற்றிடுசத் யோசா தத்தில்
மறைச்சிலம்பு கிடந்தொலிப்ப வாம பாகம்
பூசாநு சாரியுமை கௌரி மன்னப்
பொலிகேதீச்சர நாத! ஆடீ ரூஞ்சல்.

சந்திரனும் சூரியனும் குடைகள் தாங்கச்
சாமரையை வாயுவெடுத் திரட்டி நிற்ப
இந்திரன்தான் ஆலவட்டம் எடுத்தே ஏந்த
இருபாலும் விசிறிகொடு வருணன் வீச
கொந்தலர்பூந் தட்டேந்திக் குபேரன் போற்றக்
குதுகலமாய் அக்கினிகண் ணூடி காட்ட
வந்தனைசெய் பூதங்கள் நடனம் செய்ய
மாதுகெளரி மணவாளா! ஆடீ ரூஞ்சல்.

அணியாக அமரர்குலம் தொழுது வாழ்த்த
அன்பர்கள்தாம் பண்களிசை யமையப் போற்ற
கணிநாத வேதம்மறை யவர்க ளோத
கந்தருவர் தும்புருநா ரதர்கள் பாட
பணியாக ஆகமங்கள் ஆய்ந்து தேர்ந்து
பத்தியுடன் ஆதிசைவர் பூசை செய்ய
மணியாரு முறுவலுமை கெளரி தானும்
மகிழ்கேதீச் சரநாதா! ஆடீ ரூஞ்சல்.

சங்கினொடு வங்கமலி சமுத்ர தீர்த்தம்
சார்ந்தவர்தம் பவம்தீர்பா லாவித் தீர்த்தம்
அங்கைகவர் கனியுண்ண மந்தி தாவும்
அயலில்மயில் நடஞ்செய்பொழில் மாதோட்டத்தில்
எங்குமறை யொலியோங்க இசையுந் தேங்க
எழிலாரு மரம்பையர்கை வடந்தொட் டாட்ட
மங்கையுமை கெளரியிடப் பாகம் மேவ
வளர்கேதீச் சரநாதா! ஆடீ ரூஞ்சல்.

கேதுதிருத் தலம்வந்து பூசித் தேத்திக்
கேட்டவரம் பெற்றமையாற் கிளந்த நாமம்
ஏதுவினாற் றிருக்கேதீச் சரமென்றாக
இறையருளாற் போற்றிவரு மாதோட்டத்தில்
ஓதுபல நலங்க ளெல்லாம் உயர்தல் கண்டு
உவந்தடியார் திருப்பணியில் ஊக்கம் கொள்ள
மாதுமையாம் கெளரியிடப் பாகம் மன்ன
வளர்கேதீச் சரநாதா! ஆடீ ரூஞ்சல்.

சூதமொரு கதலிகமு காரும் சோலை
சூழுமளி நறைதேரு மாதோட் டத்தில்
மாதவமார் மேருமுடி யிருப்பக் கண்ட
மகாதுவட்டா தளியமைத்து நகர மாக்கி
தாதுநிறை மலர்ச்சடையா யுனைப்பூ சித்துத்
தன்பெயரால் நகர்விளங்க வரங்க ளீந்து
மாதுமையாள் கௌரியிடப் பாகம் மேவ
மகிழ்கே தீச்சர நாதா! ஆடீ ரூஞ்சல்.

ஆய்ந்தமலர் மாலைதொடுத் தணியார் ஓர்பால்
அன்பினொடு மைந்தெழுத்தும் செபிப்பார் ஓர்பால்
தோய்ந்துதிரு மஞ்சனநீர் சுமப்பார் ஓர்பால்
தூயதிரு வலகுமெழுக் கமைப்பார் ஓர்பால்
ஏய்ந்தவிளக் கிடுவார்சங் கிசைப்பார் ஓர்பால்
இன்னிசைமங் கலநாதம் இசைப்பார் ஓர்பால்
வாய்ந்தஉமை கௌரியருள் வழங்க ஓர்பால்
வளர்கேதீச் சரநாதா! ஆடீ ரூஞ்சல்.

ஐங்கரனுர் தந்தையரே! ஆடீ ரூஞ்சல்
ஆறுமுகனைத் தந்தவரே! ஆடீ ரூஞ்சல்
அங்கனக வில்லியரே! ஆடீ ரூஞ்சல்
அரிபிரமர்க் கரியவரே! ஆடீ ரூஞ்சல்
கங்கையணி செஞ்சடையீர்! ஆடீ ரூஞ்சல்
காலனையு தைத்தவரே! ஆடீ ரூஞ்சல்
செங்கனிவாய்க் கௌரிபங்கா! ஆடீ ரூஞ்சல்
திருக்கேதீச் சரநாதா! ஆடீ ரூஞ்சல்.

அந்தணர்கள் வாழிசுரர் ஆன்கள் வாழி
அருமறைகள் வாழிசிவா கமங்கள் வாழி
செந்தமிழார் திருமுறைகள் சைவம் வாழி
செங்கோலாய் அரசநெறி சிறந்து வாழி
சுந்தரமார் நீறுகண்டி துலங்கி வாழி
தூயவடி யார்களும்ஐந் தெழுத்தும் வாழி
வந்துபொழி மறைவாழி கௌரி யம்மை
மன்திருக்கே தீச்சரன்தாள் வாழி வாழி.

## லாலி

இராகம் உசேனி

லாலிலா லீஜெக தீச லாலி — இந்த
ஞாலமுழு துய்யவருள் தேச லாலி
ஈசதிருக் கேதீச்சர நாத லாலி — நாளும்
இன்பருளும் கௌரியுமை பாகலாலி.

காமனைமுன் காய்ந்ததிருக் கண்ண லாலி — வெய்ய
காலனையு தைத்ததிருக் கால லாலி
வாமமுறை கௌரிமணவாள லாலி — நல்ல
வாழ்வுதரும் கேதீச்சர நாத லாலி.

## எச்சரீக்கை

இராகம் சங்கராபரணம்

அந்தணர்கள் வேதமோத ஆதிசைவர் பூசைசெய்ய
துந்துபியைந் தும்முழங்கத் தொழுவீர் எச்சரீக்கை
வந்திமையோர் போற்றிசைப்ப மங்கைகௌரி கேதீச்சரத்
தெந்தைகொலு வைபவங்காண் யாரும் எச்சரீக்கை.

வள்ளல்திருக் கேதீச்சர நாதன்கௌரி யம்மையருள்
மன்னுதிரு மணங்கண்டு வாழ்வீர் எச்சரீக்கை
உள்ளமகிழ் பூத்துயிர்கள் ஓங்குபர மானந்தம்
கொள்ளுமண மென்பதுளம் கொள்வீர் எச்சரீக்கை.

## பராக்கு

இராகம் பிலஹரி

அகில வுலகமுதல் ஆரண காரண ஞயபரம் பொருளாம்
ஐயனை யமரர்கள் வையக முறைபவர் அடிதொழுவீர் பராக்கு
மகிழும லர்ப்பொழில் சூழ் மாதோட்டத்தில் வாழுமை கௌரிதனை
வள்ளல்கே தீச்சர நாதனை வழிபடும் மாதவரே பராக்கு.

மங்கல சங்காலி பொங்கும்பல் லியவொலி எங்குமெ ழுந்தொலிப்ப
வருபவர் புப்ழீதரு பணிபல முறைசெயும் வண்மையரே பராக்கு
பங்கய னரியறி யாதபதந்தொழும் பான்மை யெமக்கருளும்
பண்மொழி கௌரிகே தீச்சர நாதனைப் பாடுவீர் பராக்கு.

## மங்களம்

இராகம் : மத்யமாவதி தாளம் : ஆதி

### பல்லவி

மங்களம் ஜெய மங்களம் — ஜெய ஜெய — மங்

### அநுபல்லவி

ஐங்கரனும் முன்னவற்கும் ஆறுமுக நம்பியற்கும்
அம்மைதெய்வ யானைவள்ளி அணிமயில்வேல் சேவலுக்கும் — மங்

### சரணம்

தெய்வநட ராசருக்கும் சிவகாமித் தேவியர்க்கும்
சேர்ந்தமணி வாசகற்கும் திருத்தொண்டு செய்பவர்க்கும்
நவ்விவிழிக் கௌரிதிருக் கேதீச்சர நாதருக்கும்
நற்றிருப்ப ணிச்சபைக்கும் நயந்து போற்றி செய்பவர்க்கும்—மங்

கௌரி அம்பாள்சமேத கேதீச்சரநாதன் திருவருள் துணைகொண்டு

ஆக்கியோன்

புலவர். த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள்.

---

குறிப்பு : 2 ஆம் பாட்டு.

| | | |
|---|---|---|
| ஈசானம் | — | திருமுடி |
| தற்புருஷம் | — | திருமுகம் |
| அகோரம் | — | இருதயம் |
| வாமதேவம் | — | உந்தி |
| சத்யோசாதம் | — | திருவடி |

திருச்சிற்றம்பலம்.

உ

திருக்கேதீச்சரத்

# தேவாரத் திருப்பதிகங்கள்





திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

உ

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

# திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகம்

பண் — நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

விருது குன்றமா மேருவி னாணர
வாவன லெரியம்பாற்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருதுகின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மா தோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினையடையாவே. 1

பதவுரை: விருது குன்ற — திரிபுரத்திலுள்ளோர் பெற்றிருந்த வெற்றிகெட, மா மேருவில் — மகாமேருவை வில்லாகவும், நாண் அரவு ஆக — ஆதிசேடனை நாணாகவும்கொண்டு, அரி அம்பால் பொழுது — சுடுகின்ற அக்கினியாகிய அம்பினாலே போர்செய்து, மூ எயில் செற்றவன் — மூன்று கோட்டைகளையும் அழித்த சிவ பெருமான், பற்றி நின்று உறை பதி — விரும்பி வீற்றிருக்கும் இட மாகவும், எந்நாளும் கருதுகின்ற ஊர் — எப்பொழுதும் நினைக்கப் படுகின்ற ஊராகவும் உள்ள, கனை கடல் கடிகமழ் பொழில் அணி மாதோட்டம் — முழங்குகின்ற கடல்சூழ்ந்த வாசனை கமழும் சோலை செறிந்த மாதோட்டத்தின் கண், கருது நின்ற கேதீச்சரம் கைதொழ — எவரும் மதிக்கும்படியாயுள்ள திருக்கேதீச்சரம் என்னும் தலத்தை வணங்க, கடுவினை அடையாவே — அங்ஙனம் வணங்குவோரைத் தீவினைகள் அடையா.

இதன்பொருள் : சிவபெருமான் திரிபுரத்திலுள்ளோர்கள் தாங் கொண்ட வெற்றிகெட மகாமேருவை வில்லாகவும், ஆதிசேடனை நாணாகவும் கொண்டு சுடுகின்ற அக்கினியாகிய அம்பினாலே போர் செய்து அழித்தான். அப்பெருமான் விரும்பி வீற்றிருக்கும் இடமாக எந்நாளும் நினைக்கப்படுகின்ற ஊர் மாதோட்டம். முழங்குகின்ற கடல் சூழ்ந்த வாசனை கமழுஞ் சோலை செறிந்தது மாதோட்டம். அம்மாதோட்டத்திலே எவரும் மதிக்கும்படியுள்ள திருக்கேதீச்சரம் என்னும் தலத்தை வணங்குவோரைத் தீவினைகள் சேரா என்பது.

பாடல் வீணையர் பலபல சரிதைய
　　ரெருதுகைத் தரு நட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்ட
　　நஞ்சுண்டிருள் கண்டத்தர்
ஈடமாவது விருங்கடற் கரையினி
　　லெழிறிகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக்
　　கெடுமிடர் வினைதானே. 2

பதவுரை : பாடல் வீணையர் — பாடுகின்ற வீணையை உடையவரும், பல பல சரிதையர் — பல பல ஒழுக்கத்தை உடையவரும், எருதுகைத்தரு நட்டம் ஆடல் பேணுவர் — தருமதேவதையாகிய இடபத்தைச் செலுத்திப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழிலாகிய அரிய நடனத்தை விரும்புகின்றவரும், அமரர்கள் வேண்ட நஞ்சு உண்டு அருள் கண்டத்தர் — தேவர்கள் முறையிட நஞ்சை உண்டு இருண்ட கண்டத்தை உடையவருமாகிய சிவபெருமானுக்கு, ஈடமாவது — இடமாவது, இரும் கடல் கரையினில் எழில் திகழ் மாதோட்டம் — பெரிய கடற்கரையிற் பொருந்திய அழகு விளங்குகின்ற மாதோட்டத்திலுள்ள, கேடு இலாத திருக்கேதீச்சரம் — கேடு இல்லாத திருக்கேதீச்சரம் என்னும் தலமாம், தொழுது எழக்கெடும் இடர் வினைதானே — அதனை வணங்கி எழ வருத்தத்தைச் செய்யும் வினைகள் எல்லாம் கெடும், என்றவாறு.

**இதன்பொருள் :** சிவபெருமான் பாடுகின்ற வீணையை உடையவர்; பலபல ஒழுக்கத்தை உடையவர்; தருமதேவதையாகிய இடபத்தைச் செலுத்திப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்கிற ஐந்தொழிலாகிய அரிய நடனத்தை விரும்புகின்றவர். தேவர்கள் முறையிட நஞ்சையுண்டு இருண்ட கண்டத்தை உடையவர். அப்பெருமானுக்கு இடமாவது பெரிய கடற்கரையிற் பொருந்திய அழகு விளங்குகின்ற மாதோட்டத்திலுள்ள கேடில்லாத திருக்கேதீச்சரம் என்னும் தலமாம். அதனை வணங்கி எழ வருத்தத்தைச் செய்யும் தீவினைகளெல்லாங் கெடும்.

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையினா
 ரறைகழல் சிலம் பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர் பாடுவர்
 அகந் தொறு மிடுபிச்சைக்
குண்ண லாவதோ ரிச்சையி னுழல்பவ
 ருயர்தரு மாதோட்டத்
தண்ண னண்ணுகே தீச்சர மடைபவர்க்
 கருவினை யடையாவே. 3

பதவுரை : பெண் ஓர் பாகத்தர் — தமது திருவருளாகிய சக்தியை ஒரு பாகத்திலுடையவரும், பிறை தவழ் சடையினர் — சுத்த ஞானமாகிய இளம்பிறை தவழும் சடையை உடையவரும், அறைகழல் சிலம்பு ஆர்ப்ப சுண்ணம் ஆதரித்து ஆடுவர் — நான்கு வேதங்களாகிய வீரக்கழலும் சிலம்பும் ஒலிக்க விபூதியை விரும்பி அணிபவரும், பாடுவர் — பற்பல கீதங்களைப் பாடுகின்றவரும், அகம் தொறும் இடு பிச்சைக்கு உண்ண ஆவது ஓர் இச்சையில் உழல்பவர் — நிரீச்சுரவாதிகளாகிய முனிவர்களுக்கு ஈசன் ஒருவர் உண்டென்னும் உண்மையைப் புலப்படுத்தும் அருள் காரணமாக அவர்கள் வீடுதோறும் இடுகின்ற பிச்சையை உண்ணவேண்டும் என்னும் விருப்பமுடையவர்போலச் சென்றவருமாகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற, உயர் தரு மாதோட்டம் — உயர்ந்த மாதோட்டத்திலுள்ள கேதீச்சரம் அடைபவர்க்கு, அருவினை அடையாவே — திருக்கேதீச்சரம் என்னும் தலத்தை அடைபவர்களைத் தீவினையடையா என்றவாறு.

இதன்பொருள்: சிவபெருமான் தமது திருவருளாகிய ஒரு பாகத்தில் சத்தியையும் சுத்த ஞானமாகிய இளம்பிறை தவழும் சடையையும் உடையவர். நான்கு வேதங்களாகிய வீரக்கழலும், சிலம்பும் ஒலிக்க விபூதியை விரும்பி அணிபவர். பற்பல கீதங்களைப் பாடுகின்றவரும், நிரீச்சுரவாதியாகிய முனிவர்களுக்கு ஈசன் ஒருவர் உண்டென்னும் உண்மையைப் புலப்படுத்தும் அருள் காரணமாக அவர்கள் வீடுகள்தோறும் இடுகின்ற பிச்சையை உண்ணவேண்டுமென்னும் விருப்புடையவர்போலச் செல்பவர். அப்பெருமான் வீற்றிருக்கின்ற உயர்ந்த மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரமென்னுந் தலத்தை அடைபவர்களைத் தீவினை அடையா என்று.

பொடிகொண் மேனியர் புலியத ளரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொண் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடன் மாதோட்டத்
தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம்
பரிந்த சிந்தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல்
மொய்த்தெழும் வினைபோமே. 4

பதவுரை: பொடி கொள் மேனியர் — விபூதியை அணிந்த மேனியை உடையவரும், புலி அதள் அரையினர் — புலித்தோலை உடுத்த அரையை உடையவரும், விரிதரு கரத்து ஏந்தும் வடிகொள் மூவிலை வேலினர் — விரிந்த கையில் ஏந்துகின்ற இச்சை, ஞானம், கிரியை என்னும் முத்தலைச் சூலத்தை உடையவரும், நூலினர் — உபவீதத்தை உடையவருமாகிய சிவபெருமான், மறிகடல் மாதோட்டத்து அடிகள் ஆதரித்து இருந்த கேதீச்சரம் — திரையெழுகின்ற கடல் சூழ்ந்த மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரத்திலே, பரிந்த சிந்தையர் ஆகி முடிகள் சாய்த்து அடி பேணவல்லார் மேல் — அன்புகொண்ட மனத்தையுடையராகித் தலையைச் சாய்த்து அப்பெருமானது பாதங்களை வணங்கவல்ல தொண்டர் மேல், மொய்த்து எழும் வினைபோம் — திரண்டெழுகின்ற வினைகள் கெடும் என்றவாறு.

இதன் பொருள்: சிவபெருமான் விபூதியை அணிந்த திருமேனியை உடையவர்; புலித்தோலை உடுத்த அரையை உடையவர். இச்சை, ஞானம், கிரியை என்னும் முத்தலைச் சூலத்தை உடையவர். அப்பெருமான் திரை பொருந்துகின்ற கடல் சூழ்ந்த மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரத்திலே விரும்பி வீற்றிருக்கின்றான். அப்பெருமானுடைய பாதங்களை அன்புகொண்ட மனத்தையுடையராகித் தலைகளைச் சாய்த்து வணங்கவல்ல தொண்டர்மேலே திரண்டெழுகின்ற தீவினைகள் கெடும், என்றவாறு.

நல்ல ராற்றவு ஞானநன் குடையர்தம்
    மடைந்தவர்க் கருளிய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்
    மலிகடன் மாதோட்டத்
தெல் லையில் புக ழெந்தைகே தீச்சர
    மிராப்பக னினைந் தேத்தி
அல்ல லாசறுத் தரனடி யிணை தொழு
    மன்பரா மடியாரே. 5

பதவுரை: நல்லர் ஆற்றவும் — மிகவும் நன்மையை உடையவரும், ஞான நன்கு உடையவர் — ஞானத்தை மிகவும் உடையவரும், தம் அடைந்தவர்க்கு அருளிய வல்லர் — தம்மை அடைந்த அன்பர்களுக்கு அருளிச்செய்ய வல்லவரும், பார்மிசை வான்பிறப்பு இறப்பு இலர்—உலகத்திலுள்ள பெரிய பிறப்பு இறப்பு இல்லாதவருமாகிய அளவிறந்த புகழையுடைய சிவபெருமான், மாதோட்டத்து எல்லையில் புகழ் எந்தை கேதீச்சரம் — வளங்கள் நிறைந்த கடல்சூழ்ந்த மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரம் என்னும் தலத்தை, இராப் பகல் நினைத்து ஏத்தி — இரவும் பகலும் சிந்தித்துத் துதித்து, அல்லல் ஆசு அறுத்து அரன் அடி இணைதொழும் அன்பராம் அடியரே — துக்கத்தை முழுதுங் கெடுத்து அப்பெருமானது இரு பாதங்களையும் வணங்கும் அன்பர்களே சிவனடியார் என்று சொல்லப்பெறுவர், என்றவாறு.

இதன்பொருள் : சிவபெருமான் மிகவும் நன்மையை உடையவர். ஞானத்தை மிகவுமுடையவர். தம்மையடைந்த அன்பர்களுக்கு அருளைச்செய்ய வல்லவர். பிறப்பிறப்பில்லாதவர். அளவிறந்த புகழை உடையவர். அப்பெருமானது வளங்கள் நிறைந்த கடல் சூழ்ந்த மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரமென்னுந் தலத்தை இரவும் பகலும் சிந்தித்துத் துதித்துத் துக்கத்தை முழுதுங் கெடுத்து அப்பெருமானது இருபாதங்களையும் வணங்கும் அன்பர்களே சிவனடியார்கள் என்று சொல்லப்பெறுவர்.

பேழை வார்சடைப் பெருந்திரு மகடனைப்
  பொருந்த வைத் தொருபாகம்
மாழை யங்கையற் கண்ணிபா லருளிய
  பொருளினர் குடி வாழ்க்கை
வாழை யம்பொழின் மந்திகள் களிப்புற
  மருவிய மா தோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்த நீண் மார்பர்
  கேதீச்சரம் பரியாரே. 6

பதவுரை: பேழை வார் சடைப் பெரும் திருமகள் தனைப் பொருந்த வைத்து—பரந்த உயர்ந்த பெட்டிபோன்ற சடாமுடியிலே பெரிய கங்கையைப் பொருந்தும்படி வைத்து, ஒரு பாகம் மாழை அம் கையில் கன்னிபால் அருளிய பொருளினர்—ஒரு பாகத்தை அருட் சக்திக்குக் கொடுத்த கொள்கையை உடையவரும், கேழல் வெண் மருப்பு அணிந்த நீண் மார்பர் — விஷ்ணுவாகிய பன்றியினது எயிற்றை அணிந்த மார்பையுடையவருமாகிய சிவபெருமான், குடி வாழ்க்கை வாழை அம்பொழில் மந்திய களிப்புற மருவிய மாதோட் டத்துத் திருக்கேதீச்சரம் பிரியாரே—தமது இருப்பிடமாகிய வாழைச் சோலைகளிலே மந்திகள் மகிழ்ச்சி பெருக இருக்கின்ற மாதோட்டத்தி லுள்ள திருக்கேதீச்சரம் என்னும் தலத்தை ஒரு காலத்தும் பிரியார், என்றவாறு.

இதன்பொருள் : சிவபெருமான் பரந்து உயர்ந்த பெட்டி போன்ற சடாமுடியிலே பெரிய கங்கையைப் பொருந்தும்படி வைத்

துள்ளார். ஒரு பாகத்தை அருட்சக்திக்குக் கொடுத்த கொள்கையை உடையவர். விஷ்ணுவாகிய பன்றியினது எயிற்றை அணிந்த மார்பை உடையவர். அப்பெருமான் தமது இருப்பிடமாகிய வாழைச் சோலைகளிலே மந்திகள் மகிழ்ச்சி பெருக இருக்கின்ற மாதோட்டத் திலுள்ள திருக்கேதீச்சரம் என்னும் தலத்தை ஒருகாலமும் பிரியார் என்றவாறு.

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்
பல்லுலகினி லுயிர் வாழ்க்கை
கண்ட நாதனர் கடலிடங் கைதொழக்
காதலித் துறை கோயில்
வண்டு பண் செயு மாமலர்ப் பொழின் மஞ்ஞை
நடமிடு மாதோட்டத்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய்
கேதீச்சரமது தானே. 7

பதவுரை: பண்டு நால்வருக்கு அறம் உரைத்து அருளி — முற் காலத்திலே சனகாதி நால்வருக்கும் தருமங்களை உபதேசித்து அருளி, பல் உலகினில் உயிர்வாழ்க்கை கண்ட நாதனல் — பல உலகங்களிலு முள்ள ஆன்மாக்கள் அத்தருமங்களை மேற்கொண்டொழுகும்படி செய்த சிவபெருமான், கைதொழக் காதலித்து உறைகோயில் — உலகத்திலுள்ளார் வணங்க விரும்பி வீற்றிருக்கின்ற கோயில், வண்டு பண்செய மாமலர்ப் பொழில் மஞ்ஞை நடமிடு மாதோட்டம் — வண்டுகள் கீதங்களைப் பாடப் பூஞ்சோலையில் மயில்கள் கூத்தாடு கின்ற மாதோட்டத்திலுள்ள, தொண்டர் நாள்தொறும் துதிசெய அருள்செய் கேதீச்சரம் அதுதானே — அடியார்கள் நாடோறும் தோத்திரஞ் செய்ய அப்பெருமான் அவர்களுக்குத் திருவருள் செய் கின்ற திருக்கேதீச்சரம் என்னும் தலமாம் என்றவாறு.

இதன்பொருள்: திருக்கேதீச்சரம் மாதோட்டத்தில் இருக்கிறது. மாதோட்டத்திலுள்ள பூஞ்சோலைகளில் வண்டுகள் கீதம்பாட மயில் கள் நடனமிடும் மாதோட்டத்தில் கோயில் கொண்டுள்ள இறைவன்

அடியார்கள் நாடொறுந் தோத்திரஞ் செய்ய அவர்களுக்குத் திருவருள் செய்கின்றான். அப்பெருமான் முற்காலத்திலே சனகாதி நால்வருக்கும் தருமங்களை உபதேசித்தருளி, பலவுலகங்களிலுமுள்ள ஆன்மாக்கள் அத்தருமங்களை மேற்கொண்டொழுகும்படி செய்தவர். உலகத்தார் வணங்க விரும்பி மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச் சரத்திற் கோயில்கொண்டுள்ளான்.

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன லங்கெட வடர்த்தவர்க் கருள் செய்த
தலைவனார் கடல் வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்
பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடு மடியவ ரிறைஞ்சு
கேதீச்சரத் துள்ளாரே. 8

பதவுரை : தென் இலங்கையர் குலபதி மலைநலிந்து எடுத்தவன் முடி திண்தோள் தன்நலம் கெட-அடர்த்து அவற்கு அருள்செய்த தலைவனார் — கைலாசம் என்னும் மலையை வருந்தி எடுத்த தெற்கின் கண்ணுள்ள இலங்கையிலுள்ளார்க்கு அரசனாகிய இராவணனுடைய தலைகளும் வலிய புயங்களும் தத்தம் நிலைகெட நெரித்துப் பின் அவன் வேண்டுதல் செய்ய அருள்புரிந்த முதல்வர், கடல் வாய்ப் பொன் இலங்கிய முத்து மாமணிகளும் பொருந்திய மாதோட்டத்து துன்னி அன்பொடும் அடியவர் இறைஞ்சு கேதீச்சரத்து உள்ளாரே — கடலின் கண்ணுள்ள பொன்னும் பிரகாசிக்கின்ற முத்துக்களும் மாணிக்கங்களும் செறிந்த மாதோட்டத்திலுள்ள சிந்தித்து அன் போடும் அடியவர்கள் வணங்குகின்ற திருக்கேதீச்சரம் என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே, என்றவாறு.

இதன்பொருள் : கடலின்கண்ணுள்ள பொன்னும், பிரகாசிக் கின்ற முத்துக்களும், மாணிக்கங்களும் மாதோட்டத்திற் செறிந்துள் ளன. அந்த மாதோட்டத்திலுள்ள அன்போடும் அடியார்கள்

வணங்குகின்ற திருக்கேதீச்சரம் என்னும் தலத்தில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளான். அப்பெருமான் கைலாசமென்னும் மலையை வருந்தி எடுத்த தெற்கின் கண்ணுள்ள இலங்கையின் அரசனான இராவணனுடைய தலைகளும் வலிய புயங்களும் தத்தம் நிலைகெட நெரித்துப் பின்னர் அவன் வேண்ட அருள்புரிந்த முதல்வர்.

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும்
புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் னடியிணை காண்கிலா
வித்தக மென்றாகும்
மாவும் பூகமுங் கதலியு நெருங்குமா
தோட்டநன் னகர் மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகேதீச் சரத்
திருந்தவெம் பெருமானே. 9

பதவுரை: மாவும் பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்ட நன்னகர் மன்னி — மாமரங்களும் கமுகுகளும் வாழைகளும் நெருங்கிய மாதோட்டம் என்னும் தலத்திலே சேர்ந்து, தேவி தன்னொடும் திருந்து கேதீச்சரத்து இருந்த எம் பெருமானே — கௌரியம்பிகை என்னும் அருட்சக்தியோடு திருக்கேதீச்சரம் என்னும் தலத்திலே வீற்றிருக்கின்ற நமது கடவுளே!, பூஉளானும் பொருகடல் வண்ணனும் — பிரமாவும் விஷ்ணுவும், புவியிடத்து எழுந்து ஓடி மேவி நாடி — முறையே அன்னமும் பன்றியுமாய் மேலே பறந்தும் பூமியைக் கிழித்தும், நின் அடியிணை காண்கிலா வித்தகம் என்றாகும் — தேவரீருடைய முடியையும் அடியையும் காண்கிலர்; அவருடைய கடவுட்தன்மை எவ்வாறாகும், என்றவாறு.

இதன்பொருள்: மாமரங்களும், கமுகுகளும், வாழைகளும் மாதோட்டத்தில் நெருங்கியுள்ளன. அங்கேயுள்ள திருக்கேதீச்சரம் என்னுந் தலத்திலே நிலையாய்க் கௌரியம்பிகை என்னும் அருட்சத்தியோடு சிவபெருமான் வீற்றிருக்கின்றான். பிரமாவும் விஷ்ணுவும் முறையே அன்னமும் பன்றியுமாய் மேலே பறந்தும் பூமியைக் கிழித்தும் தேடித் தேவரீருடைய முடியையும் அடியையும் கண்டிலர். அவருடைய கடவுள்தன்மை எவ்வாறாகும்.

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர்
புறனுரைச் சமணுதர்
எத்த ராகிநின் றுண்பவ ரியம்பிய
வேழைமை கேளேன் மின்
மத்த யானையை மறுகிடவுரி செய்து
போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபா லாவியின் கரையிற்
கேதீச்சர மடைமின்னே.

பதவுரை: புத்தராய்ச் சில புனைதுகில் உடையவர் — உலகத்தீரே! புத்தசமயிகளாகிய சில தைத்த வஸ்திரங்களை அணிபவரும், புறன் உரை சமணுதர் எத்தர் ஆகி நின்று உண்பவர் — புறங்கூறிப் பலரை வஞ்சித்து நின்று உண்ணும் சமணர்களாகிய மூடர்களும், இயம்பிய ஏழைமை கேளேன் — போதிக்கின்ற அறியாமையாகிய போதனையைக் கேளாதொழியுங்கள், மத்த யானையை மறுகிட உரிசெய்து போர்த்தவர் — மதயானையை அஞ்சும்படி உரித்து அதன் தோலைப் போர்த்த சகத் பிதாவாகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற, மாதோட்டத்தர் மன்னுபாலாவியின் கரையில் கேதீச்சரம் அடைமினே — மாதோட்டத்திலுள்ள பாலாவி என்னும் தீர்த்தக்கரையிலிருக்கின்ற திருக்கேதீச்சரம் என்னும் தலத்தை அடையுங்கள், என்றவாறு.

இதன்பொருள்: உலகத்தவர்களே! புத்தசமயிகளாகிய சில தைத்த வஸ்திரங்களை அணிபவரும், புறங்கூறிப் பலரை வஞ்சித்து நின்று புசிக்கும் சமணர்களாகிய மூடர்களுடன் போதிக்கின்ற அறியாமையாகிய போதனையைக் கேளாதொழியுங்கள். மாதோட்டத்திலுள்ள பாலாவியென்னுந் தீர்த்தக்கரையிலிருக்கின்ற திருக்கேதீச்சரம் என்னும் தலத்தை அடையுங்கள். அங்கே மதயானையை அஞ்சும்படி உரித்து அதன் தோலைப்போர்த்த சகத்பிதாவாகிய சிவபெருமான் வீற்றிருக்கின்றான், அன்பர்களே.

மாடெ லாமண முரசெனக் கடலின
தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை யண்ணல்கே தீச்சரத்
தடிகளை யணிகாழி
நாடு ளார்க் கிறை ஞானசம் பந்தன்சொ
னவின்றெழு பாமாலைப்
பாடலாயின பாடுமின் பத்தர்கள்
பரகதி பெறலாமே. 11

**பதவுரை:** மாடு எலாம் மணமுரசு எனக் கடலினிது ஒலிகவர் மாதோட்டத்து — பக்கங்களிலெல்லாம் மணமுரசைப் போலக் கடலோசை பிறவோசைகளை அடக்கும் மாதோட்டத்திலுள்ள, ஆடல் ஏறு உடை அண்ணல் கேதீச்சரத்து அடிகளை — எருத்தை வாகனமாகவுடைய திருக்கேதீச்சரம் என்னும் தலத்தில் வீற்றிருக்கின்ற, சிவபெருமானுடைய பாதங்களை, அணி காழி நாடுளார்க்கு இறை ஞானசம்பந்தன் சொன்ன — அழகிய சீர்காழிக்குத் தலைவனாகிய ஞானசம்பந்தன் பாடி, இன்று எழுபாமாலை பாடலாயின் பாடுமின் பத்தர்கள் — இப்பதிகத்தையே பக்தர்களே! நீங்கள் பாடுங்கள், பரகதி பெறலாமே — மோட்சத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

**இதன்பொருள்:** பக்கங்களிளெல்லாம் மணமுரசைப்போலக் கடலோசை பிறவோசைகளை அடக்கும் மாதோட்டத்தில் திருக்கேதீச்சரம் இருக்கின்றது. அத்தலத்தில் இடபாரூடராகிய சிவபெருமான் வீற்றிருக்கின்றான். அப்பெருமானைச் சீர்காழித் தலைவனாகிய திருஞானசம்பந்தன் பாடிய இப்பதிகத்தையே பாடுங்கள், அன்பர்களே!.

திருச்சிற்றம்பலம்.

௳

### சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

# திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகம்

## பதிகவரலாறு.

பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் இராமேஸ்வரத்திற்கு வந்தார். இராமேஸ்வரத்தில் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருந்த சுந்தரமூர்த்தி நாயனூர் தொண்டர்கள் வாயிலாக ஈழநாட்டின்கண் இருந்த திருக்கேதீச்சரத்தைப் பற்றிக் கேள்வியுற்றூர். திருக்கேதீச்சரத்துப் பெருமானையும், அப்பெருமான் கோயில்கொண்டருளிய பழம்பதியையும் ஞானக்கண்களால் கண்டு இத் தேவாரத் திருப்பதிகத்தைப் பாடியருளினூர். இதன் கண் மாதோட்ட நகரின் மாண்பும், பாலாவியின் பண்பும் கேதீச்சரத்து இறைவன் பெருமையையும் பேசப்படுகின்றன.

பண் — நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேற்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே. 1

(இ-பொ) நத்து ஆர் படை ஞானன் பசு ஏறி — பாஞ்ச சன்னியம் என்னும் படையாகிய சங்கினை ஏந்திய ஞானியாகிய விஷ்ணு என்னும் இடபத்தில் ஏறினவரும், நனை கவிழ்வாய் மத்தம் மதயானை உரிபோர்த்த மணவாளன் — மதத்தால் நனைந்த தொங்கு கின்ற வாயையுடைய யானையின் தோலைப் போர்த்த நித்திய

கல்யாணரும், (யாரென்றால்) பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல் — அன்பையுடைய அடியார்கள் வணங்குகின்ற பாலாவியென்னும் தீர்த்தக் கரையில், செத்தார் எலும்பு அணிவான் — இறந்தவர்களுடைய எலும்பை மாலையாக அணிந்து வீற்றிருப்பவன், திருக்கேதீச்சரத்தானே — திருக்கேதீச்சரத்தில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானே, என்றவாறு.

(பொ-பு) பாலாவி என்னும் தீர்த்தக்கரையில் திருக்கேதீச்சரம் அமைந்திருக்கின்றது. அங்கே வீற்றிருக்கும் சிவபெருமானை அன்புடைய அடியார்கள் வணங்கித் துதிக்கின்றனர். அப்பெருமான் பாஞ்சசன்னியம் என்னும் சங்கை ஏந்திய ஞானியாகிய விஷ்ணுவென்னும் இடபத்தில் ஏறியுள்ளான். மதத்தால் நனைந்த கதுப்புப் பொருந்திய வாயினையுடைய யானையின் தோலைப் போர்த்து நித்திய கல்யாணனாகத் திகழ்கின்றான். இறந்த விஷ்ணு முதலியோர்களுடைய எலும்பு மாலைகளை மாலையாக அணிந்திருக்கின்றான்.

ஐந்து படைகளாவன: சங்கு, சக்கரம், வில், வாள், தண்டு.

சுடுவார் பொடி நீறுந் நல்ல துண்டப் பிறை கீழும்
கடமார்களி யானையுரி அணிந்த கறைக்கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாவுறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே. 2

(இ-பொ) சுடுஆர் பொடி நீறும் — நன்றாகச் சுட்ட பொடியாகிய திருநீற்றையும், நல்ல துண்டப் பிறை — நல்ல இளம் பிறையினையும், கீழும் — அரையிற் சுற்றிக் கட்டிய ஆடையினையும், கடம் ஆர் களி யானை உரி — மதம் நிறைந்த செருக்கையுடைய யானையின் தோலினையும், அணிந்த கறைக் கண்டன் — அணிந்துள்ள நஞ்சுண்ட கறுத்த நீலகண்டத்தையுடையவர், பட ஏர் இடை மடவாளொடு திடமா உறைகின்றான் — பாம்பின் படத்தைப் போன்ற இடையினையுடைய உமாதேவியாரோடு என்றும் பிரியாதிருப்பார், யாரென்றால், பாலாவியின் கரைமேல் — பாலாவி என்னும் தீர்த்தக் கரையில் அமைந்துள்ள, கேதீச்சரத்தானே — திருக்கேதீச்சரம் என்னும் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே ஆவர்.

(பொ-பு) திருக்கேதீச்சரம் என்னும் புண்ணிய தலம் பாலாவி என்னும் தீர்த்தக் கரையில் அமைந்துள்ளது. அத்தலத்தில் சிவபெருமான் உமாதேவியாரோடு எப்போதும் பிரியாது உறைகின்ருன். அப்பெருமான் விபூதியை அணிந்திருக்கின்ருன். இளம்பிறைச் சந்திரனைச் சூடியிருக்கின்ருன். மதயானையின் தோலினை ஆடையாக அணிந்துள்ளான். நஞ்சு உண்ட கறுத்த நீலகண்டத்தோடு வீற்றிருக்கின்ருன்.

அங்கம் மொழி யன்னுரவ ரமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேற்
செங்கண்ணர வசைத்தான் திருக்கேதீச்சரத் தானே. 3

(இ-பொ) பங்கம் செய்த பிறைசூடினன் — இளம்பிறைச் சந்திரனைத் தனது திருவடியின்கண்ணே அணிந்தருளியவரும், செங்கண் அரவு அசைத்தான் — சிவந்த கண்களையுடைய பாம்பினைத் தமது அரையின்கண்ணே அணிந்தருளியவரும் யாரென்ருல், அங்கம் மொழி அன்ஞர் அவர் — வேத வேதாகமங்களை அறிந்து ஓதுகின்ற அந்தணர்களும், அமரர் — தேவர்களும், ஏத்திட — வணங்கித்துதிக்க, வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில் — தோணிகள் மிகுதியாக நிற்கின்ற கடல் சூழ்ந்த மாதோட்டம் என்னும் நல்ல நகரிலுள்ள, பாலாவியின் கரைமேல் — பாலாவி என்னும் தீர்த்தக் கரையில் இருக்கின்ற, திருக்கேதீச்சரத்தானே — திருக்கேதீச்சரம் என்னும் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே.

(பொ-பு) தோணிகள் மலிந்த கடல் சூழ்ந்த மாதோட்ட நன்னகரில் பாலாவி என்னும் தீர்த்தம் இருக்கின்றது. அந்தப் பாலாவிக் கரையிலுள்ள திருகேதீச்சரம் என்னும் தலத்தில் சிவபெருமான் வீற்றிருக்கின்ருன். அப்பெருமானை தேவ வேதாகமங்களை அறிந்த பிராமணர்களும், தேவர்களும் வணங்கித் துதிக்கின்றனர். இவ்வாறு திருக்கேதீச்சரத்தில் வீற்றிருக்கும் இறைவன் இளம்பிறையைச் சூடியுள்ளான். சிவந்த கண்களையுடைய கொடிய அரவினை அரையில் கச்சையாக அணிந்துள்ளான்.

**செங்கண்ணரவசைத்தான்.**

தாருகாவனத்து முனிவர்கள் தங்கள் மனைவிமாரின் கற்பு நிலையைக்கண்டு தருக்குற்றனர். தெய்வவழிபாட்டிலும், ஒழுக்க

நிலையே மேலானதெனக் கருதினர். தேவர்களின் தருக்கையடக்கச் சிவபெருமான் திருவுளங்கொண்டார். அழகிய பிச்சைத்தேவர் வடிவங்கொண்டு தாருகாவனத்தில் பிச்சை ஏற்றார். அப்போது முனிவர்களின் மனைவியர் அவரின் அழகில் மயங்கினர். தம் கற்புநிலையினின்றும் தவறினர். இதைக்கண்டு முனிவர்கள் சினங்கொண்டு சிவபெருமானை எதிர்த்துப் பெரிய வேள்வியைச் செய்தனர். மந்திர வலிமையினால் புலி, சூலம், மான், பாம்பு, பூதப்படை, வெண்டலை, உடுக்கை, முயலகன் என்பவைகளைச் சிவபெருமான்மேல் ஏவிக் கொல்ல முயன்றனர். அவர்கள் அனுப்பிய யாவும் சிவபெருமானிடம் அடைக்கலமாயின. சிவபெருமான் சிவந்த கண்ணினை உடைய பாம்பை அணியாகக் கொண்டனர்.

கரியகறைக் கண்டன்நல்ல கண்மேலொரு கண்ணன்
வரியசிறை வண்டியாழ்செயும் மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்றிருக் கேதீச்சரத் தானே. 4

(இ-பொ) கரிய கறைக்கண்டன் — நீலநிறமான கண்டத்தையுடையவரும், நல்ல கண்மேல் ஒருகண்ணன் — திருவருள் நோக்கஞ் செய்து உய்யக்கொள்கின்ற சிவந்த கண்மேல் விளங்குகின்ற நெற்றிக் கண்ணையுடையவரும், தெரியும் மறைவல்லான் — அறிஞரால் அறியப்படும் வேதத்தில் வல்லவரும் யார் என்றால், வரியசிறை வண்டு யாழ் செய்யும் — வரிகள் பொருந்திய இறகுகளையுடைய வண்டுகள் யாழ் ஓசையைப்போல இனிமையாகப் பாடுகின்ற, மாதோட்ட நன்னகரில் — மாதோட்டம் என்று சொல்லப்படும் நல்ல நகரத்திலுள்ள, பரிய திரை எறியா வரு பாலாவியின் கரைமேல்—பெரிய திரைகளைவீசிப் பெருகும் பாலாவி என்னும் தீர்த்தக் கரையில் இருக்கின்ற, திருக்கேதீச்சரத்தானே—திருக்கேதீச்சரம் என்னும் தலத்தில் கோயில்கொண்டுள்ள சிவபெருமானே, என்றவாறு.

(பொ-பு) மாதோட்டம் என்னும் நல்ல நகரிலுள்ள சோலைகளில் வண்டுகள் கீதங்களைப் பாடுகின்றன. அந்த மாதோட்ட நகரில் பெரிய திரைகளைவீசிப் பெருகும் பாலாவித் தீர்த்தம் இருக்கிறது. அந்தத் தீர்த்தக் கரையில் அமைந்துள்ள திருக்கேதீச்சரம் என்னும் தலத்தில் சிவபெருமான் வீற்றிருக்கின்றான். அப்பெருமான் நீலகண்டத்தையும், நெற்றிக்கண்ணையும் உடையவன். அறிஞரால் அறியப்படும் வேதத்தில் வல்லவன்.

பூமியை விருத்தி செய்கின்ற கடல்சூழ்ந்த மாதோட்டம் என்று சொல்லப்படுகின்ற நல்ல நகரிலுள்ள, பாலாவியின் கரை மேல் — பாலாவி என்னும் தீர்த்தக்கரையில் அமைந்துள்ள, திருக் கேதீச்சரத்தானே — திருக்கேதீச்சரம் என்னும் தலத்தில், பை ஏர் இடை மடவாளொடு — பாம்பின் படம் போன்ற இடையை உடைய உமாதேவியாரோடு வீற்றிருக்கின்ற, செய்ய சடைமுடியான்—சிவந்த சடாமுடியை உடைய சிவபெருமான்.

(பொ-பு) மாதோட்டம் என்னும் நல்லநகர் பூமியை விருத்தி செய்கின்ற கடலாற் சூழப்பட்டுள்ளது. அந்த நல்ல நகரிற் பாலாவி என்னும் தீர்த்தக்கரையிலே திருக்கேதீச்சரம் என்னும் தலம் அமைந் துள்ளது. அந்தப் புனித தலத்திற் சிவபெருமான் கௌரியம்பாளோடு வீற்றிருக்கின்முன். சிவந்த சடாமுடியை உடைய அப்பெருமான் அன்பு நிறைந்த அடியார்மீது வரும் தீவினைகளை நீக்கி அருள் செய் கின்முன். அடியார்மீது வரும் வினைகளைப் போக்குபவன் அவனே.

ஊனத்துறு நோய்கள்அடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே. 7

(இ-பொ) அடியார்மேல் ஊனத்து உறுநோய்கள் ஒழித்து அருளி — மெய்யடியார்களுக்கு வருகின்ற குற்றம் மிகுந்த கொடிய நோய்களைப் போக்கி அருள் செய்து, வால்நத்து உறு மலியும் கடல் மாதோட்ட நன்னகரில் — வெண்மையான சங்குகள் மிகுந்து நிறைந் துள்ள கடலால் சூழ்ந்த மாதோட்டம் என்று சொல்லப்படுகின்ற நல்ல ஊரிலுள்ள, பாலாவியின் கரைமேல் — பாலாவி என்னும் தீர்த்தக் கரையில் இருக்கும் திருக்கேதீச்சரமென்னும் தலத்தில், ஏனத்து எயிறு அணிந்தான் — பன்றியின் கொம்பை அணிந்தவரும், பால்நத்து மொழியாளொடு — இனிமையான மொழிகளைப் பேசு கின்ற உமையம்மையாருடன் வீற்றிருக்கின்றவருமாகிய, திருக் கேதீச்சரத்தானே — திருக்கேதீச்சரத்துச் சிவபெருமானே! என்றவாறு.

(பொ-பு) வெண்மையான சங்குகள் மிகுந்துள்ள கடலால் சூழ்ந்த மாதோட்டம். அந்த மாதோட்ட நன்னகரில் பாலாவியென்னும்

தீர்த்தம் உளது. அந்தத் தீர்த்தக் கரையில் அமைந்துள்ள திருக்கேதீச்சரம் என்னும் புனித தலத்திலே சிவபெருமான் இனிய மொழியைப் பேசுகின்ற கௌரியம்பாளோடு வீற்றிருக்கின்றான். அப்பெருமான் பன்றிக் கொம்பை அணிந்துள்ளான். அவனே அடியார்மீது வருகின்ற குற்றம் மிகுந்த நோய்களையெல்லாம் நீக்கியருள்பவன்.

ஏனத்தெயிறணிந்தான்.

இரணியாக்கன் என்னும் அசுரன் பூவுலகத்தைத் தனது வயிற்றுள் மறைத்துக்கொண்டு பாதலம் புகுந்தான். அப்போது திருமால் பன்றி வடிவமெடுத்துப் பாதலம் புகுந்து அசுரனைத் தன் கொம்பினால் குத்திக் கொன்று பூவுலகத்தை மீட்டார். தன்வீரச் செயலினாலே தானே பெரியவனெனத் திருமால் கர்வங்கொண்டார். உலகம் உய்தற்பொருட்டுச் சிவபெருமான் தமது திருக்கரத்தாற் பன்றியின் ஒரு கொம்பைப் பிடுங்கித் திருமாலாகிய பன்றியின் கர்வத்தை அடக்கினார். பன்றியும் சிவனென உணர்ந்து பணிந்து நின்றது. சிவபெருமான் அப்பன்றிக் கொம்பைத் தமது மார்பில் அணிந்தார்.

அட்டன்னழ காகஅரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்டநன் னகரிற்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்வமை யாள்நான்திருக் கேதீச்சரத் தானே. 8

(இ-பொ) அட்டன் — அட்டமூர்த்தியாய் உள்ளவரும், அழகாக அரவு அரைதன்மேல் ஆர்த்து — அழகாகத் தமது திரு அரையின்கண் பாம்புக் கச்சையை அணிந்தவரும், சிட்டன் — எல்லோரிலும் மேலானவரும், நம்மை ஆள்வான் — அடியார்களாகிய நம்மை ஆட்கொண்டு அருள் செய்பவரும் யாரென்றால், பட்டவரி நுதலாளொடு — நெற்றிப்பட்டம் என்னும் அழகிய அணியை அணிந்துள்ள கௌரியம்பாளோடு, மட்டுண்டு வண்டாடும் பொழில் — தேனை உண்ட வண்டுகள் சுழன்றுதிரிகின்ற சோலை சூழ்ந்த, மாதோட்ட நன்னகரில் — மாதோட்டம் என்னும் நல்ல ஊரிலுள்ள,

பாலாவியின் கரைமேல் — பாலாவி என்று சொல்லப்படும் தீர்த்தக் கரையிலிருக்கும், திருக்கேதீச்சரத்தானே — திருக்கேதீச்சரத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே என்றவாறு.

(பொ–பு) மாதோட்ட நன்னகரைச் சோலைகள் சூழ்ந்துள்ளன. அந்தச் சோலைகளில் வண்டுகள் தேனை உண்டு களிப்பு மிகுதியால் சுழன்று திரிகின்றன. மாதோட்டத்திலுள்ள பாலாவியென்னும் தீர்த்தக்கரையில் திருக்கேதீச்சரம் என்னும் தலம் அமைந்துள்ளது. அத்தலத்திலே சிவபெருமான் கௌரி என்னும் அருட்சத்தியோடு வீற்றிருக்கின்றான். அப்பெருமான் அட்டமூர்த்தியாய் விளங்குகின்றான். அரையிலே அழகிய பாம்புக் கச்சையை அணிந்துள்ளான். எல்லோரிலும் மேலான அப்பெருமானே நம்மை ஆட்கொண்டு அருள் செய்பவனாவான்.

மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழின் மாதோட்டநன் னகரிற்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவனெனை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே. 9

(இ–பொ) மூவர் என — பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்று சொல்லப்படும் மும்மூர்த்திகளாய் உள்ளவரும், இருவர் என — சிவம், சக்தி என்று சொல்லப்படும் இருவராயுள்ளவரும், முக்கணுடை மூர்த்தி — மூன்று கண்களையுடையவரும், தேவன் — தேவர்களுக்கெல்லாம் தலைவராயுள்ளவரும், எனை ஆள்வான் — என்னை அடிமை கொள்பவரும் யாரென்றால், மாவின் கனிதூங்கும் பொழில் மாதோட்ட நன்னகரில் — மாங்கனிகள் தூங்குகின்ற சோலையாற் சூழப்பட்ட மாதோட்டம் என்று சொல்லப்படும் நல்ல ஊரிலுள்ள, பாவம் வினை அறுப்பார் பயில் — இரு வினைகளையும் ஒழித்து வாழ்கின்ற அடியார் வசிக்கும், பாலாவியின் கரைமேல் — பாலாவி என்னும் தீர்த்தக்கரையிலே அமைந்துள்ள, திருக்கேதீச்சரத்தானே — திருக்கேதீச்சரம் என்னும் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமான், என்றவாறு.

(பொ-பு) மாதோட்ட நன்னகரை, மாங்கனிகள் தொங்கும் மாமரச்சோலை சூழ்ந்திருக்கின்றது. அங்கேயுள்ள பாலாவித் தீர்த்தக் கரையில் இருவினைகளையும் ஒழித்து வாழ்கின்ற அடியார் வாழ்கின்றனர். அப்புனிதமான தீர்த்தக் கரையில் திருக்கேதீச்சரம் என்னும் தலம் அமைந்துள்ளது. அங்கே சிவபெருமான் வீற்றிருக்கின்றான். அப்பெருமானே மும்மூர்த்தியாயும் சிவம், சத்தி என்று கூறப்படும் இருவராயும், முக்கட் கடவுளாயும், தேவனாயும் இருந்து நம்மை ஆட்கொண்டு அருள்செய்கின்றான்.

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச் சரத்தானை
மறையார்புக ழூரன்னடித் தொண்டனுரை செய்த
குறையாத் தமிழ் பத்துஞ் சொல்லக்கூடாகொடு வினையே. 10

(இ-பொ) கறையார் கடல்சூழ்ந்த கழிமாதோட்ட நன்னகருள்— கறுத்து விளங்கும் கடலைச் சூழ்ந்திருக்கின்ற உப்பங்கழிகள் பொருந்திய மாதோட்டம் என்ற நல்ல ஊரிலுள்ள, சிறையார் பொழில் வண்டு யாழ்செயும் — காவல் உடைய சோலைகளில் வண்டுகள் யாழ் ஓசைபோன்ற இனிய கீதங்களைப் பாடும், திருக்கேதீச்சரத்தானை — திருக்கேதீச்சரம் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை, மறையார் புகழ் ஊரன் — வேதங்களை ஓதும் அந்தணர்களால் புகழப்படும் நம்பியாரூரராகிய, அடித்தொண்டன் — திருவடித்தொண்டன், உரைசெய்த குறையாத் தமிழ்பத்தும் சொல்ல — பாடிய குறைவில்லாத திருப்பதிகத்தைப் பாராயணஞ் செய்ய, கொடுவினை கூடா — கொடிய வினைகள் சென்று சேரா, என்பதாம்.

(பொ-பு) மாதோட்டத்தைச் சூழ உப்பங்கழிகள் பொருந்தியுள்ளன. அங்கேயுள்ள சோலைகளில் வண்டுகள் கீதங்களைப் பாடும். இவ்வாறு சிறப்புப் பொருந்திய திருக்கேதீச்சரத்தில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளான். அப்பெருமானை நான்மறைகளும் உணர்ந்த அந்தணர்களால் போற்றப்படும் நம்பியாரூரர் பாடிய குறைவற்ற திருப்பதிகத்தைப் பாராயணஞ் செயகின்றவர்களைத் தீவினைகள் சென்று சேரா.

திருச்சிற்றம்பலம்.

[illegible]

[illegible]

[illegible]